சைவ சித்தாந்தத்தின் முதல் சாத்திரமான திருவுந்தியார் இன் அடிப்படை கிறித்தவமா?

சீர்காழி சிவ. சந்திரசேகரன்



சைவ சித்தாந்த முதல் சாத்திரமான

திருவுந்தியார் - இன்

அடிப்படை கிறித்தவமா?

சைவ சித்தாந்த முதல் சாத்திரமான திருவுந்தியார் - இன் அடிப்படை கிறித்தவமா?

Seerkazhi Siva. chandrasekaran

First Edition: August 2013

Price : Rs.100.00

Meipporul Publishers

278, Konnur High Road,
Ayanpuram, Chennai - 600 023
Tel : 044 - 26743842 , E-Mail: tamilarsamayam2010@gmail.com
Website: www.soulologyofthetamils.com

All Rights Reserved

No part of this publication may be reproduced in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or any information storage and retrieval system without permission in writing from the publisher.

Printed at: Meipporul Achakam
278/242, Konnur High Road,
Ayanpuram, Chennai - 600 023
Tel : 044 - 26741526

with Love
G. T. Pandiththurai
27-8-13

காணிக்கை

இம்மை வாழ்வு எனக்கு அளித்த

திரு **S.R.** சிவசிதம்பரம் பிள்ளை - திருமதி பட்டம்மாள்

இணையருக்கும்

மறுமை வாழ்வு எனக்கு அளிக்கும்,

இறவாத இன்பத்து எனை இருத்தல் வேண்டிப்

பிறந்த பிறவா முதல்வனுக்கும்

இந்நூலை காணிக்கையாகப் படைக்கிறேன்.

நன்றி

மதங்களுக்கு அப்பாற்பட்டு இறைவனின் பிள்ளையாக வாழவும், அனைத்து சமய நூல்களையும் ஒப்பாய்வு செய்து உண்மையை அறியவும் என்னைப் பயிற்றுவித்து, வழிநடத்தும் உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்க நிறுவனர் **முனைவர் மு.தெய்வநாயகம்** அவர்களுக்கும்,

இந்நூல் எழுதப்படுவதற்கு ஊக்கமளித்து, உரிய ஆலோசனைகள் அளித்து, இம்மண்ணுலகப் பணி முடித்து, விண்ணுலகப் பணி ஏற்று சென்றுள்ள **முனைவர் தெ. தேவகலா** அவர்களுக்கும்,

தன்னார்வத்துடன் முன்வந்து இந்நூலை வடிவமைத்து, இறுதி வடிவில் கொண்டுவந்துள்ள **திரு க. தமிழ்ச்செல்வன்** அவர்களுக்கும்,

இந்நூல் வெளிவருவதற்கு உறுதுணையாயிருந்த காரைக்குடி **திரு இராம. பழனியப்பன்** அவர்களுக்கும்,

அனைத்திற்கும் மேலாக, இந்நூலை எழுதி முடிப்பதற்கு எனக்கு அறிவும், ஞானமும், உடல் நலமும் கொடுத்த **மூவொரு கடவுளுக்கும்** என் நன்றி உரித்தாகுக.

-நூலாசிரியர்.

அணிந்துரை

உலகிலுள்ள மதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆதார நூல்களைக் கொண்டு நிலைநின்று வருகின்றன. கிறிஸ்தவத்தின் ஆதாரநூல் பைபிள்; இஸ்லாமின் ஆதாரநூல் குரான். இவற்றைப் போன்று, சைவ சமயத்தின் ஆதார நூல் பன்னிரு திருமுறை. ஒவ்வொரு மதத்திற்கும் மெய்யியல், இறையியல் போன்றவை அவற்றின் ஆதார நூல் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முறைப்படி, சைவ சமயத்தின் இறையியலாக, பன்னிரு திருமுறையின் பிழிவாக சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் விளங்குகின்றன.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் மூல சாத்திரங்களாக விளங்குபவை இரண்டு

1. திருஉந்தியார்
2. சிவஞானபோதம்

மற்ற பன்னிரண்டு சாத்திரங்களும் இந்த மூல சாத்திரங்கள் இரண்டையும் விளக்கும் நூல்களாக விளங்குகின்றன. இதனால், திருஉந்தியாரும், சிவஞானபோதமும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் சிறப்புக்குரிய சாத்திரங்களாக விளங்குகின்றன.

சிவஞானபோதம், இலக்கணம் எழுதப் பயன்படும் சூத்திரங்களால் எழுதப்பட்டு, சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கு அடிப்படை நூலாக விளங்குவதுடன், இந்நூலை எழுதிய மெய்கண்டார் பெயரால் மெய்கண்ட சாத்திரங்கள் என்று பதினான்கு சாத்திரங்களும் அழைக்கப்படுகின்றன.

சிவஞானபோதத்திற்கு முந்திய நூலாக, அனைத்து சைவ சித்தாந்த சாத்திரங்களின் தலைவாசலாக விளங்குவது திருஉந்தியார். சிவஞானபோதம் புரிந்து கொள்ளுவதற்குக் கடினமானது. ஆனால், திருஉந்தியார் சைவ சித்தாந்த சாத்திரங்களின் தலைவாசலாக இருந்து, அதன் உள்ளே நுழைகிறவர்களுக்கு சரியான, சிறந்த வழிகாட்டியாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த முதல் நூலின் முதல் பாடல், கடவுள் மனிதரை மீட்க அருவ நிலையிருந்து உருவ நிலையை ஏற்றதை, அதுவும் தானாக மனிதரைத் தேடி வந்ததை எண்ணிப் பார்த்து, மகிழ்ந்து, துள்ளிக் குதிக்கும் படியாகக் கூறுகிறது.

"அகளமாய் யாரும் அறிவு அரிது, அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீபற
தானாகத் தந்தது என்று உந்தீபற"

திருஉந்தியார் - 1

இந்த நூலைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்துள்ள என்னுடைய அருமை மாணவர் சீர்காழி சிவ. சந்திரசேகரன் அவர்களைப் பாராட்டுகின்றேன். இவர் என்னுடைய ஆய்வுப் பணிகளில் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் எவ்விதப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் முழு நேர மாணவராக விளங்குபவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் இந்த ஆய்வுகளில் தோய்ந்து இருக்கின்றார்.

இது ஒப்பாய்வு நூல் அன்று.
ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவம் வேறு;
தோமா வழித் தமிழர் சமயம் வேறு.

தோமா வழித் தமிழர் சமயம் கி.பி. 1794க்குப் பின்னர் இந்து மதம் என்னும் பெயரால் குறிக்கப்படுகிறது. சைவம், வைணவமாகிய இந்து மதக் கிளைகள் இரண்டில், சைவத்தின் முதல் சாத்திர நூலாகிய திருஉந்தியார் இங்கு ஆராயப்படுகிறது.

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். ஒரு பொருளில் உப்பு இருக்கிறதா என்பதைக் கண்ணால் பார்த்து அறிய முடியாது. அதை சுவைத்துப் பார்த்தால் தான் உப்பின் சுவை தெரியும்.

இதைப் போன்று, மனிதனாக வந்த கடவுளின் மீட்பின் செய்தி திருஉந்தியாரில் விளக்கப்படுகிறது. நாம் வாசல் வழியே உள்ளே சென்று, விருந்தை சுவைப்போம் வாருங்கள். விருந்து படைத்துள்ள சீர்காழி சிவ. சந்திரசேகரன் அவர்களை வாழ்த்துவோம், வாருங்கள்!

முனைவர் மு. தெய்வநாயகம் M.A.,Ph.D.
(உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்க நிறுவனர்)

ஓர் அறிமுகம்

உலகில் உருவாகியுள்ள இறையியல்களில் 'சைவசித்தாந்தம்' தனக்கென ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இது, தமிழ்நாட்டில், தமிழ்மொழியில், தமிழர்களால் உருவாக்கப்பட்டது ஆகும்.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாடு வேற்று நாட்டினரால், வேற்றுமொழியினரால், வேற்று இனத்தினரால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளதால், அரசியல், சமயம், சிந்தனை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றில் தமிழர்கள் தற்சார்பு இழந்து, உள்ளத்தாலும் உடலாலும் வேற்றவர்களுக்கு அடிமையாகி வாழும் அவல நிலையை இன்று நாம் காண்கிறோம்.

தம் முன்னோர் சொத்தான 'பொன்னாலான ஒரு குன்றின்' மேல் உட்கார்ந்துகொண்டு, அதன் சிறப்பை உணர இயலாமல், எந்தச் சிறப்பும் இல்லாத, தன்னைவிட வறியவர்களிடம் தன் அன்றாட உணவிற்கே கையேந்தி வாழும் ஒருவனின் பரிதாப நிலையில்தான் தமிழன் தன் சமய அறிவில் இன்று இருந்து கொண்டிருக்கிறான்.

சித்தாந்த அறிவில் வளராமல், இறைவனைப்பற்றிய முழுமையான தெளிவும், புரிதலுமின்றித் தன்னைத் தாழ்ந்த இனத்தான் என்றும், தன் தாய்மொழியான தமிழ்மொழி இறைவனை வழிபடத் தகுதியற்ற நீச மொழி என்றும், தன் முன்னோர் கோயில்களான தமிழர் சமயக் கோயில்களில் இறைவனைப் பூசிக்கத் தான் தகுதியற்றவன் என்றும் தன்னைக் கேவலப்படுத்தி, நசுக்கும் வேற்று இன சமயத் தலைவர்கள் கற்பித்த சில சடங்குகளுக்கும், ஆசாரங்களுக்கும், புராணக் கதைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அவற்றைக் கைக்கொண்டு, தன்னை நசுக்குபவர்களுக்கு அடிமையாய் வாழ்வதில் சுகம்காணும் அறியாமை நிலையில் தமிழன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

எனவே, தமிழர்கள் அனைவரும் சமய வேறுபாடு இல்லாமல், சைவ சித்தாந்த உண்மைகளில் தெளிவுபெறும் நோக்கில் இந்த எளிய உரை வெளிவருகின்றது. இந்நூலில் ஏதேனும் சிறப்புகளைக்

காண்பீர்களானால் இத்தகைய ஆராய்ச்சிக்கு வித்திட்டு, சுமார் நாற்பது ஆண்டுகாலம் முன்னர் தொடங்கி இன்றுவரைத் தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வருபவரும், என்னை இத்தகையை சிந்தனைப் போக்கிற்குப் பயிற்றுவித்து, தொடர்ந்து வழி நடத்தி வருபவருமான உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்க நிறுவனர் முனைவர் மு. தெய்வநாயகம் M.A..,Ph.D., அவர்களையே அவை சாரும். குற்றங் குறைகள் இருப்பின் அவை என்னையே சாரும். வாசகர்கள் அருள் கூர்ந்து மன்னிக்க வேண்டுகிறேன்.

- நூலாசிரியர்

உயிர் – ஆன்மா வேறுபாடுகள்

இந்நூலின் பல இடங்களில் உயிர் - ஆன்மா என்ற சொற்கள் வந்துள்ளன. இன்றைய சைவ சித்தாந்திகள் பலரது உள்ளங்களில் உயிர் - ஆன்மா ஆகிய இரண்டு சொற்களும் ஒரு பொருளிலேயே ஆளப்படுகின்றன என்ற எண்ணம் உண்டு. மற்ற சமயத்தினர் பெரும்பான்மையினர்க்கும் இந்த எண்ணமே மேலோங்கியுள்ளது.

உயிர் வேறு; ஆன்மா வேறு என்று சிலர் நினைத்தாலும் இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகள் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ள இயலாமல் தாங்களும் குழம்புவர்; மற்றவர்களையும் குழப்புவர்.

வேறு சிலருக்கு இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகள் தெளிவாகத் தெரிந்திருந்தாலும், ஆன்மா - உயிர் என்ற இரண்டு சொற்களையும் ஆங்காங்கே ஒன்றன் இடத்தில் மற்றொன்றைத் திட்டமிட்டேப் பயன்படுத்தி, படிப்போர் உள்ளங்களில் குழப்பத்தை உண்டாக்குவர். ஏனென்றால், இதன் அடிப்படையில்தான் பிறவிச் சுழற்சிக் கொள்கை என்னும் பல்பிறவிக் கொள்கையைச் சமய நம்பிக்கையில் புகுத்தி, பிறப்பால் கற்பிக்கப்படும் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையைக் காலம் காலமாக நிலைநாட்டி, சக மனிதர்களை அடிமைப்படுத்தி, அவர்களை விலங்குகளிலும் கீழாக நடத்தி வருகின்றனர்.

உயிர்		ஆன்மா
1	அனைத்து உயிரினங்களுக்கும் உண்டு.	மனித இனத்திற்கு மட்டுமே உண்டு.
2	ஐயறிவு செயல்படுவதற்குக் காரணமாயிருப்பது.	ஆறாவது அறிவு செயல்படுவதற்குக் காரணமாயிருப்பது.
3	இயல்பூக்கப் பகுத்தறிவுக்குக் காரணமாயிருப்பது.	ஆன்மீகப் பகுத்தறிவுக்குக் காரணமாயிருப்பது.
4	அறிவுக்கு (Knowledge) உரியது.	ஞானத்திற்கு (Wisdom) உரியது.
5	புற ஒளியை மட்டும் அறிவது.	அக ஒளியையும் அறிவது.
6	உயிரினங்களின் உடலை அழியாமல் பாதுகாப்பது.	உயிரினங்களை ஆளுவதற்குக் காரணமாயிருப்பது.

- முனைவர் மு. தெய்வநாயகம்

உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் சமயமும், தமிழர் ஆன்மவியலும். பக் - 47

எனவே, "உயிர்" என்னும் சொல் மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களையும் குறிக்கிறது என்பதையும், ஆன்மா, ஆன்மாக்கள் என்னும் சொற்கள் தனிமனிதன் மற்றும் மனித இனத்தை மட்டுமே குறிக்கின்றன என்பதையும் கவனத்தில் கொண்டு இந்நூலைப் படிக்க வேண்டுகிறேன்.

ஆன்மா மனிதனுக்கு மட்டுமே உண்டு

துன்புறுத்தப்பட்டனர். பிறவிச் சுழற்சிக் கொள்கையின் அடிப்படையில் அச்செயல்களுக்கு நியாயம் கற்பிக்கப்படும் நிலையும் உருவானது.

இக்காலத்தில் தோன்றிய சித்தர்கள் எனப்படும் சமுதாயச் சிந்தனை கொண்ட இறைஞானிகள் இக்கொள்கையைக் கடுமையாகக் கண்டித்துச் சாடியுள்ளனர்.

எடுத்துக்காட்டு:

கறந்த பால் முலைப்புகா, கடைந்த வெண்ணெய் மோர்ப்புகா;
உடைந்துபோன சங்கினோசை உயிர்களும் உடற்புகா;
விரிந்த பூ உதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா;
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே.

- சிவவாக்கியார்.45

எனவே கடவுட் கோட்பாட்டிற்கும், பிறவிச் சுழற்சிக் கோட்பாட்டிற்கும் சிறிதும் தொடர்பில்லை என்று நாம் தெளியலாம்.

சமயங்களின் அடிப்படை உண்மைகள்:

ஆத்திக சமயங்கள் அனைத்தின் அடிப்படை உண்மைகளாக விளங்குபவை

1. உடல் 2. உயிர் 3. ஆன்மா 4. கடவுள் 5. ஆணவம் என்ற ஐந்து ஆகும்.

இந்த ஐந்தையும் விளக்கிக் காட்டும் முயற்சியின் விளைவாக எழுந்துள்ள சைவ சித்தாந்தத்தின் மணிமுடியாகக் கருதப்படும் 'சிவஞான போதம்' என்னும் நூல் தமிழ் மொழிக்குக் கிடைத்துள்ள அரிய செல்வமாகும்.

ஆன்மா – கடவுள் – ஆணவம்:

ஆன்மா பசு என்றும்,
கடவுள் பதி என்றும்,
ஆணவம் முதலியவை பாசம் என்றும் சைவ சித்தாந்தத்தில் குறிக்கப்படுகின்றன.

1. பசு 2. பதி 3. பாசம் என விளக்கப்படும் மூன்றும்

1. உடல் 2. உயிர் 3. ஆன்மா 4. கடவுள் 5. ஆணவம் என ஐந்தாக விரிகின்றன.

(ஏனென்றால் பசு எனப்படும் ஆன்மாவை உடைய மனிதன் உடல், உயிர், ஆன்மா என்ற மூன்று பகுதிகள் உடையவனாக இருக்கின்றான்.)

மேற்கண்ட ஐந்தும்:

1. சிற்றுடல் 2. சிற்றுயிர் 3. சிற்றான்மா 4. பேருடல் 5. பேருயிர் 6. பேரான்மா 7. ஆணவம் என ஏழாக விரிகின்றன.

(ஏனென்றால் மனிதனின் பகுதிகள் சிற்றுடல், சிற்றுயிர், சிற்றான்மா என்ற மூன்றாகவும், கடவுளின் பகுதிகள் பேருடல், பேருயிர், பேரான்மா என்ற மூன்றாகவும் விரித்துச் சொல்லப்படுகின்றன.)

அறிவியல் – மெய்யியல் – இறையியல் – ஆன்மவியல்

உடலைப் பற்றிய அறிவின் வளர்ச்சி - அறிவியல் (Science)
உயிரைப் பற்றிய அறிவின் வளர்ச்சி - மெய்யியல் (Philosophy)
கடவுளைப் பற்றிய சிந்தனையின் வளர்ச்சி - இறையியல் (Theology)

இந்த மூன்றின் வளர்ச்சிக்கும் இந்த மூன்றைப் பற்றிச் சிந்திப்பதற்கும் காரணமாக இருப்பது மனிதனின் ஆறாவது அறிவு ஆகும். மனிதனின் ஆறாவது அறிவுக்குக் காரணமாகிய 'உள்ளம்' எனும் 'ஆன்மா'வைப் பற்றிய கல்வியின் வளர்ச்சி ஆன்மவியல் (Soulology)ஆகும்.

'ஆன்மவியல்' தமிழ் நாட்டில், தமிழ்மொழியில் மட்டுமே உருவாகி வளர்ந்துள்ளது. உலகின் வேறு எந்த மொழியிலும் ஆன்மவியல் பற்றிய கல்வி வளர்ச்சி பெறவில்லை. கிறித்தவத்தின் திருமறையான விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் கிறித்துநாதர் போதனையில் 'உடல் - உயிர் - ஆன்மா' பற்றிய தெளிவான விளக்கங்கள் இருந்தபோதிலும், கீழைநாட்டு நூலான விவிலியம் மேலைநாட்டு ஐரோப்பியர் பிடியில் இருந்ததாலும், ஐரோப்பியர்களுக்கு உயிர், ஆன்மாவைப் பற்றிய வேறுபாடுகள் சரிவரத் தெரியாத காரணத்தாலும், கிறித்தவத் திருச்சபைப் போதனைகள் ஐரோப்பிய சிந்தனையின் அடிப்படையில் இருப்பதாலும், கிறித்தவத் திருச்சபைகளிலும் ஆன்மா - உயிர் பற்றிய தெளிவு இன்றும் முழுமையாகக் காணப்படவில்லை.

- முனைவர் மு. தெய்வநாயகம்

உடல் – உயிர் – ஆன்மா

உயிரற்ற பொருட்களுக்கு உடல் மட்டுமே உண்டு. ஓரறிவு முதல் ஐயறிவு வரையிலான உயிரினங்கள் அனைத்தும் உடல், உயிர் ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளன.

ஆனால், மனிதனுக்கு மட்டுமே உடல், உயிர் ஆகிய இரண்டு பகுதிகளுடன், மனிதனுக்கே சிறப்பாக உள்ள ஆறாவது அறிவுக்குக் காரணமான ஆன்மா உள்ளது.

நாத்திக சமயங்கள்:

உடல், உயிர் ஆகிய இரண்டை மட்டுமே அறிந்து, ஆன்மாவை அறியாத நிலையில் நாத்திக சமயங்களாக, கிறித்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இந்தியாவில் எழுந்தவை சமணம், பௌத்தம் என்ற இரண்டும் ஆகும். இவ்விரண்டு சமயங்களிலும் கடவுள் கோட்பாட்டிற்கு இடமில்லை.

இவற்றில் சமணம் கடவுள் இருப்பை மறுக்கும் சமயம் (Atheistic Religion) ஆகும். பௌத்தம் கடவுளை அறியாத சமயம் (Agnostic Religion) ஆகும்.

ஆத்திக சமயங்கள்:

கிறித்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில் தமிழகத்தில் உருவாகி வளர்ந்த பக்தி இயக்கத்தின் பயனாக, ஒரே அடிமரத்திலிருந்து வளரும் இரு கிளைகளாக சைவமும், வைணவமும் தமிழகத்தில் வளர்ந்து, வடக்கு நோக்கி இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் பரவின.

சைவமும், வைணவமும் முழு முதற் கடவுட் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஆத்திக சமயங்களாகும். கடவுட் கோட்பாட்டில் பிறவிச் சுழற்சிக் கோட்பாட்டிற்கு சிறிதும் இடமில்லை.

சைவ, வைணவ சமயங்களில் பிறவிச் சுழற்சிக் கோட்பாட்டு நம்பிக்கை எப்படி வந்தது?

தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமய, அரசியல் மாற்றங்களினால் சமண, பௌத்த சமயம் சார்ந்த மக்கள் சைவ, வைணவ சமயங்களில் திரளாகச் சேர்ந்தனர். இந்நிலையில் அவர்களின் சமயக் கோட்பாடான பிறவிச் சுழற்சிக் கொள்கையும் சைவ, வைணவ சமயங்களில் புகலாயிற்று. எனவே, சைவ, வைணவ சமய மக்கள் கடவுட் கோட்பாட்டுடன், அதற்குச் சிறிதும் தொடர்பில்லாத பிறவிச் சுழற்சிக் கோட்பாட்டிலும் நம்பிக்கை வைக்கலானார்கள். பிறவிச் சுழற்சிக் கோட்பாடு தொடர்புடைய விளக்கங்கள் சைவ, வைணவ சமய சாத்திர நூல்களிலும், தோத்திர நூல்களிலும் மெல்ல மெல்ல இடம்பெறலாயின.

இதற்கு ஆதாரம் என்ன?

திருக்குறள்

சமண, பௌத்த சமயங்கள் தோன்றி, மக்கள் நடுவில் செல்வாக்கு பெற்ற காலத்திற்குப் பிற்பட்டதும், பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் உருவாகி, இந்தியா முழுவதும் பரவி, மக்கள் நடுவில் செல்வாக்கு பெற்ற காலத்திற்கு முற்பட்டதுமான இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் உருவான உலகப் பொதுமறையாம் திருக்குறளில் பிறவிச் சுழற்சிக் கொள்கை பற்றிய கருத்து இல்லை என்பது சிந்திக்கத்தக்கது.

திருக்குறளில் வரும் எழுமை, எழுபிறப்பு, பிறப்பறுக்கல், பிறவிப் பெருங்கடல் முதலிய தொடர்கள் பல் பிறவி/பிறவிச் சுழற்சிக் கொள்கையைக் குறிப்பிடுவன அல்ல. அத்தகைய கருத்துகள் பிற்கால உரையாசிரியர்களால் வலிந்தும், அறியாமையின் காரணமாகவும், அவர்கள் காலத்தில் பரவி இருந்த சமய, சமுதாயக் கொள்கைகளின் அடிப்படையிலும் எழுதப்பட்டனவையே அன்றி, மூலநூலாசிரியரின் கருத்து அல்ல. இத் தொடர்களுக்கான சரியான விளக்கங்களை உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்க நிறுவனர் முனைவர் மு.தெய்வநாயகம் அவர்கள் எழுதியுள்ள திருக்குறள் ஆய்வு நூல்களைப் படித்து அறியலாம்.

சைவ, வைணவ சமயங்களில் பிறவிச் சுழற்சிக் கோட்பாடு பற்றிய விளக்கங்கள் தாறுமாறாக இடம்பெற்று, இதனால் உருவாக்கப்பட்ட ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை அடிப்படையில் சமுதாயத்தில் அடித்தட்டு மக்கள் கடவுள் பெயரால் நசுக்கப்பட்டுத்

(பல்வேறு இடங்களில் கூறியுள்ள கருத்துகளின் சுருக்கம்). ‘சிவஞான போதம்’ நீங்கலான மற்ற சைவ சித்தாந்த சாத்திரங்களில் பல இடங்களில் உயிர், ஆன்மா பற்றிய சொல்லாட்சி ஒன்றில் மற்றொன்று மாறி மாறிக் கலந்தே வருகிறது.

மெய்யியலா — இறையியலா?

தென்னிந்தியாவில் உருவான அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் ஆகிய மூன்றும் இந்திய மெய்யியல் என்று பொதுவாகக் கூறப்படுகின்றன. ஆனால் சற்றுக் கவனித்து நோக்கினால் இம் மூன்றும் மெய்யியல் என்னும் நிலையைத் தாண்டி, இறையியல் பற்றியவை என்று புரியலாம்.

சைவ சித்தாந்தம்:

அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் எனும் இம்மூன்றை விட, சமயங்களைப் பற்றிய ஐந்து அடி ப்படை உண்மைகளான

1. உடல் 2. உயிர் 3. ஆன்மா 4. கடவுள் 5. ஆணவம் பற்றி சிறப்பாகவும், தெளிவாகவும் விளக்குவது தமிழ்நாட்டில், தமிழ்மொழியில், தமிழர்களால் உருவாக்கப்பட்டுள்ள சைவ சித்தாந்தமே ஆகும்.

தோத்திரம் — சாத்திரம்:

சைவ சமய நூல்களைத் தோத்திர நூல்கள், சாத்திர நூல்கள் என இரு பெரும் பகுப்புகளாகப் பிரிக்கலாம். சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகள் இறைவனைப் போற்றி, புகழ்ந்து, வியந்து பாடும் பாடல்களைக் கொண்டிருப்பதால், இவை தோத்திர நூல்கள் அல்லது புகழ் நூல்கள் என்று கூறப்படுகின்றன.

திருமுறைகளில் இருந்து பிழிந்து எடுக்கப்பட்ட சாரமே சாத்திரம்ஆகும். இது இறைவன், ஆன்மா, ஆன்மாவைப் பிணித்திருக்கும் ஆணவமாகிய தளைகள், இப்பேரண்டம், அது உருவாக்கப்பட்ட முறை, ஆன்ம விடுதலை பற்றிய செய்திகளைக் கொண்டிருப்பதால் சாத்திர நூல்கள் அல்லது பொருள் நூல்கள் என்று கூறப்படுகின்றன.

மெய்கண்ட சாத்திரம்:

சாத்திர நூல்களை **"சைவ சித்தாந்த சாத்திரம்"** என்றும், **"மெய்கண்ட சாத்திரம்"** என்றும் வழங்குவர். இவை சைவ சித்தாந்த மெய்மைகளைக் கூறுவதாலும், மெய்ப்பொருள் உண்மையைக் கூறுவதாலும், சைவசித்தாந்த சாத்திரங்களின் மணிமுடியாகத் திகழும் சிவஞான போதத்தை இயற்றிய மெய்கண்டார் பெயராலும் "மெய்கண்ட சாத்திரம்" என்று வழங்கப்படுகின்றன. இவை பதினான்கு நூல்களாகும்.

அவை யாவை?

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கின் மணிமுடியாகத் திகழ்வது சிவஞானபோதம் ஆகும். சிவஞான போதத்தின் உரை நூல் சிவஞான சித்தியார். இது சிவஞான போதத்தின் வழி நூலாகக் கொள்ளப்படுகிறது. இதன் பின்னர் தோன்றியது சிவப்பிரகாசம். இது சிவஞான போதத்தின் சார்பு நூலாகக் கொள்ளப்படுகிறது. இம்மூன்றும் தவிர, இருபா இருப.ஃ.து, உண்மை விளக்கம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் ப.ஃ.றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி மற்றும் சங்கற்ப நிராகரணம் ஆகிய ஒன்பது நூல்களும் சிவஞான போதத்தை ஒட்டி எழுந்தவை ஆகும்.

திருஉந்தியார் – திருக்களிற்றுப்படியார்:

பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களில், திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இரண்டும் சைவ சித்தாந்த சாத்திரங்களின் மணிமுடியாகத் திகழும் சிவஞான போத நூலுக்குக் காலத்தால் முற்பட்டவை ஆகும். ஆயினும் இவை இரண்டும் சாத்திர நூல்களில் வைக்கப்பட்டு, சாத்திர நூல்கள் பதினான்காக எண்ணப்படும். இவ்விரு நூல்களும் தோத்திர காலமாகிய பக்தி இயக்கக் காலத்திற்கும், முறைப்படுத்தப்பட்ட சாத்திர நூல்கள் காலத்திற்கும் இடைபபட்ட காலத் தமிழகத்தின் சைவசமய மரபுகளை நமக்கு அறிவிக்கும் அரிய நூல்களாகும்.

சைவ சித்தாந்தக் கருத்து:

பசு என்னும் ஆன்மா, தன்னைப் பிணித்திருக்கும் ஆணவம் போன்ற பாசத்தளைகளிலிருந்து நீங்கி, பதியாகிய இறைவனை அடைய வழி நடத்தப்படுவதே சைவ சித்தாந்த சாத்திரத்தின்

மையக் கருத்தாகும். சற்று ஆராய்ந்து பார்த்தால், அனைத்து ஆத்திக சமயங்களின் உட்கருத்தும் இதுவாகவேக் காணப்படும்.

பசு, பதி, பாசம் குறித்த உண்மைகளையும், பசு தன்னைப் பிணித்திருக்கும் பாசங்கள் நீங்கப்பெற்று, தன்னைப் படைத்த பதியாகிய இறைவனை அடையும் வழியையும் எடுத்துக் காட்டுகளோடும், முறைப்படுத்தியும் கூறுபவை மெய்கண்ட சாத்திர நூல்கள் ஆகும்.

விவிலியம் — திருக்குறள் — சைவ சித்தாந்தம்

திருக்குறள் மீது டாக்டர் பட்டத்திற்கான ஆய்வு செய்த திருமிகு. தி.சு.சத்தியம் அவர்கள் தமது பி.எச்.டி. ஆய்வேட்டில் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.

"...இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்குறளின் உட்கிடக்கை சைவ சித்தாந்தமே என்று எழுந்த ஆய்வுப் போக்கு, இன்றைய காலகட்டத்தில் கிறித்தவமே குறளின் உட்கிடக்கை என்ற கருத்துப் போக்கைப் பெற்று முடிந்துள்ளது." - தி.சு.சத்தியம்.

(இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சி 1979. பக் 192-193 இந்தியா தோமாவழி திராவிடக் கிறிஸ்தவநாடே.... பக் 16-17)

திருக்குறளின் உட்கிடக்கை சைவ சித்தாந்தமே என்ற கருத்து எழும்பி, கிறித்தவமே குறளின் உட்கிடக்கை என்ற கருத்துப் போக்கைப் பெற்று ஆய்வு முடிந்துள்ளதால், சைவ சித்தாந்தத்திற்கும், கிறித்தவத்திற்கும் ஏதோ ஒருவகையில் கருத்தொற்றுமையும், தொடர்பும் இருக்க வேண்டுமல்லவா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய கிறித்தவத்திற்கும், ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சைவ சித்தாந்த - மெய்கண்ட சாத்திரங்களுக்கும் கருத்தொற்றுமையும், தொடர்பும் இருத்தல் இயலாத ஒன்று என்றோ, பொருந்தாத ஒன்று என்றோ கூறித் தள்ளிவிட முடியாது.

- "விவிலியம் - திருக்குறள் - சைவ சித்தாந்தம் - ஒப்பாய்வு" என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர்பட்ட ஆய்வேடு அளித்து, முனைவர்பட்டம் பெற்ற முனைவர் மு.தெய்வநாயகம் அவர்களின் ஆய்வேட்டின் கருத்தை மேலோட்டமாகக் காண்போம்.

◆ "விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் இம்மூன்றையும் ஒப்பிட்டு ஆயும்பொழுது இவைகளுக்கு இடையே மொழி, பண்பாடு இவற்றால் வேற்றுமைகள் காணப்படினும், அடிப்படைச் சமயக் கொள்கையளவில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன."

◆ "விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் இவை மூன்றிற்கும் புலால் மறுத்தல், பிறவிச் சுழற்றிக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாமை ஆகிய இவற்றில் கருத்தொற்றுமை உண்டு."

◆ "உலகப்படைப்பு, வீழ்ச்சி, கடவுள் குருவாதல், தவத்தினில் உணர்த்தல், மீட்பு, அடியார் திருக்கூட்டம், முக்தி போன்ற சமய அடிப்படை உண்மைகள்" மூன்றுடனும் ஒப்பிட்டுப் பார்க்கப்(பட்டு ஒற்றுமைகள் காணப்)படுகின்றன."

◆ "யூத, கிறித்தவ சமயங்களின் அடிப்படையில் தமிழகத்தில் எழுந்த இயக்கமே பக்தி இயக்கம் ஆகும்."

◆ "பக்தி இயக்கத்தின் பயனாகத் தோன்றிய தமிழ்ச் சமயங்களாகிய சைவமும், வைணவமும் ஆரிய வைதீகத்திலிருந்து எழுந்த சமயங்கள் அல்ல."

◆ "ஆதிக் கிறித்தவத்தின் அடிப்படையிலெழுந்த திராவிடச் சான்றோர்களாகிய சைவசித்தாந்த நூலாசிரியர்களும், சித்தர்களும் ஆரிய வைதீகத்தை எதிர்த்தமையால் இழிவுபடுத்தப்பட்டுள்ளனர்."

◆ "திருக்குறளால் உந்தப்பட்ட பக்தி இயக்கத்தின் கனிகளாக விளங்குபவை சைவ, வைணவ சமயங்கள்." "சைவம் உருவாக்கிய பன்னிரு திருமுறைகளும், சித்தாந்த சாத்திரங்களும் வேற்றுக் கொள்கையினரால் ஊடுருவப்பட்டுள்ளன. சைவத்தை உருவாக்கியவர்கள் வேற்று மக்களால் கீழாக நோக்கப்பட்டுள்ளனர்."

- விவிலியம், திருக்குறள், சைவசித்தாந்தம் - ஒப்பாய்வு

முன்னுரை : முனைவர் மு. தெய்வநாயகம்.

மேலும், மேலைநாட்டினரும், கிறித்தவத் திருத்தொண்டரும், ஆழ்ந்த தமிழ்ப்புலமையும், தமிழார்வமும் பெற்றிருந்தவருமான டாக்டர் ஜி.யூ.போப் அவர்களின் சைவசித்தாந்தம் பற்றிய கருத்தைக் காண்போம்.

“சைவ சித்தாந்தம் என்னும் கொள்கை மிகவும் விரிந்தது; மிக்க செல்வாக்கு கொண்டது; இந்திய நாட்டின் சமயக் கொள்கைகள் எல்லாவற்றுள்ளும் நுட்பமும், திட்பமும் கொண்டது. இது தென்னிந்தியாவிற்கே உரிய தமிழ்க்கொள்கை ஆகும். திராவிடப் பேரறிவின் தன்னிகரில்லா விளைவே சைவசித்தாந்தம்.”

மெய்கண்ட சாத்திரம் - மூலமும் உரையும். பக்.3

வர்த்தமானன் பதிப்பகம்.

மேலே நாம் கண்ட அறிஞர்களின் கூற்றுப்படி,

“சைவ சித்தாந்தம் ஆரியத்துடன் தொடர்புடையதன்று; மேலும், கிறித்தவத்திற்கும், சைவசித்தாந்தத்திற்கும் நெருங்கிய தொடர்பும், ஒற்றுமையும் காணப்படுகின்றன. இவ்விரண்டிற்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு” என அறியலாம்.

எனவே இந்நூலைப் படிப்பவர்கள் நடுநிலை நோக்கோடு மதமாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டு, ஆராய்ச்சிக் கண்கொண்டு உண்மையை நோக்கி நாம் செல்ல வேண்டும் என்னும் ஒரே நோக்கோடு தெளிவான முடிவுக்கு வரும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

திருஉந்தியார்

இயற்றியவர் : திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்.

காலம் : கி.பி.13ஆம் நூற்றாண்டுக்கு முன் (தேவார-திருவாசக காலத்திற்குப் பிற்பட்டது. சிவஞான போத காலத்திற்கு முற்பட்டது)

அமைப்புமுறை : 45 தாழிசைப் பாடல்கள்.

இறைவனைப் பற்றிய உண்மைகளையும், இறைவனுடைய உயர்வையும், மேன்மையையும், இறைவனை அடையும் வழியையும் இரண்டு பெண்கள் விளையாடிக் கொண்டே அறிவித்துப்பாடும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

உந்துதல் - குதித்தல்

பறத்தல் - மேலே எழும்புதல்

கால்கள் இரண்டாலும் உந்திக்கொண்டு, கைகளால் பறப்பதுபோல் பாவனை செய்யும் பெண்கள் விளையாட்டு.

ஒரு பெண் ஒரு கருத்தைச் சொல்லி "உந்தீபற" என்கிறாள். மற்றபெண் அக்கருத்தை ஒட்டியோ, அதற்கு ஒப்பாகவோ, அதற்கு விளக்கமாகவோ கருத்து ஒன்றைக் கூறித் தானும் 'உந்தீபற' என்கிறாள்.

'உந்தீபற' என்பதற்கு
'உந்தீ - பற' என்றும்,

"உமது தீமைகள் எல்லாம் பறக்கட்டும்" என்றும் (தீ = தீமைகள்)

"உள் + தீ + பற = உள்ளத்தில் பக்திக்கனல் பறக்கட்டும் (தீ = கனல் - பக்திக்கனல்) என்றும் பல்வேறு வகைகளாகப் பொருள் கூறுவர். இறைவனைப் பற்றிய உண்மைகளைக் கூறுவதால், திரு,ஆர் என்னும் அடைமொழிகளை முன், பின் இணைத்து "திரு + உந்தி + ஆர் - திருஉந்தியார்" என்று இந்நூல் வழங்கப்படுகிறது.

"உலகியல் இன்பங்களில் கட்டப்பட்டிருக்கும் ஆன்மா தன் கட்டுகள் அகன்று, தன்னைப் படைத்த இறைவனை அடையும்படி "உந்தி, எழும்பி, மேல் நோக்கிப் பறக்கவேண்டும்" என்று அடையாளமாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

நாயகியும் — நாயகியும்

(இறைவனின் திருவருள் சக்தியும், இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட ஆன்மாவும்)

சைவம் இறைவனின் திருவருள் சக்தியைப் பெண்ணாகவும், இறைவனின் நாயகியாகவும் உருவகிக்கின்றது. இறைவனின் திருவருள் சக்திக்குக் கீழ்க்காணும் ஐந்து பெயர்கள் திருஉந்தியாரில் கொடுக்கப்பட்டுள்ளன.

	பாடல் எண்
கிழவி (உரிமை உடையவள்)	**14**
ஒருமகள்	**19**
அம்பிகை	**21**
பிரமக்கிழத்தி	**34**
மடவாள்	**44**

சைவ சித்தாந்தத்தில் ஆன்மாவும் பல இடங்களில் பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டுள்ளதும், ஆன்மாவின் நாயகனாக இறைவன் உருவகப்படுத்தப்பட்டுள்ளதும் நோக்கத்தக்கதும் நினைத்து இன்புறத்தக்கதும் ஆகும்.

இறைவனின் திருவருளை கிறித்தவத் திருமறையான திருவிவிலியம் "இறைவனின் ஆவியார்" - "தூய ஆவியார்" என்று கூறுகிறது. ஆவி என்பதற்கான எபிரேயச் சொல்லான ரூவா (ruah) என்பதன் விகுதி 'பெண்பால் சொல்' என்று கூறப்படுவதும் இங்கு நோக்கத் தக்கது ஆகும். விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில், மனிதனாக வந்த இறைவன் (இயேசு கிறித்து) மணவாளன் என்றும், அவரால் ஆட்கொள்ளப்படும் ஆன்மாக்கள் நிறைந்த திருச்சபை அவருடைய மணவாட்டி என்றும் குறிக்கப்படுவதும் நோக்கத்தக்கவை ஆகும்.

இயல்பாகவே மலத்தால் (பாவத்தால்) கட்டப்பட்டிருக்கும் ஆன்மாவுக்குத் தானாக இறைவனை உணரக்கூடிய ஆற்றல் இல்லை என்பதும், இறைவனின் நாயகியாக உருவகிக்கப்படும்

இறைவனின் திருவருள்சக்தி, இறைவன் தன் நாயகியாக ஏற்றுக் கொள்ளப்போகும் ஆன்மாக்களுக்கு உணர்த்த, அவை உணர்ந்து, தங்கள் மலக்கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, தன்னையும் உணர்ந்து, தன் தலைவனாகிய இறைவனையும் உணர, அவர் தன்னைத் தந்து அவற்றை ஆட்கொள்ள, அவை அவரது நாயகி ஆவதும் நினைவில் கொள்ளத்தக்கவை ஆகும்.

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி - மாணிக்க வாசகர்

திருவாசகம் - சிவபுராணம்.

உணர்த்த உணர்தலின் - மெய்கண்டார்

சிவஞான போதம் -3

என்னும் கூற்றுகள் மேல்சொல்லப்பட்ட கருத்துகளை உறுதிப்படுத்துகின்றன.

"சைவ சித்தாந்தத்தில் இறைவனின் திருவருள்சக்தி பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று, கிறித்தவத் திருமறையான விவிலியத்தில் மூவொரு கடவுளில் ஒருவரான "தூய ஆவியானவருக்கு" மூலமொழியான எபிரேயத்தில் பெண்பால் விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது."

"சைவத்தில் ஆன்மாக்களின் நாயகனாக இறைவன் காட்டப்பட்டுள்ளதைப்போன்று, கிறித்தவத்திலும் ஆன்மாக்களாகிய மணமகளின் நாயகனாக- மணமகனாக மனிதனாக வந்த இறைவனாகிய இயேசு கிறித்து காட்டப்படுகிறார்."

"சிவனடியார்களான நாவுக்கரசர், மாணிக்கவாசகர், இராமலிங்க வள்ளலார் போன்றோர் தங்களை மணமகளாகவும், இறைவனைத் தங்கள் மணமகனாகவும் நினைத்துப் பாடியுள்ளனர்."

சைவசித்தாந்தமும் இன்றைய சைவ சித்தாந்திகளும்:

சைவ சித்தாந்தத்தின் மணிமுடியாகத் திகழும் நூல் "சிவஞான போதம் " ஆகும். சிவஞான போதத்தின் உரையாகவும், வழி நூலாகவும், சார்பு நூலாகவும, அதன் கருத்தை ஒட்டியும், விளக்கமாகவும் மற்ற சைவசித்தாந்த சாத்திர நூல்கள் எழுந்துள்ளன என்று கண்டோம்.

எனவே, சைவசித்தாந்தம் பற்றி ஏதேனும் ஐயம் எழுந்தால், அதற்கு இறுதித் தீர்ப்பு கொடுப்பதற்கு ஆதாரமாய்

எடுத்துக்கொள்ளப்படவேண்டிய நூல் சிவஞான போதமே ஆகும். சிவஞானபோத கருத்துக்கு முரண்படாத வகையில் உள்ள மற்ற சாத்திர நூல்களின் கருத்துகள் எடுத்துக்கொள்ளப்படலாம். இதன் அடிப்படையில் தான் நாம் சைவசித்தாந்தத்தை நோக்க வேண்டும்.

இன்றைய சைவ சித்தாந்திகளின் சில கருத்துகள், சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் கருத்துகளுக்கு முரண்படுகின்றன.

எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டை நோக்குவோம்.

1. "அருவநிலையில் உள்ள இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு உருவநிலையில் எழுந்தருளும் போது, அவர் பூமியில் மனிதனாக அவதரித்தார் என்று சில சமயங்கள் ஒத்துக் கொள்கின்றன.ஆனால், சிவபெருமான் திருமேனி தாங்கி எழுந்தருளுவார் என்று சைவ சமயம் கூறுமே தவிர, அவர் கருமேனி கொண்டு பிறப்பார் (அதாவது, ஒரு மனிதத் தாயின் கருவில் தோன்றி, பிறப்பார்) என்பதை ஏற்றுக் கொள்வதில்லை" என்பது இன்றைய சைவ சித்தாந்திகள் பலரின் கருத்து ஆகும். இதற்கான விளக்கத்தை நாம் சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றான 'போற்றிப் ப·றொடையிலிருந்தே காணலாம்.

   இறவாத இன்பத்து எமையிருத்த வேண்டிப்
   பிறவா முதல்வன் பிறந்து...

   - போற்றிப்ப·றொடை 69

2. இறைவன் மனிதஉடல் எடுத்துவராமல், உடல்போன்ற தோற்றத்தில் அருள்உருவாகக் காட்சியளித்தார் என்றும் சைவ சித்தாந்திகள் சிலர் கூறுவர். இதற்கான விளக்கத்தை 'சங்கற்ப நிராகரணம்' என்னும் சைவசித்தாந்த சாத்திர நூலில் காணலாம்.

   மாயா ஒருவன் மாயா உருவினை
   ஏயான் ஏய்ந்தவர் எம்ம னோரே.

   - சைவ வாதி சங்கற்ப நிராகரணம் 26-27

"என்றும் அழியாத அருள் உருவம் உடைய இறைவன் மீண்டும் அது போன்றதோர் உருவினை எடுப்பதற்கு என்ன தேவை உண்டு? அப்படி எடுத்தவர் எம்மைப் போன்ற மனித உருவையே எடுத்தார்."

3. பசுவாகிய ஆன்மா அநாதிகாலமே ஆணவ மலத்தால் பிணிக்கப்பட்டுள்ளது என்பதும், அது மலம் இல்லாதிருந்த நிலையே ஒருக்காலும் இருந்ததில்லை என்பதும், சைவ சித்தாந்திகளில் ஒரு பகுதியினர் கருத்து ஆகும்.

இதற்கான விளக்கத்தை சித்தாந்த சாத்திரங்களான திருஉந்தியார் - திருக்களிற்றுப்படியார் நூல்களில் இருந்து காணலாம்.

"முத்தி முதற்கொடிக்கு மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற

- திருஉந்தியார் - 41

"முத்தி முதற்கொடிக்கு மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது...

திருக்களிற்றுப்படியார் - 93

இந்த இரண்டு பாடல்களில் இருந்தும் முதல் கொடியாகிய முதல் மனிதன் இறைவனால் படைக்கப்பட்ட போது முத்தி நிலையில் இருந்ததையும், பின்பு அவனில், மோகக்கொடி படர்ந்ததையும் பற்றிய உண்மையைத் தெளிவாக அறியலாம்.

"முன்வினை" என்பதும், "வினைத்தொடர்பு" என்பதும், "மூலமலம்" என்பதும், முத்தி முதல்கொடியாகிய முதல் மனிதனுக்கு மோகக்கொடி படர்ந்த பின், அவன் வழியாக அவனது வழித்தோன்றல்களுக்குத் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் மோகக்கொடியின் விளைவே தவிர, சிலர் கூறுவது போல் பிறவிச் சுழற்சிக் கொள்கை அடிப்படையிலான முன் பிறவிவினை அல்ல.

4. 'பசு' - ஆன்மா - அநாதியானது என்பதும் சைவ சித்தாந்திகளின் கருத்து ஆகும், இதற்கான விளக்கத்தை மேற்கண்ட பாடல்களிலேயே நாம் காணலாம்.

முத்தி முதற்கொடிக்கு...

திருஉந்தியார் - 41

திருக்களிற்றுப்படியார் - 93

'முதற்கொடி' என்று முதல் மனிதன் குறிப்பிடப்பட்டதிலிருந்தே, அவன் அநாதிகாலமாய் உள்ளவன் அல்லன் என்பதும், அவனுடைய ஆன்மா ஏதோ ஒரு காலத்தில் இறைவனால் படைக்கப்பட்டது என்பதும் தெளிவாகிறது.

நூல் அமைப்புமுறை

திருஉந்தியாரில் உள்ள 45 பாடல்கள் ஒவ்வொன்றாக சொற்பொருள் - பதவுரை - கருத்துரை - விளக்கவுரை என்னும் வரிசையில் கொடுக்கப்படுகிறது.

மேலும், சைவசித்தாந்தமும் கிறித்தவமும் கொண்டுள்ள ஒத்தக் கருத்தினால், கிறித்தவத் திருமறையான விவிலியத்திலிருந்து இக்கருத்துக் தொடர்புடைய சில பகுதிகள் இவற்றுடன் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன. **மேற்கோள் காட்டப்பட்டுள்ள விவிலியப் பகுதிகளில் ஆங்காங்கே அடைப்புக் குறியுள் கொடுக்கப்பட்டுள்ளவை சைவ சமய இறையியலான சைவ சித்தாந்தத்தையும், கிறித்தவ சமயத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தெளிவடையும் நோக்கில் கொடுக்கப்பட்டுள்ளவையே அன்றி, இவை விவிலியத்தின் மூலத்தில் இல்லை என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது ஆகும்.**

திருஉந்தியார் — கருத்துச் சுருக்கம்

1. உலகின் முதல்மனிதன் பாவமற்ற நிலையில் படைக்கப்பட்டான்.

முத்தி முதல்கொடி ... பாடல் 41

2. பின்பு, முதல் மனிதனில் தோன்றிய ஆணவத்தால் பாவ (மல)ம் அவனை மேற்கொண்டது.

மோகக் கொடி படர்ந்து அத்தி பழுத்தது .... பாடல் 41.

3. மனிதனின் பாவ(மல) நிலையைப் போக்கி, முன்னிருந்த முத்தி நிலையில் மீண்டும் அவனை நிறுத்த, உருவமற்ற அருவக்கடவுள் மனித உருவம் தாங்கி வந்தார்.

அகளமாய் யாரும் அறிவு அரிது,

அப்பொருள் சகளமாய் வந்தது .... பாடல் 1.

4. மனித உருவத்தில் வந்த கடவுளைப் பாவ மனிதன் தன் முயற்சியினாலோ - தன்னறிவினாலோ அடைய முடியாது. எனவே, கடவுள் மனிதனைத் தானே தேடி வந்தார்.

தானாகத் தந்தது .... பாடல் 1

சேர வந்தவர் .... பாடல் 44

5. மனிதனாக வந்த கடவுள் தன்னையேப் பலியாகத் தந்து, தனது மரணத்தின் மூலம் முழுமனித இனத்தையும் பாவத்திலிருந்து தடுத்தாட்கொண்டார்.

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர் .... பாடல் 3

தவத்தில் தலைவர் ... பாடல் 12.

6. எனவே, அவர் மீண்டும் மனிதஉடல் எடுத்து (அவதாரமாக) வரமாட்டார்; வரவேண்டிய தேவையுமில்லை.

பிண்டத்தில் வாரார்... பாடல் 3.

7. ஆகையால், இனி அவருக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை.

பிறப்பு இறப்பு இல்லை... பாடல் 3.

8. ஒருவராக உள்ள அருவக்கடவுள், மனிதனைத்தடுத்தாட்கொள்ள, மனித உருவத்தில் வந்த கடவுள், கடவுளின் திருவருட் சக்தி எனத் தானே மூவரானார்.

ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்.... பாடல் 5.

9. ஆன்மாவைத் தடுத்தாட் கொண்ட கடவுள், அந்த ஆன்மாவின் மணமகனாகவும் ஆகிறார்.

நாதனும் ஆனான் ... பாடல் 5.

10. நமது ஆன்ம மணமகனாக அவர் ஆவதற்கு நம் " தன் முயற்சி" பயன்படாது.

நம் செயல் அற்று, இந்த நாம் அற்றபின்,

நாதன் தன்செயல் தானே.... பாடல் 6.

11. கடவுள் நம் ஆன்ம மணமகனாவதற்கு நாம் உள்ளம் உருக வேண்டும்.

உள்ளம் உருகில் உடன் ஆவர்... பாடல் 7

12. நாம் உள்ளம் உருகும் போது, நாம் நினைப்பதற்குமுன் அவர் நம்மை வந்து சேர்வார்.

கருதுவதன் முன் கருத்து அழியப் பாயும் .... பாடல் 19.

13. இல்லை என்றால், கடவுளை நாம் அறியமுடியாது.

தெள்ள அரியர் ... பாடல் 7

14. கடவுளால் தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மா, கடவுள் அருளால் தன் முக்தி நிலை ஆகிய உயர்நிலையை மீண்டும் அடைகிறது..

மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர் ... பாடல் 12

15. கடவுளால் தடுத்தாட்கொள்ளப்பட்டு, தன் முத்தி நிலையை மீண்டும் அடைந்தவர்கள் அதுவரை தாங்கள் ஈடுபட்டு வந்த உலகியல் இன்பங்களில் இருந்து விடுபடல் வேண்டும்..

பழக்கம் தவிர பழகுவது அன்றி

உழப்புவது என் .... பாடல் 2

16. கடவுள் தடுத்தாட்கொள்ளும்போது ஆன்மா பெறும் இன்பம் சொல்லிற்கு அடங்காதது.

இங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன் ....

அறியும் அறிவு அது அன்று .... பாடல் 4

17. அருவக் கடவுளைத் தேடி அடைய எண்ணி, மனிதனாக வந்த கடவுளை "இவர் நம்மைப்போன்ற ஒரு மனிதர் தானே" என்று தவறாக எண்ணி, அவரை ஏற்றுக் கொள்ளாமல் கைவிட்டவர்கள் பித்துப் பிடித்தவர்கள் ஆவர்.

வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர் பித்து ஏறினார்கள்

.... பாடல் 28.

18. கடவுளின் பிள்ளைகளாக நாம் இருக்க வேண்டுமே தவிர, எந்த மதத்தின் பிள்ளைகளாக இருப்பதும் நமக்கு எவ்விதப் பயனையும் தராது.

சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்று ஆவி அறாதே ....பாடல் 31.

19. கடவுளின் பிள்ளைகள் உடலால் வரும் சிற்றின்பமாகிய கள்ளை உண்டு மயங்காமல், இறைவன் திருவடிகளைப் பற்றிக் கொள்வதால் வரும் பேரின்பமாகிய இறை ஞானத் தேனை உண்ணுவர்.

காயத்துள் மெய்ஞானக்கள் உண்ணமாட்டாதே மாயக்கள் உண்டார் ....

வறட்டுப் பசுக்கள் .... பாடல் 43.

20. ஆன்மாக்கள் உய்வடைவதற்காக மனித உருவில் வந்த கடவுளின் அருள் உரையைக் கேட்டு, அதனைப் பின்பற்றி நடப்பவர்கள் உண்மை உணர்ந்தவர் ஆவர்.

உய்யவந்தான் உரை....

உண்மை உணர்ந்தார்.... பாடல் 45.

பொருளடக்கம்

1. உருவத்தில் வந்த இறைவன் 1
2. உலகியல் இன்பங்களில் உழலாதே 4
3. தம் மரணத்தினால் 8
4. விவரிக்க இயலாத இன்பம் 15
5. ஒருவராகவும் பல(மூவ)ராகவும் 18
6. தன்னையே தந்த இறைவன் 23
7. உள்ளம் உருகில்...,தெள்ள அரியர் 27
8. உள்ளத்தால் வழிபடுதல் 30
9. இறைவன் இருப்பது எங்கே? 34
10. இறைவனைக் காண 37
11. நோக்காமல் நோக்க 40
12. தவத்தில் தலைவர் 43
13. சிற்றறிவினால் தேடாதே 47
14. திருவருள் சத்தியைப் பெறுதல் 50
15. திருவடிப்பற்று 55
16. தாழ்மணிநாவு 58
17. ஆம் - ஓம் - ஆமென் 61
18. மருள் - தெருள் - அருள் 64
19. உன்ன அரியன் 67
20. இன்பவெளி 70
21. எல்லாம் ஆன இறைவன் 74
22. உண்மையான ஆற்றல் 77
23. கள்ளரும், இல்லம் உடையவரும் 80
24. இவ்வுலகே இறை உலகு ஆகும் 84

25. ஒத்ததும் ஒவ்வாததும்........87
26. அமுத ஊற்று........91
27. அறிவுடன் நின்றால் அல்லல் அவிழும்........94
28. மனித உருவில் வந்த இறைவனை
ஏற்றுக் கொள்ளாதவர்கள் பித்தர்களே........98
29. இறைவன் இருப்பது எங்கே?........102
30. இல்லறமும் துறவறமும்........105
31. மதவெறி தவிர்ப்பீர்; இறைவனை நாடுவீர்!........109
32. தாமரை இலைத் தண்ணீர்........114
33. நிலையற்றது நிலையானதாகும்........117
34. அம்மையப்பர்........121
35. பெண்களும் பேய்களும்........124
36. உயிர்க்காற்றும் இறைவாக்கும்........128
37. நீ செயல் செய்யாதே........133
38. பொற்கொழுக் கொண்டு........136
39. சிற்றறிவு - முற்றறிவு........139
40. அவன் இவன் ஆனான்; இறைவன் மனிதரானார்........142
41. முத்திக் கொடியில் மோகக் கொடி........146
42. படைப்பு மாயை - படைத்தவரே சத்யம்........149
43. ஆனந்தத் தேன்........152
44. சேரவந்தவர் வாழ்க........155
45. உய்யவந்தான் உரை........158
46. முடிவுரை........162

திருஉந்தியார்
மூலமும்
உரையும்

உருவத்தில் வந்த இறைவன்

1. அகளமாய் யாரும் அறிவுஅரிது, அப்பொருள்
சகளமாய் வந்ததுஎன்று உந்தீபற
தானாகத் தந்ததுஎன்று உந்தீபற.

சொற்பொருள் :

களம் = உருவம்

அகளம் = அ + களம் = உருவமற்றநிலை - அருவநிலை

எனவே இறைவனாகிய அவருக்கு முதலும், நடுவும், முடிவும் இல்லை. மேலும், மனதிற்கும் சொல்லிற்கும் எட்டாதவர் பரம்பொருள்.

சகளம் = ச + களம் = தெளிவான உருவம் - ஆன்மாக்கள் தன்னைக் காணும்படி உருவத்தோடு வந்த இறைவன் - உருவநிலை.

பதவுரை :

அகளமாய் யாரும் அறிவு அரிது = இறைவன் உருவம் அற்றவர். எனவே யாராலும் அவரை அறியமுடியாது. ஆகவே,

அப்பொருள் சகளமாய் வந்தது = அப்பரம்பொருள், அனைவரும் தன்னை அறியும்படியாகத் தெளிவான உருவத்துடன் வந்தார்.

தானாகத் தந்தது = அப்படி உருவத்துடன் வந்த இறைவனை நாமாகத் தேடிச் சென்றடைய முடியாது. எனவே, அவர் தானாகவே தம்மைத் தேடிவந்து, நமக்காகத் தன்னையேத் தந்தார்.

கருத்துரை :

இறைவன் உருவம் அற்றவர்; எனவே யாராலும் அவரை அறியமுடியாது. ஆகவே, அப்பரம்பொருள் ஆன்மாக்கள் தன்னை அறியும்படியாகத் தெளிவான உருவத்துடன் இம்மண்ணுலகில் வந்தார். அப்படி வந்த இறைவனை ஆன்மாக்கள் தாமாகத் தேடிச்

சென்றடைய முடியாது. எனவே, அவர் தானாகவே ஆன்மாக்களைத் தேடி வந்தார். மேலும் ஆன்மாக்களுக்காக அவர் தன்னையேத் தந்தார்.

விளக்கவுரை :

உருவமற்ற இறைவன், ஆன்மாக்கள் தன்னைக் காணும்படியாக உருவத்துடன் இம் மண்ணுலகில் வந்தபோது, மனிதனாகப் பிறந்து வந்தார் என்பதை சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் ஒன்றான போற்றிப்ப∴றொடை கீழ்க்காணுமாறு கூறுகிறது.

இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து .... (வந்தார்)

- போற்றிப்ப∴றொடை - 69.

அப்படி உருவத்துடன் பிறந்து வந்த இறைவன் தானாகவே ஆன்மாக்களைத் தேடிவந்து, தன்னையே ஆன்மாக்களுக்காகத் தந்தார்.

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி. - போற்றித் திருஅகவல்

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி. - சிவபுராணம்

தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு

அருள்செய்தான். திருஏசறவு10-திருவாசகம்-மாணிக்கவாசகர்

விவிலிய ஒப்பு:

அகளம் சகளத்தில்

தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது; அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது; வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடி கொண்டார். - யோவான் 1: 1,14

மானிடராய் அவர் வெளிப்படுத்தப் பட்டார். - 1 தீமோத்தேயு 3: 16

(அருவக்) கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும் விளங்கும் (இம்மண்ணுலகில் பிறந்து வந்த) இவர் தம் வல்லமை மிக்க சொல்லால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார். - எபிரேயர் 1 : 3

(அருவக்) கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை, தந்தையின் நெஞ்சகத்திற்கு நெருக்கமானவரும், கடவுள் தன்மை

கொண்டவருமான (சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்த கடவுளாகிய) ஒரே மகனே அவரை வெளிப்படுத்தினார். - யோவான் 1 : 18

தானாகத் தந்தது:

இதோ, (மனிதனாக இம்மண்ணுலகில் பிறந்து வந்த கடவுளாகிய) நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன்: அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள். - திருவெளிப்பாடு 3 : 20

(ஆன்மாக்களாகிய) நீங்கள் (உருவத்தில் வந்த இறைவனின்) அந்த அருளாலே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது (ஆன்மாக்களாகிய) உங்களின் செயல் அல்ல: மாறாக இது (அகளமாய் யாரும் அறிவரிதாகிய) இறைவனின் கொடை. - எபேசியர் 2 : 8

(ஆன்மாக்களாகிய) நீங்கள் (சகளமாய் வந்த இறைவனாகிய) என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். - யோவான் 15 : 16

உலகியல் இன்பங்களில் உழலாதே

2. பழக்கம் தவிரப் பழகுவது அன்றி
உழப்புவது என்பெணே உந்தீபற
ஒருபொரு ளாலேஎன்று உந்தீபற.

சொற்பொருள் :

பழக்கம = தன்னையும், தன் தலைவனாகிய இறைவனையும் உணர்ந்து கொள்ளாமல், உலகியல் பொருள்களில் நாட்டம் கொண்டு அவையே நிலையானவை என்று கருதி நடந்துவருகிற ஆன்மாவின் செயல்.

பழக்கம் தவிர்தல் = உலகியல் பொருள்கள் நிலையற்றன என்று உணர்ந்தும், இறைவன் வழங்கும் பேரின்பமே நிலையானது என்று தெளிந்தும், இதுவரை நாட்டம் கொண்ட உலகப் பற்றுகளை ஒழித்து, இறைவனின் திருவருள் சக்தியின் சார்பில் நிற்கப் பழகுதல்.

உழப்புவது = குழப்புதல், மழுப்புதல், கிடைத்தற்கரிய திருவருள் இன்பம் கிட்டிய பின்பும், அதனை ஏற்று, அதுகாட்டும் வழியில் நடந்து, நிலையான பேரின்பத்தை அடைய முயற்சிக்காமல், முந்தைய உலகியல் வாசனைகளால் அலைக்கழிக்கப்படுதல்; காலங்கடத்துதல்.

பெணே = பெண்ணே - ஆன்மாவே - ஆன்மா இங்கு பெண்ணாக உருவகிக்கப்படுகிறது. ஏனெனில் அது தன் தலைவனாகிய இறைவனைச் சென்று சேரவேண்டும்.

ஒரு பொருள் = ஒப்புயர்வற்ற தனிப்பொருளான இறைவனின் திருவருள் சக்தியின் துணை.

பதவுரை :

பெணே = பெண்ணே! (ஆன்மாவே)

பழக்கம் தவிர = உலகியல் பொருள்கள் நிலையற்றவை என்று உணர்ந்தும், இறைவன் வழங்கும் பேரின்பமே நிலையானது என்று தெளிந்தும், இதுவரை நாட்டம் கொண்ட உலகியல் பற்றுகளை ஒழித்து,

பழகுவது அன்றி = இறைவனின் திருவருள் சார்பில் நிற்கப் பழகுதல் அல்லாமல்

உழப்புவது என்? = முந்தைய உலகியல் வாசனைகளால் நீ அலைக்கழிக்கப்படுவது என்ன?

ஒரு பொருளாலே = ஒப்புயர்வற்ற தனிப்பொருளான இறைவனின் (திருவருள் சக்தியின்) துணையாலேயே முந்தைய உலகியல் வாசனைகளால் அலைக்கழிக்கப்படுதல் தவிரும்.

கருத்துரை :

(ஆன்மாவாகிய) பெண்ணே! உலகியல் பொருள்கள் நிலையற்றன என்று உணர்ந்தும், இறைவன் வழங்கும் பேரின்பமே நிலையானது என்று தெளிந்தும், இதுவரை நாட்டம் கொண்ட உலகப் பற்றுகளை ஒழித்து, இறைவனின் திருவருள் வழிகாட்டலில் நிற்கப் பழகுதல் அல்லாமல், முந்தைய உலகியல் வாசனைகளால் நீ அலைக்கழிக்கப்படுவது என்ன? ஒப்புயர்வற்ற தனிப்பொருளான இறைவனின் (திருவருள் சக்தியின்) துணையாலேயே இது தவிரும்.

விளக்கவுரை :

நெடுநாள் பழகிய பழக்கம் நீங்குவதற்கு உறுதுணையாய் நிற்பது "ஒரு பொருள்" என்று இப்பாடல் கூறுகிறது.

இந்த ஒருபொருள் - ஒப்புயர்வற்ற தனிப்பொருளான இறைவனின் திருவருள் சக்தி என்றும், (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய) இறைவனே (சகளமாய்) சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்து உரைத்த உபதேசம் என்றும் பொருள்கொள்ளப்படுகின்றன.

இந்நிகழ்வைத் திருவள்ளுவர் தம் திருக்குறளில் கீழ்க் காணுமாறு தெளிவுபடுத்திக் கூறுகிறார்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு - குறள் 5

இறைவன் பொருள்சேர் என்று வள்ளுவர் கூறும் இறைவன் சேர்த்த பொருள் என்ன?

அடுத்த குறட்பாவில் இதற்கான பதிலைத் தருகிறார் வள்ளுவர்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார்.- குறள் 6

(சகளமாய் வந்த இறைவன் பொறிவாயில் தம்மையே (அவிப்பொருளாக ஈந்து) அவித்து சேர்த்த பொருள்).

இறைவன் மனிதனாக இம்மண்ணுலகில் வந்து, தம்மையே (பலியாக)க் கொடுத்து, ஆன்மாக்களுக்காகச் சேர்த்த மீட்பு - தடுத்தாட்கொள்ளுதல் என்னும் பொருள். இறைவன் ஈட்டியுள்ள மீட்பு என்னும் பொருளாலேயே ஆன்மாக்களுக்கு வீடுபேறு கிடைக்கும்.

விவிலிய ஒப்பு:

உழப்புவது என்?

"எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு"; ஆனால் எல்லாம் நன்மை தரக்கூடியவையல்ல. - 1 கொரிந்தியர் 6 : 12

தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடங்கொடுக்க வேண்டாம். (பொறிவாயில் ஐந்தவித்த இறைவனாகிய) இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்." - உரோமையர் 13 : 14

....ஆன்மாவை எதிர்த்துப் போர் புரியும் ஊனியல்பின் இச்சைகளை விட்டுவிடும்படி வேண்டிக்கொள்கிறேன். ...நன்னடத்தை உடையவராய் இருங்கள். - 1 பேதுரு 2 : 11, 12

"உலகின் மீதும், அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவோரிடம் (அகளக் கடவுளாகிய) தந்தையின்பால் அன்பு இராது. ஏனெனில் உலகு சார்ந்தவையான உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு ஆகியவை தந்தையிடமிருந்து வருபவை அல்ல. அவை உலகத்திலிருந்தே வருபவை. உலகம் மறைந்து போகிறது; அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பர்." - 1 யோவான் 2 : 15 - 17

"உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள்." - 1 பேதுரு 1 : 15

ஒரு பொருளாலே...

"உண்மையை வெளிப்படுத்தும் (இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவியார் வரும்போது அவர் முழுஉண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்... " யோவான் 16 : 13

...தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். உள்ளங்களைத் துருவி ஆராயும் கடவுள் தூய ஆவியாரின் மனநிலையை அறிவார். தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் (தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களாகிய) இறைமக்களுக்காகப் பரிந்து பேசுகிறார். மேலும், கடவுளிடம் அன்பு கூருபவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார். - உரோமையர் 8 : 26, 27, 29

கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள். தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம். - கலாத்தியர் 5 : 24,25

"...ஒருவர் தாம் விதைப்பதையே அறுவடை செய்வார். தம் ஊனியல்பாகிய நிலத்தில் விதைப்போர் அந்த இயல்பிலிருந்து அழிவையே அறுவடை செய்வர். ஆவிக்குரிய வாழ்வாகிய நிலத்தில் விதைப்போர் அந்த ஆவி அருளும் நிலை வாழ்வை அறுவடை செய்வர்." - கலாத்தியர் 6 : 7, 8

தம் மரணத்தினால்...

3. கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாரார்என்று உந்தீபற
பிறப்புஇறப்பு இல்லைஎன்று உந்தீபற.

சொற்பொருள் :

கண்டம் = பேராபத்து ; துண்டம் ; குறைக்கப்பட்டது.
அகண்டம் = முழுமை, பிளவின்மை,
அகண்டாகாரம் - பகுக்கப்படாத வடிவம்.
கருமம் = செயல், கடமை.
பிண்டம் = உடல்.

பதவுரை :

கண்டத்தைக் கொண்டு = (தம்) மரணத்தைக் கொண்டு
கருமம் முடித்தவர் = தமக்கு கொடுக்கப்பட்ட (அல்லது) தாம் மேற்கொண்ட கடமையைச் செய்து முடித்தவர்
பிண்டத்தில் வாரார் = மனித உடலில் மீண்டும் வரமாட்டார்.
பிறப்பு, இறப்பு இல்லை = அவருக்கு இனிப் பிறப்பும் கிடையாது, இறப்பும் கிடையாது.

கருத்துரை :

தமக்குக் கொடுக்கப்பட்ட கடமையைத் தம் மரணத்தின் மூலம் நிறைவேற்றியவர், மீண்டும் மனித உடல் எடுத்து இம்மண்ணுலகிற்கு வரவேண்டிய தேவையில்லை. எனவே, இனி அவருக்குப் பிறப்பும் இல்லை, மரணமும் இல்லை.

விளக்கவுரை :

மனிதனாகப் பிறந்து, நம்மைத் தேடிவந்த இறைவன் தமது மரணத்தின் மூலம், தாம் இம்மண்ணுலகில் பிறந்து வந்த நோக்கத்தை - அதாவது ஆன்மாக்களாகிய நம்மை இறவாத இன்பத்தில் இருத்துதலாகிய கடமையைச் செய்து முடித்துவிட்டார். எனவே அவர் மீண்டும் மீண்டும் மனித உடலில் (அவதாரம் எடுத்து) வரவேண்டிய தேவையில்லை. அதனால் அவருக்கு இனி பிறப்பும், இறப்பும் இல்லை.

சைவசித்தாந்தம் கூறும் இக்கருத்தை நாம் தக்க சான்றுகளின்வழி காண்போம்.

1. இறைவன் பிறந்து வந்தாரா?

ஆம்.

பிறவா முதல்வன் பிறந்து .... - போற்றிப் ப∴றொடை 69

2. "பிறவா யாக்கைப் பெரியோன்" என்னும் தொடரால் முழுமுதற் கடவுளான சிவனைக் குறிக்கும் போது, இது எப்படி நடைபெறக் கூடும்?.

"பிறவா யாக்கைப் பெரியோன்" என்னும் தொடர் இறைவனைக் குறிக்கவில்லை. மனித இனத்தின் தலைமகனான, எல்லாருக்கும் மூத்த குடிமகனான, முதல் மனிதனையே இத்தொடர் குறிக்கிறது. ஏனென்றால் அவன் மனிதப் பெற்றோரால் பெற்றெடுக்கப்பட்டிருக்க முடியாது. இறைவனால் படைக்கப் பட்டவனாகத்தான் இருக்க வேண்டும் என்பது இறைநம்பிக்கையாளர்களின் கருத்து.

எனவே, அவனுக்கு 'பிறந்த யாக்கை' இருத்தல் இயலாத ஒன்று ஆகும். எனவே, பிறவாயாக்கைப் பெரியோன் என்னும் தொடர், மனிதப்பெற்றோருக்குப் பிறக்காமல், இறைவனால் படைக்கப்பட்ட முதல் மனிதனையேக் குறிக்கிறது.

இவனை " ஆதாம் " என்று விவிலியமும்
" ஆதம் " என்று குரானும் குறிக்கின்றன.

முதல் மனித இனம் வாழ்ந்ததாக ஆய்வாளர்களால் கூறப்படும் குமரிக் கண்டத்தைச் சார்ந்த நம் தமிழ்நாட்டில் **நெடுஞ்சேரலாதன் பெருஞ்சோற்று உதயஞ் சேரலாதன்** போன்ற அரசர் பெயர்களும், ஆதனூர் போன்ற இடத்தின் பெயர்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

தமிழ்நாட்டில் ஆந்தையார் என்ற பெயரில் புலவர் ஒருவர் இருந்ததை அறிவோம்.

ஆந்தை + ஆர் (சிறப்பு விகுதி) = ஆந்தையார். ஆந்தை என்பதனைத் தமிழ் இலக்கண விதிகளின்படி பிரித்தால் 'ஆதன் + தந்தை' என விரியும்.

அதாவது, (முதல் மனிதனாகிய) ஆதனின் தந்தை எனப் பொருள் கொடுக்கிறது.

முதல் மனிதன், மனிதப் பெற்றோருக்குப் பிறந்திருத்தல் இயலாது என்பதும், அவனைக் கடவுளே படைத்திருத்தல் கூடும் என்பதும் இறைநம்பிக்கையாளர் கருத்து என்று நாம் கண்டோம்.

எனவே ஆந்தையார் என்ற பெயர் முதல் மனிதனைப் படைத்த முழு முதற் கடவுளையேக் குறிக்கிறது. கிறித்தவ வேதமான விவிலியமும் இக் கருத்தையே வெளிப்படுத்துகிறது.

"...ஆதாம் தேவனால் உண்டானவன்" - லூக்கா 3:38.

3. அப்படியானால், **"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்"** என்று குறிப்பிடுவது உலகில் முதல் மனிதனை வணங்கிய செயலைத் தானே குறிப்பிடுகிறது. இது சமய நம்பிக்கை, இறைநம்பிக்கைக்குப் பொருந்துமா?

வழிபாடு என்பது வேறு; சமயம் என்பது வேறு என்ற தெளிவு இருந்தால் இக்கேள்விக்கான விடையைக் காணமுடியும். பயம், நன்றியுணர்வு என்ற இரண்டு தலைப்புகளில் வழிபாடுகள் அடங்குகின்றன.

வழிபாட்டில் நான்கு வகைகள் உள்ளன

1. இயற்கை வழிபாடு
2. உயிரின வழிபாடு
3. மனித வழிபாடு
4. குலதெய்வ வழிபாடு

தம் முன்னோர், அரசன், போரில் வீரமரணம் அடைந்தோர் ஆகியோர்களை நன்றியுணர்வின் காரணமாக மக்கள் வழிபட்டனர்; வழிபடுகின்றனர். இது மனித வழிபாடு ஆகும்.

மனித இனத்தின் முன்னோனான ஆதனை, அவன் வழித் தோன்றல்களாகிய மனிதர் நன்றியுணர்வின் காரணமாக வழிபட்ட செயல்தான் **"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்"** தோற்றத்திற்குக் காரணமாகும். எனவே, இக்கோயில் முழுமுதற் கடவுளான சிவனுக்கு உரிய கோயில் அல்ல என்ற தெளிவு நமக்கு வேண்டும்.

4. இறைவன் மனிதனாகப் பிறந்து வரவேண்டிய தேவை என்ன?

இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து... - போற்றிப் ப∴றொடை 69.

ஆன்மாக்களாகிய மனிதர்களை, அவர்களை விட்டு அகலாமல் என்றுமே நிலைத்திருக்கக் கூடிய 'இறவாத இன்பத்தில் இருத்துவதற்காக, இறைவன் மனிதனாகப் பிறந்து வந்தார்.

5. இச்செயலை இறைவன் எப்படிச் செய்து முடித்தார்?

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தார். கண்டம் என்ற சொல்லிற்குப் பேராபத்து, மரணம் என்ற பொருள்களைப் பார்த்தோம். மனிதனாகப் பிறந்து வந்த இறைவன், தன் மரணத்தின் மூலம் பாவ (மல)க் கட்டில் இருந்த ஆன்மாக்களை விடுவித்து, ஆட்கொண்டார்.

6. இதற்கு சைவசித்தாந்தத்தில் வேறு சான்று ஏதாவது உள்ளதா?

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

- சிவஞான போதம் சூத்திரம் 8

முதல்வனாகிய கடவுள்... குருவாக உலகில் வந்து, ஆன்மாவை மீட்பதற்காகத் தான் ஏற்றுக் கொள்ளும் துன்பமாகிய (கண்டம்) தவத்தால், ஆன்மாவிற்கு உண்மையை உணர்த்திக் காட்ட, ஆன்மாவானது தன் பாவ நிலையை விட்டுத் தனக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள பாவமாகிய பிரிவினை நீக்கப்பட்டு மீட்கப்பட்டமையால், பாவத்தை அரிந்தெடுப்பவனாகிய இறைவனின் (இறவாத இன்பமாகிய) திருவடியைச் சென்று அடையும்.

- முனைவர் மு. தெய்வநாயகம்
சிவஞானபோதம் உரை. பக்கம் 42

7. இறைவன் தவம் செய்தாரா?

ஆம். இறைவன் தவம் செய்தார். ஆனால் இறைவன் மேற்கொள்ளும் தவம் என்பது மனிதர் செய்யும் தவத்தைப்போல் ஐம்புலன்களை ஒடுக்கும் - அடக்கும் தவம் அல்ல. ஐம்புலன்கள் அடங்காதவன் இறைவன் ஆகமாட்டான். எனவே, ஐம்புலன்களை அடக்க வேண்டிய தேவை மனிதர்களுக்கே அன்றி, இறைவனுக்கு இல்லை.

மனிதனாகப் பிறந்து வந்த இறைவன் ஐம்புலன்களால் ஆன தன் உடலில் குடிகொண்டுள்ள தன் ஆன்மாவையே, அதாவது தன்னையே அவிப் பொருளாகக் கொடுத்தார்.

பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் - குறள் -6

இக் கருத்துத் தொடர்பான மற்றொரு குறள் :

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும் - குறள் - 268

8. இறைவன் மரித்தாரா?

ஆம். இறைவன் மரித்தார் (பலியானார்).

பொறிவாயில் ஐந்தவித்தான் - குறள் 6
தன்னுயிர் தானறப் பெற்றான் - குறள் 268
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த...-சிவஞானபோதம் சூ.8
கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்... - திருஉந்தியார் 3
செம்மலர் நோன்தாள் .... - சிவஞானபோதம் சூ.12

போன்ற சைவசித்தாந்த சாத்திரப்பகுதிகளும், திருக்குறள் பகுதிகளும் இறைவன் மரித்த (பலியான) செய்தியை உறுதி செய்கின்றன.

9. சகளமாய் வந்த கடவுள்

இப்படியாகத் "தன்னுயிர் தானறப் பெற்றவர்" மரணமடைந்த நிலையிலேயே இருந்துவிட்டால் 'தன்னுயிர் தானறப் பெற்றதால்' பயன் என்ன?

அடுத்த குறள் இதற்குப் பதில் கொடுக்கிறது.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. - குறள் 269

மனிதனாக வந்த இறைவன் மரணநிலையிலிருந்து மீண்டு வந்ததை மற்றொரு குறளும் கூறுகிறது.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி - குறள் 25

பொறிவாயில் ஐந்தவித்த - (குறள் 6)
மனிதனாக வந்த இறைவனுடைய ஆற்றல் - (குறள் 25)
என்னவென்றால், அது
கூற்றம் குதித்த ஆற்றல் (குறள் 269) என்பது தெளிவாகிறது.

எனவே தான்

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர் மீண்டும் பிண்டத்தில் வாரார். அவருக்குப் பிறப்பு இறப்பு இனி இல்லை.

விவிலிய ஒப்பு:

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்

(அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய இறைவன்) தம் ஒரே மகன் (சகளமாய் வந்து, தானாகத்தந்தவர்) மீது நம்பிக்கை கொள்ளும் (ஆன்மாக்களாகிய மனிதர்) எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே (கண்டத்தைக் கொண்டு கருமம் முடிக்க - 'பொறிவாயில் ஐந்தவிக்க' - தன்னுயிர் தானறப் பெற) அளிக்கும் அளவுக்கு (அகளமாய் உள்ள) கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். - யோவான் 3:16

கடவுள் வடிவில் விளங்கிய (சகளமாய் வந்த) அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டு இருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து, தம்மையே தாழ்த்திக் கொண்டார். - பிலிப்பியர் 2: 6-8

இந்த விவிலியப் பகுதி 'கண்டம்' என்ற சொல்லுக்குப் பொருள்களான குறைக்கப்பட்டது (தம்மையே வெறுமையாக்கி) மற்றும் பேராபத்து, மரணம் (சிலுவைச் சாவு) என்ற இரண்டிற்குமே பொருந்துகிறது.

கருமம் முடித்தவர்:

பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு; மாறாகக் கடவுள் கொடுக்கும் அருள்கொடை (கண்டத்தைக் கொண்டு கருமம் (முடித்தவராகிய) நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலை வாழ்வு. - உரோமையர் 6:23

ஊனும் இரத்தமும் கொண்ட அப்பிள்ளைகளைப் போல் அவரும் அதே இயல்பில் பங்கு கொண்டார். இவ்வாறு சாவின்மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாகவே அழித்து விட்டார். வாழ்நாள் முழுவதும் சாவு பற்றிய அச்சத்தினால் அடிமைப்பட்டிருந்தவர்களை விடுவித்தார். - எபிரேயர் 2: 14,15

பிண்டத்தில் வாரார் :

"...(சகளமாய் வந்த) கிறிஸ்து தம்மையே ஒரே முறை பலியாகக் கொடுத்தார் (கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தார்) அதை மீண்டும் மீண்டும் செய்யவில்லை....தம்மையே பலியாகக் கொடுத்து, பாவங்களைப் போக்குவதற்காக ஒரேமுறை உலகில் வெளிப்படுத்தப்பட்டார் (இனி பிண்டத்தில் வாரார்)." - எபிரேயர் 9: 25,26

மனிதர் ஒரேமுறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித் தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கு என உள்ள நியதி. அவ்வாறே, கிறிஸ்துவும் பலரின் பாவங்களைப்போக்கும் பொருட்டு ஒரேமுறை தம்மைத்தாமே பலியாகக் கொடுத்தார். (இனி அவருக்குப் பிறப்பு, இறப்பு இல்லை). - எபிரேயர் 9: 27,28

"கடவுள் மனித அவதாரம் மட்டுமே எடுத்தார். ஏனெனில். மனிதரை மட்டுமே தம்உருவிலும், சாயலிலும் உண்டாக்கினார். மேலும் அவன் நாசிகளில் மட்டுமே தம் உயிர்மூச்சை ஊதினார். எனவே மனிதனை மட்டுமே தடுத்து ஆட்கொள்கிறார். மேலும் அவ் அவதாரம் ஒருமுறை மட்டுமே; அது நிகழ்ந்து விட்டது. எனவே, மீண்டும் மீண்டும் அவர் பூமியில் பிறந்து வரவேண்டிய தேவை இல்லை."

விவரிக்க இயலாத இன்பம்.

4. இங்ஙன் இருந்ததுஎன்று எவ்வண்ணம் சொல்லுவேன்
அங்ஙன் இருந்ததுஎன்று உந்தீபற அறியும்
அறிவுஅதுஅன்று உந்தீபற.

சொற்பொருள் :

இங்ஙன் = இவ்வாறு

அங்ஙன் = அவ்வாறு

பதவுரை :

இங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுவேன் = இப்படி இருந்தது என்று என்னால் எவ்வாறு சொற்களால் விளக்கமுடியும்.?

அங்ஙன் இருந்தது = அதற்கு இணை அதுதான்: அது அப்படித்தான் இருந்தது.

அறியும் அறிவு அது அன்று = மூளை அறிவாகிய சிற்றறிவினால் அதனை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது.

கருத்துரை :

ஆன்மாவாகிய பெண் இறைவனாகிய தலைவனால் ஆட்கொள்ளப்படும்போது, அவரோடு அது சேர்ந்து அனுபவிக்கும் இன்பம் இப்படிப்பட்டது என்று எவ்வண்ணம் வெளியே எடுத்துரைக்க முடியும்? அது சொற்களால் விவரிப்பதற்கு அப்பாற்பட்ட ஓர் அனுபவம். அது அப்படித்தான் இருந்தது. எப்படி இருந்தது என்று தன்னளவில் ஓரளவு அதை விளக்கிச் சொன்னாலும், மற்றவர்கள் தங்கள் மூளை அறிவால் முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடாத ஓர் அனுபவம் ஆகும் அது.

விளக்கவுரை :

மனிதன் இறைவனை அனுபவிக்கும் போது பெறும் இன்பம் சொற்களால் விளக்குவதற்கு அப்பாற்பட்ட "அகப்பொருள்" அனுபவமாகும்.

தமிழ் மொழிக்கே சிறப்பாக உள்ள பொருள் இலக்கணம் மற்ற மொழிகளில் காணப்படாத ஒன்றாகும். அது அகப்பொருள் , புறப்பொருள் என்று இருவகைப்படுகிறது.

அகப்பொருள் :

இது இருவகைப்படும்.

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து அனுபவிக்கும் இன்பம் -சிற்றின்பம் - இது நிலையற்றது : தற்காலிக இன்பமாகும்.

இறைவனும், ஆன்மாவும் சேர்ந்து அனுபவிக்கும் இன்பம் - பேரின்பம் - இது நிலையானது.

இவை இரண்டையுமே தம் வாழ்வில் அனுபவித்தவர்கள் அவற்றை சொற்களால் எடுத்துச் சொல்லி மற்றவர்களுக்கு முழுமையாகப் புரிய வைக்க முடியாது.

அறிவுக்கு அடங்காத பேரின்பமயமான இறைபரம்பொருளை, அது ஆன்மாக்களாகிய நமக்கு அளிக்கும் இன்பத்தைச் சொற்களால் விளக்குதல் இயலாத ஒன்று ஆகும்.

சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை

பொது - தனித் திருத்தாண்டகம் - 4
அப்பர் அடிகள்

விவிலிய ஒப்பு :

காட்டு மரங்களிடையே நிற்கும் கிச்சிலிபோல், காளையருள் இலங்குகின்றார் என் காதலர்தாம். அவரது நிழலிலே அமர்வதில் இன்புறுவேன் ; அவர் கனி என்நாவுக்கு இனிமை தரும்.

திராட்சை இரசம் வைக்கும் அறைக்குள்ளே என்னை அவர் அழைத்துச் சென்றார் ; அவர் என்மேல் செலுத்திய நோக்கில் காதல் இருந்தது .

...காதல் நோயால் நான் மிகவும் நலிந்து போனேன். என் காதலர் எனக்குரியர்; நானும் அவருக்குரியள்;

இனிமை மிகு பாடல் 2: 3, 4 ,5, 16

நான் உறங்கினேன்: என் நெஞ்சமோ விழித்திருந்தது;
இதோ, என் காதலர் கதவைத் தட்டுகின்றார்;
என் நெஞ்சம் அவருக்காகத் துள்ளிற்று.

இனிமை மிகு பாடல் 5:2,4

(தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களாகிய) அவர்கள் (அகக்) கண்கள் திறந்தன. அவர்களும் (தங்கள் ஆன்ம மணமகனாகிய) அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். ....அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி," வழியிலே (குருவும், ஆன்ம மணமகனுமாகிய) அவர் நம்மோடு பேசி மறை நூலை விளக்கும் போது நம் உள்ளம் பற்றி எரிய வில்லையா?" என்று பேசிக்கொண்டார்கள். - லூக்கா 24 : 31, 32.

"மூளை அறிவினால் அறியப்படும் அனைத்தும் நிலையற்றவை."

ஒருவராகவும் பல(மூவ)ராகவும்

5. ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனான்என்று உந்தீபற
நம்மையே ஆண்டான்என்று உந்தீபற

சொற்பொருள் :

ஏகன் = ஒருவன்; **அநேகன்** - பலர், ஒன்றுக்கு மேற்பட்டவர்; **நாதன்** - தலைவன், கணவன்.

பதவுரை :

ஏகனும் ஆகி = ஒருவராய் இருக்கும் இறை பரம்பொருள்.

அநேகனும் ஆனவன = அநேகரும் ஆனார்.

நாதனும் ஆனான் = அவர் ஆன்மாவாகிய என்னுடைய மணமகனாகவும் ஆனார்.

நம்மையே ஆண்டான் = அவர் என்னை மட்டுமன்றி, அவர் மேல் பக்தி கொள்ளும் அனைவரையுமே அப்படி ஆண்டு கொள்கிறார்.

கருத்துரை :

ஒருவராய் இருக்கும் இறைபரம்பொருள், ஆன்மாக்களுக்குத் தன்னை வெளிப்படுத்தி, அவைகளை ஆட்கொள்ளும் பொருட்டு அநேகராகவும் ஆனார். அப்படி ஆனவர் ஆன்மாவாகிய என்னுடைய மணமகனாகவும் ஆகி, என்னை ஆட்கொண்டார். மேலும், அவர் என்னை மட்டுமின்றி, அவர்மேல் பக்திகொள்ளும் அனைவரையுமே அப்படி ஆண்டுகொள்கிறார்.

விளக்கவுரை :

ஒருவராய் இருக்கும் இறைவன், அநேகராகவும்ஆனார் என்று கூறும் பொழுது, அவர் மூவராக ஆனார் என்று பொருள் கொள்வது சிறப்பானதாகும். ஏனென்றால், சைவமும் வைணவமும் முழுமுதற்கடவுளை மூவொரு கடவுளாகக் கொண்டு போற்றுகின்றன. இறைவன் ஒருவரே; ஆனால், அவர் ஆன்மாக்களின் மேல் கொண்ட

அருளினால்,

தான் அருவமாகிய இறைவனாகவும்,

அருவுருவமாகிய தன் திருவருள் சக்தியாகவும்,

உருவமாக வந்த சற்குருவாகவும்

விளங்குகிறார் என்கிறது சைவசித்தாந்தம்.

இக்கோட்பாட்டை சோமாஸ்கந்தர் என்கிறது சைவம்.

ச + உமா + ஸ்கந்தர்; உமை, ஸ்கந்தனுடன் கூடிய இறைவன்.

(God) with Uma and Skanda.

இக்கோட்பாட்டை திரிமூர்த்தி என்கிறது வைணவம்.

சிவன், விஷ்ணு, பிரமன்.

சிவனின் இடப்பகுதி விஷ்ணுவாகவும்
விஷ்ணுவின் நாபிக் கமலத்தில் பிரமனும் உள்ளனர்.
இக்கோட்பாட்டை திரித்துவம் (Trinity) என்கிறது கிறித்தவம்.

தந்தையாகிய இறைவன்
தூயஆவியாகிய இறைவன்
மகனாகிய இறைவன்

இக்கோட்பாட்டை 'திரிகாயா' - முத்திருமேனி ' என்கிறது கிறித்துவிற்குப் பின் உருவான பௌத்தமதப் பிரிவான மகாயான பௌத்தம்.

தர்ம காயா	**- அறத் திருமேனி**	**- அருவம்**
சம்போக காயா	**- இன்பத் திருமேனி**	**- அருஉருவம்**
நிர்மாண காயா	**- படைப்புத் திருமேனி**	**- உருவம்**

இக்கோட்பாட்டை 'இயல்புடைய மூவர்' என்கிறது உலகப் பொதுமறை என சிறப்பிக்கப்படும் திருக்குறள்.

கடவுள் (வாழ்த்து)
வான் (சிறப்பு)
நீத்தார் (பெருமை)

இக்கோட்பாட்டை மூன்றுதலைகளுடன் கூடிய ஒரே உடலாகக் காட்டுகிறது, எளிய மக்களுக்குப் புரிய வைக்கும் நோக்கில் உருவான சிற்பவியல் நோக்கு (Iconography Aspect). "சிவன், விஷ்ணு, பிரமன் ஆகிய மூவரின் தலைகளுடன் கூடிய ஒரேஉடல்." இது, இம் மூவரும் தனித்தனி கடவுளர் அல்லர்; மூவரும் ஒருவரே என்பதை எளிய மக்களுக்குப் புரிய வைக்கின்றது. மகாபலிபுரத்திலும், மும்பைக்கு அருகில் கடலில் உள்ள எலிபெண்டா குகையிலும் இது போல் சிற்பங்கள் உள்ளன.

எனவே, அநேகன் என்ற சொல் பலர் - ஒன்றுக்கு மேற்பட்டவர் என்ற பொருள் கொடுப்பதானாலும், மூவர் என்று பொருள் கொள்வதே சிறப்பானதாகும்.

ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
- சிவபுராணம் 5 - திருவாசகம் - மாணிக்கவாசகர்.

அருக்கமாய்ப் பெருக்கமாகி
- அப்பர் தேவாரம் 320

குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை என்றும்
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத்தானை
- அப்பர் தேவாரம் 580

சோமாஸ்கந்தராக விளங்குதல்

செல்வியைப் பாகம் கொண்டார்
சேந்தனை மகனாக் கொண்டார்
- அப்பர் தேவாரம் 431.

மண்ணினை உண்ட மாயன்
தன்னையோர் பாகம் கொண்டார்
- அப்பர் தேவாரம் 430.

காலமும் நாள்கள் ஊழி படையாமுன் ஏக
உருவாகி மூவர் உருவில்
- அப்பர் தேவாரம் 136.

மையரிக் கண்ணியாளும் மாலுமோர் பாகமாகி
- அப்பர் தேவாரம் 221.

ஆதி பகவன் - திருக்குறள்
பகவு = துண்டு, பிளவு
பகு + அன் = பகவன்
பகு = பிரி, பகுப்பு = பிரிவு

மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்
பாதிநல் லாளும் பகவனு மானது
சோதிநல் லாளைத் துணைபெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே.
- திருமந்திரம் 1157.

பகவன் - 'பகு' பட்டவன்
தன்னைத் தானே பிரித்துக் கொண்டவன்

இக்கணமே முக்தியினை எய்திடினும் யான் நினைந்த
அக்கணமே ஆனந்தம் தந்திடினும் - நற்கணத்தார்
நாயகர்க்கும் நாயகிக்கும் - நந்திக்கும் யான் அடிமை
ஆயிருத்தல் அன்றியிலேன் யான்.

-திருக்களிற்றுப் படியார் - 98

நாயகர் - இறைவன் - அருவம்
நாயகி - இறைவனின் திருவருள் சக்தி - அருவுருவம்.
நந்தி - குருவாகிய மனிதனாக இப்பூமியில் வந்த இறைவன் - உருவம்.

விவிலிய ஒப்பு:
ஏகன் - அநேகன் (மூவர்)

"இஸ்ரவேலே, கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" - உபாகமம் 6:4

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக." - மத்தேயு 22:37

... கடவுள் ஒருவரே... - 1 தீமோத்தேயு 2:4

...கடவுள் ஒருவரே: அவரைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை - மாற்கு 12:32.

"பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை பரிசுத்த ஆவி என்பவர்களே. இம் மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்." - 1 யோவான் 5:7

(சற்குருவாகிய மனிதனாகப் பிறந்துவந்த கடவுளாகிய) இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்காகத் திறக்கப்பட்டது. (கடவுளின் திருவருள் சக்தியாகிய) தேவ ஆவி புறாவைப்போல் இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார்.

அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் (அருவக் கடவுளாகிய) என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. - மத்தேயு 3:16,17.

“ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.”II கொரிந்தியர் 13:14

“தந்தையிடமிருந்து (இயேசு கிறிஸ்துவாகிய) நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் (இறைவனின் திருவருள் சக்தி) வருவார்- அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்....” - யோவான் 15:26.

“பின்பு, பளிங்கைப் போல் தெளிவாக ஜீவத்தண்ணீர்உள்ள சுத்தமான நதி (யாகிய தூய ஆவியார்), தேவனும், (இயேசு கிறிஸ்துவாகிய) ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான்.” - வெளிப்படுத்தின விசேஷம் 22:1

நாதனும் ஆனான்:

“விண்ணகத்தில்பெயர்எழுதப்பட்டுள்ளதலைப்பேறானவர்களின் திருச்சபைவிழாக்கூட்டமென அங்கேகூடியுள்ளது...”-எபிரேயர் 12:23

...(சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்து, பொறிவாயில் ஐந்தவித்து, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ) ஆட்டுக்குட்டியின் திருமண விழா வந்து விட்டது. (ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் - ஒரு பொருளால் - மீட்கப்பட்ட ஆன்மாக்களைக் கொண்ட திருச்சபையாகிய) மணமகளும் விழாவுக்கு ஆயத்தமாய் இருக்கிறார்.

மணமகள் அணியுமாறு பளப்பளப்பான, தூய்மையான, விலையுயர்ந்த, மெல்லிய ஆடை அவருக்கு அளிக்கப்பட்டது. அந்த ஆடை (மீட்கப்பட்ட ஆன்மாக்களாகிய) இறைமக்களின் நீதிச் செயல்களே... ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்துக்கு அழைக்கப்பெற்றோர் பேறு பெற்றோர்... - திருவெளிப்பாடு 19 :7-9.

“...கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போலக் கணவர் மனைவிக்குத் தலையாய் இருக்கிறார்.” - எபேசியர் 5:23.

“ஒரே இறைவன், ஆன்மாக்களின் மேல் அருள்கொண்டு, தானும், தனது திருவருள் சக்தியும், பூமியில் சற்குருவாகிய மனிதனாக வந்த கடவுளாகவும் மூவர் ஆகி, ஆன்மாக்களின் மணமகனாகவும் ஆகிறார்.”

தன்னையே தந்த இறைவன்

6. நம்செயல் அற்றுஇந்த நாம்அற்ற பின்நாதன
தன்செயல் தானேஎன்று உந்தீபற
தன்னையே தந்தான்என்று உந்தீபற.

சொற்பொருள்

நாம் அற்ற பின் = 'நான்' என்னும் அகப்பற்று; 'எனது' என்னும் புறப்பற்று என்னும் இரண்டும் நம்மை விட்டு அகன்றபின்னர்.

நாதன் = தலைவன், இறைவன், கணவன், ஆன்மா மணமகளாகவும், அதை ஆட் கொள்ளும் இறைவன் மணமகனாகவும் உருவகிக்கப்படுதல்.

நாதன் தன் செயல் = இறைவனுடைய செயலே.

பதவுரை :

நம் செயல் அற்று = நாம் தாம் நம்முடைய பெலத்தினால், நம்முடைய அறிவினால் செயல்படுகிறோம் என்ற எண்ணம் அகன்று,

இந்த நாம் அற்றபின் = 'நான் என்னும் அகப்பற்றும்', 'எனது என்னும் புறப்பற்றும்' நம்மை விட்டு முற்றிலுமாக மறைந்த பின்னர்,

நாதன் தன் செயல்தானே = எல்லாம் இறைவன் செயலே என்ற உண்மை நமக்கு விளங்கும்.

தன்னையே தந்தான் = இந்த உண்மையை விளங்கிக் கொள்ளும் ஆன்மாக்களுக்கு இறைவன் தன்னையேத் தந்தருளுகிறார்.

கருத்துரை :

நம்முடைய பெலத்தால்தான் நாம் செயல்படுகின்றோம் என்ற எண்ணம் அகன்று, 'நான் - எனது' என்னும் அகப்பற்றும், புறப்பற்றும் அகன்ற பின்னர், எல்லாம் இறைவன் செயலே என்ற உண்மை நமக்கு எளிதில் விளங்கும். இதனை விளங்கிக் கொள்ளும் ஆன்மாக்களுக்கு இறைவன் தன்னையேத் தந்தருளுகிறார்.

விளக்கவுரை :

இப்பேரண்டத்தில் அனைத்தும் இறைவனின் ஆணைப்படி நடக்கின்றன. நம் பெலத்தினால் யாதொன்றும் நடைபெறாது என்ற உணர்வு நமக்கு வேண்டும். 'அவனன்றி ஓரணுவும் அசையாது.'

நம் தன்முயற்சி எதுவும் நடைபெறாது என்பதால், நாம் சோம்பித் திரியலாமா? கூடாது. இறை சித்தத்தை இம்மண்ணுலகில் நிறைவேற்ற, நாம் இறைவனுடன் இணைந்து இறைக் கட்டளைப்படி செயல்படவேண்டும். ஏனெனில் இறைவன் நம்மைக் கொண்டு செயல்படுகிறார்.

'எனது' என்னும் உணர்வை அகற்றுவது கடினம். 'நான்' என்னும் உணர்வைப் போக்குவது அதனினும் கடினம். இறை சித்தத்திற்கு நம்மை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்கும் போது, இந்த உணர்வுகள் படிப்படியாக நம்மை விட்டு அகலும்.

இறைவனின் திருவருள் சக்தி வழி நடத்தும்போது, இது இயலும்.

ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதன்பின் அப்பொருளாய்ப்
பைய விளையுமெனப்பார்

- திருக்களிற்றுப்படியார் 13.

அவனருளாலே அவன் தாள் வணங்கி....

- சிவபுராணம்- திருவாசகம்.

நானேயோ தவஞ் செய்தேன்...
தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்.

-திருஏசறவு 10 திருவாசகம்.

ஆட்டுவித்தால் ஆறொருவர் ஆடாதாரே.
அடக்குவித்தால் ஆறொருவர் அடங்காதாரே.
ஓட்டுவித்தால் ஆறொருவர் ஓடாதாரே,
உருகுவித்தால் ஆறொருவர் உருகாதாரே.

பொது - தனித்திருத்தாண்டகம் 3
- அப்பர் தேவாரம்

விவிலிய ஒப்பு:

நம்செயல் அற்று, இந்த நாம்அற்ற பின்

'...இனி நான்அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் ...

- கலாத்தியர் 2:20.

“நான் சுயமாய்ப் பேசவில்லை; நான் பேச வேண்டியது இன்னதென்றும், உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.” - யோவான் 12:49.

“....மாம்சத்தின் (சுயசித்தத்தின்) படி நடக்கிறவர்கள் மாம்சத்திற்குரியவை (தன் விருப்பத்தின்படியானவை)களைச் சிந்திக்கிறார்கள். ஆவியின் (இறைவனின் திருவருள் சக்தியின் வழி காட்டலின்) படி நடக்கின்றவர்கள் ஆவிக்குரியவை (இறைவனின் திருவருள் சக்தியின் சித்தங்)களைச் சிந்திக்கிறார்கள்.

மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். தேவனுடைய ஆவி (திருவருள் சக்தி) உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாயிருப்பீர்கள். - ரோமர் 8:5,6,9

நாதன் தன் செயல் தானே:

“இயேசு அவர்களைக் கூர்ந்து நோக்கி, மனிதரால் இது இயலாது. ஆனால் கடவுளுக்கு அப்படியல்ல. கடவுளால் எல்லாம் இயலும்” என்றார். மாற்கு 10:27

நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும், நான் அவருடனும் இணைந்திருந்தால், அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டு பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது. யோவான் 15:5

(பவுலாகிய) நான் நட்டேன். அப்பொல்லோ நீர் பாய்ச்சினார், கடவுளே விளையச் செய்தார். நடுகிறவருக்கும் பெருமையில்லை; நீர்பாய்ச்சுபவர்க்கும் பெருமையில்லை. விளையச்செய்யும் கடவுளுக்கே பெருமை. 1 கொரிந்தியர் 3:6,7

(செடி ஒன்றை நடுதலினாலோ, அதற்கு நீர்ப்பாய்ச்சுவதினாலோ அது விளைவைக் கொடுக்கும் என்ற நிச்சயமில்லை. அது இறைவனுடைய அருள். ஆனால் அதனை நடுவதும், அதற்கு நீர்ப்பாய்ச்சுவதும் கட்டாயம் தேவை. அதைச் செய்து முடிக்கவேண்டியது நம் கடமை.)

குதிரை யுத்தநாளுக்காக ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும். நீதிமொழிகள் 21: 31

என் பொருட்டு ஆளுநர்களிடமும், அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும் பொழுது, என்ன பேசுவது, எப்படிப் பேசுவது, என நீங்கள் கவலைப் பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல; மாறாக உங்கள் தந்தையின் ஆவியானவரே (இறைவனின் திருவருள் சக்தியானவரே) உங்கள் வழியாய்ப் பேசுவார். - மத்தேயு 10: 18,19.

நீங்களும் உங்களுக்குப் பணிக்கப்பட்ட யாவற்றையும் செய்தபின், நாங்கள் பயனற்ற பணியாளர்கள்; எங்கள் கடமையைத்தான் செய்தோம் எனச் சொல்லுங்கள். - லூக்கா 17:10

......கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். அவ்வாறே, வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். உலகம் ஒரு பொருட்டாக கருதுபவற்றை அழித்துவிட அது தாழ்ந்ததாகக் கருதுபவற்றையும், இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார். எவரும் கடவுள் முன் பெருமைப் பாராட்டாதபடி அவர் இப்படிச் செய்தார். - 1 கொரிந்தியர் 1:27 -29

ஏரோது அரச ஆடை அணிந்து மேடையில் அமர்ந்து அவர்களுக்கு உரையாற்றினான். அப்போது மக்கள், இது மனிதக் குரல் அல்ல; கடவுளின் குரல் என்று ஆர்ப்பரித்தனர். உடனே ஆண்டவரின் தூதர் அவனை அடித்தார். ஏனெனில் அவன் கடவுளைப் பெருமைப்படுத்தவில்லை; அவன் புழுத்து செத்தான். - திருத்தூதர் பணிகள். 12:21-23

உள்ளம் உருகில்... தெள்ள அரியர்

7. உள்ளம் உருகில் உடன்ஆவர் அல்லது
தெள்ள அரியர்என்று உந்தீபற.
சிற்பரச் செல்வர்என்று உந்தீபற.

சொற்பொருள் :

உடன்ஆவர் = நம்மோடு இருப்பர், இணங்குதல், இயைதல்.

தெள்ள = தெளிந்து உணர்தல்.

அரிது = கடினம்.

சிற்பரன் = அறிவுக்கு மேற்பட்டவன். இறைவன்.

பதவுரை :

உள்ளம் உருகில் உடன் ஆவர் = இறைவனை நினைத்து நாம் மனம் உருகினால் மட்டுமே அவர் நம்மோடு இயைந்து நிற்பார்.

அல்லது = இல்லை எனில்,

தெள்ள அரியர் = தெளிந்து உணர்ந்து கொள்வதற்கு அவர் அரியவர்.

சிற்பரச் செல்வர் = நம் சித்தத்திலும், அதைவிட நுணுக்கமான இடத்திலும் நிறைந்திருக்கும் செல்வர் அவர்.

கருத்துரை :

நம் சித்தத்திலும், அதைவிட நுணுக்கமான இடத்திலும் நிறைந்திருக்கும் செல்வராகிய இறைவனை நினைத்து நாம் மனம் உருகினால் மட்டுமே, அவர் நம்மோடு இயைந்து நிற்பார். இல்லை எனில், தெளிந்து உணர்ந்து கொள்வதற்கு அவர் அரியவர் ஆவர்.

விளக்கவுரை :

அகம் குழையாமல், நானாக இறைவனைத் தேடி அறிவேன் என்று தன் முனைப்போடும், தன் அறிவாலும், ஐம்புலன்களாலும், அந்தக் கரணங்களாலும் தேட முயல்பவருக்கு, இறைவனைத் தெளிந்து உணர்தலும், அடைதலும் இயலாத செயல் ஆகும்.

இறைவன் 'தன்னையே தந்தான் ' என்று சென்ற பாடலில் கண்டோம். எப்பொழுது என்று கேட்டால் 'உள்ளம் உருகில் உடன் ஆவர்' என்பதுதான் பதில்.

உள்ள முதல் அனைத்தும் ஒன்றாய் உருகவரின்
உள்ளம் உருகவந்து உன்னுடனாம் . . . .
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படும் காண்

திருக்களிற்றுப்படியார் 14,15.

தீர்ந்த அன்பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப போற்றி

திருச்சதகம் - 69
திருவாசகம் - மாணிக்கவாசகர்

விவிலிய ஒப்பு:

(எல்க்கானா என்பவரின் மனைவி அன்னா குழந்தை இல்லாத படியினால் மற்றவர்கள் அவர் துக்கப்படும்படியாக அவரை மிகவும் விசனப்படுத்தினர்.)

அன்னா மனம் கசந்து, அழுது புலம்பி ஆண்டவரிடம் மன்றாடினார்.

ஆண்டவரும் அவரை நினைவு கூர்ந்தார்... உரிய காலத்தில் அன்னா கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுத்தார். - 1 சாமுவேல் 1: 10,20

(நெகேமியா ஆகிய) நான் உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன். பல நாட்கள் துக்கம் கொண்டாடினேன். மேலும் நான் நோன்பிருந்து விண்ணகக் கடவுளின் முன் மன்றாடினேன். - நெகேமியா 1: 4

யோபு எழுந்தார்; தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்; தன் தலையை மழித்துக் கொண்டார். பின்பு தரையில் விழுந்து வணங்கி... உம்மைப்பற்றிக் காதால் மட்டுமே கேள்விப்பட்டேன்; ஆனால் இப்பொழுது, என் கண்களே உம்மைக் காண்கின்றன. ஆகையால் என்னையே நொந்து கொள்ளுகின்றேன். புழுதியிலும், சாம்பலிலும் இருந்து மனம் வருந்துகின்றேன்.

...ஆண்டவர் செல்வங்களை எல்லாம் மீண்டும் நல்கினார்; மேலும் அவர் யோபுக்கு இருந்தனவற்றை எல்லாம் இரண்டு மடங்கு ஆக்கினார்.... யோபின் முன்னைய நாள்களில் இருந்ததைவிட,

பின்னைய நாள்களில் ஆண்டவர் அதிகமாக ஆசி வழங்கினார். யோபு : 1:20,21 42:5, 6, 10.

ஆ! என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும். அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன். - எரேமியா 9:1

அவன் (நினிவே அரசன்) தன் அரியணையை விட்டிறங்கி அரச உடையைக்களைந்து விட்டு, சாக்கு உடை உடுத்திக் கொண்டு, சாம்பல் மீது உட்கார்ந்தான்.

அவர்கள் தீயவழிகளின்று விலகியதை அவர் (கடவுள்) கண்டு தம் மனத்தை மாற்றிக் கொண்டார்; தாம் அவர்கள் மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை. - யோனா 3:6, 8,9,10.

"எசேக்கியா (எனப்படும் அரசன்) நோயுற்றுச் சாகும் தருவாயில் இருந்தார்... (இறைவனை நோக்கி) வேண்டுதல் செய்து கதறி அழுதார்..." உன் மன்றாட்டைக் கேட்டேன். உன் கண்ணீரையும் கண்டேன். இதோ, உன்னைக் குணப்படுத்துவேன். ...உனது ஆயுளுக்கு இன்னும் பதினைந்து ஆண்டுகள் கூட்டுவேன்.... (என்றார் ஆண்டவர்.) - 2 அரசர்கள் 20: 1,3,5,6

உள்ளத்தால் வழிபடுதல்

8. ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க உந்தீபற
விமலற்கு இடம்அது என்று உந்தீபற.

சொற்பொருள் :

ஆதாரம் = பற்றுக்கோடு. உடல், ஐம்பொறிகளால் ஆன உடலால் செய்யும் வழிபாடு, புறப்பூசை.

நிரதாரம் = நிர்+ஆதாரம்= ஆதாரம் இன்மை - உடலுக்கு அப்பால் சென்று மனதால் செய்யும் வழிபாடு. ஐம்புலன்களுக்கு அப்பால், உட்கரணங்களில் ஒன்றான மனதால் செய்யும் வழிபாடு, அகப்பூசை.

மீதானம் = மேலிடம், மேன்மையான இடம், இறைவன் இருக்கும் இடம்.

விமலன் = மல(பாவ) மற்ற இறைவன், தூய்மையே உருவானவர்.

பதவுரை :

ஆதாரத்தாலே = ஐம்பொறிகளால் ஆன உடலால் செய்யக் கூடிய புறப் பூசையாகிய வழிபாடு மூலம் இறைவனை வணங்கத் தொடங்கி.

நிராதாரத்தே சென்று = படிப்படியாக பக்குவம் பெற்ற பின்பு, ஐம்புலன்களையும் கடந்து, உட்கரணமாகிய மனதால் இறைவனை தியானித்து, அகப்பூசையாகிய வழிபாடு செய்து

விமலற்கு இடம் அது என்று மீதானத்தே செல்க = இயல்பாகவே எவ்விதக் கட்டுகளும் அற்ற இறைவனை (அவரது திருவருள் சக்தியின் துணை கொண்டு) அவர் இருக்கும் மேலான இடத்தைச் சென்று அடைதல் வேண்டும்.

கருத்துரை :

ஐம்பொறிகளால் ஆன உடலால் செய்யக்கூடிய புறப்பூசையாகிய வழிபாடு மூலம் இறைவனை வணங்கத் தொடங்கி, படிப்படியாகப் பக்குவம் பெற்ற பின்பு, ஐம்புலன்களையும் கடந்து, உட்கரணமாகிய மனத்தால் இறைவனைத் தியானித்து, அகப்பூசையாகிய வழிபாடு

செய்து, இயல்பாகவே எவ்விதக் கட்டுகளும் அற்ற இறைவனை (அவரது திருவருள் சக்தியின் துணை கொண்டு) அவர் இருக்கும் மேலான இடத்தைச் சென்று அடைதல் வேண்டும்.

விளக்கவுரை :

மனம் அலைபாயும் தன்மை உடையது. அதை அடக்கி ஒருமுகப்படுத்துதல் மிகக் கடினமான செயல் ஆகும். மனிதன் தான் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே, தன் மனத்தால் எந்த இடத்திற்கும் செல்ல முடியும். அது போல் பிறர் அறியாமல், தன் மனத்தால் எத்தகைய கொடுஞ்செயலையும் சிந்தித்து இன்புற முடியும்.

உடலால் ஒருவன் ஒரு தீச்செயலைச் செய்ய வேண்டுமெனில், அதற்கு உடல் உறுதியும், மனத் துணிவும், வாய்ப்பும் வேண்டும். ஆனால், எத்தகைய கோழையும், உடல் உறுதி அற்றவனும் எத்தீச் செயலையும் தன் மனத்தால் நினைத்து இன்புற முடியும்.

மனதை அடக்குதல் பெரிய ஞானிகளுக்கே கடினமான செயல் ஆகும். எனவே, முதலில் ஐம்பொறிகளைப் பற்றி நின்று, அவற்றால் ஆன உடலால் இறைவனை வழிபடல் வேண்டும்.

இறைவனின் திருவருள் சக்தியின் துணை கொண்டு படிப்படியாக, அலைபாயும் மனதை அடக்கி, உலகியல் ஈடுபாட்டிலிருந்து அதனைப் பிரித்து, உட்கரணங்களால் செய்யும் அகப் பூசை செய்து வணங்குதல் வேண்டும்.

படிப்படியாக முன்னேறி திருவருள் சக்தியின் துணை கொண்டு. மேலான இடத்திலுள்ள இறைவனை அடைதல் வேண்டும்.

புண்ணியம் செய்வார்க்குப் பூ உண்டு நீர் உண்டு,
அண்ணல் அதுகண்டு அருள்புரியாநிற்கும் ....

திருமந்திரம் 1828

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்

இரண்டாந் திருவந்தாதி - 1
பூதத்தாழ்வார்.

விவிலிய ஒப்பு:

ஆதாரத்தாலே

"நறுமணப்பொருள் எரிக்குமாறு ஒரு பீடம் செய்... காலை தோறும் (தலைமைக் குருவாகிய) ஆரோன் அதன் மேல் நறுமணப்பொருள் எரிப்பானாக... மாலை மங்கும் வேளையில் ஆரோன் விளக்குகளை ஏற்றும்போது, உங்கள் தலைமுறைதோறும் ஆண்டவர் திருமுன் இடைவிடாமல் நறுமணப்பொருள் எரிப்பானாக! ஆண்டுக்கு ஒரு முறை பாவம் போக்கும் பலியின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துப் பாவக்கழுவாயை உங்கள் தலைமுறை தோறும் நிறைவேற்றுவான். ஏனெனில், அது ஆண்டவருக்குப் புனிதமிக்கதாகும்." - விடுதலைப்பயணம் 30:1,7,8,10.

"நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து. குனிந்து. முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள் ." - சங்கீதம் 95:6

உன் செல்வத்தைக் கொண்டு அவரைப் போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற் பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு. - நீதிமொழிகள் 3:9

...இதோ, கர்த்தாவே. தேவரீர் எனக்குக் கொடுத்த நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனைக் கொண்டு வந்தேன். - உபாகமம் 26:10

..."ஆண்டில் மூன்று முறை நீ எனக்கு விழா எடுப்பாய்" - விடுதலைப்பயணம் 23:14

நிராதாரத்தே சென்று....

...ஆண்டவர் திருமுன் என் (அன்னாள்) உள்ளத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறேன். - 1 சாமுவேல் 1: 15

ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ண வெளியிலே போயிருந்து.... - ஆதியாகமம் 24: 63

...(சகளமாய் வந்த இறைவனாகிய) அவர் வழியாக எப்போதும் (மீட்கப்பட்ட ஆன்மாக்களாகிய) நாம் (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய) கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியைச் செலுத்துவோமாக. அவருடைய பெயரை அறிக்கையிடுவதன் வழியாக நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலியாகும். - எபிரேயர் 13:15,16

அப்பெண்... "ஐயா.... எங்கள் முன்னோர் இம்மலையில் வழிபட்டுவந்தனர். ஆனால் நீங்கள் எருசலேமில்தான் வழிபட வேண்டும் என்கிறீர்கள்" என்றார். இயேசு அவரிடம்," அம்மா, என்னை நம்பும்; காலம் வருகிறது. அப்போது நீங்கள் தந்தையை இம்மலையிலோ எருசலேமிலோ வழிபட மாட்டீர்கள்.... காலம் வருகிறது. ஏன், வந்தே விட்டது! அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். தம்மை வழிபடுவோர் இத்தகையோராய் இருக்கவே தந்தை விரும்புகிறார். கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்" என்றார். - யோவான் 4:19-24

"உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து." - மத்தேயு 22:37

மீதானத்தே செல்க:

...கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில். - 1 கொரிந்தியர் 3:17

உங்கள் உடல் நீங்கள் (அருவக்) கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட (இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவி தங்கும் கோவில் ... - 1 கொரிந்தியர் 6: 19

விண்ணகத்தில் உள்ள கோவில், அதாவது சந்திப்புக் கூடாரம் திறக்கக் கண்டேன்.... - திருவெளிப்பாடு 15: 5

நகருக்குள் கோவில் காணப்படவில்லை. ஏனெனில் எல்லாம் வல்ல (அருவக்) கடவுளாகிய ஆண்டவரும், (மண்ணுலகில் மனிதனாகப்பிறந்துவந்து, பொறிவாயில்ஐந்தவித்து, கூற்றம்குதித்த கடவுளாகிய) ஆட்டுக்குட்டியுமே அதன் கோவில். அந்நகருக்கு ஒளிகொடுக்கக் கதிரவனோ, நிலாவோ தேவைப்படவில்லை. கடவுளின் மாட்சியே அதன் ஒளி; ஆட்டுக்குட்டியே அதன் விளக்கு. - திருவெளிப்பாடு 21: 22,23

இரட்சிக்கப்படுகிற (தடுத்தாட்கொள்ளப்படுகிற) ஜனங்கள்... உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள். தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். - வெளிப்படுத்தினவிசேஷம். 21: 24-27

இறைவன் இருப்பது எங்கே?

9. ஆக்கில்அங் கேஉண்டாய் அல்லதுஅங்கு இல்லையாய்ப்
பார்க்கில் பரம்அதுஅன்று உந்தீபற
பாவனைக்கு எய்தாதுஎன்று உந்தீபற.

சொற்பொருள்:

பாவனை = நினைவு; அபிநயம்.

பதவுரை:

ஆக்கில் அங்கே உண்டாய் = இறைவன் இருப்பதை நம்பி, மனம் ஒன்றிப் பார்த்தால், அவ்விடத்தில் இறைவன் காட்சியளிப்பதை நாம் உணரமுடியும்.

அல்லது = அது அன்றி

அங்கு இல்லையாய்ப் பார்க்கில் பரம் அது அன்று = நம்பிக்கையில்லாமல் பார்த்தால் அவ்விடத்தில் இறைவன் இருப்பதை உணரமுடியாது.

பாவனைக்கு எய்தாது = வெறும் பாவனைக்கு இறைவன் கிட்டமாட்டார்.

கருத்துரை:

ஓரிடத்தில் இறைவன் இருப்பதை நம்பி, மனம் ஒன்றிப் பார்த்தால், அவ்விடத்தில் இறைவன் காட்சியளிப்பதை நாம் உணரமுடியும். அதுவன்றி, நம்பிக்கையில்லாமல், மனம் ஒன்றாமல் பார்த்தால், அவ்விடத்தில் இறைவன் இருப்பதை உணரமுடியாது. இறை பரம் பொருளை அடைவதற்கு பாவனை நிலை பயன்படாது..

விளக்கவுரை:

முழுமனதுடன் நாம் இறைவனைத் தேடும்போது, அவர் நமக்குக் கிட்டுவார். வெறும் பாவனைக்கு அவர் கிட்டமாட்டார்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படு பரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே . . . .

வள்ளலார் - திருவருட்பா 3269

இப்பேரண்டத்தை ஆளுகை செய்யும் அரசனாக இறைவன் இருக்கின்றபோதும், தம் அடியார்களின் அன்பு என்னும் குடிசைக்குள் அவர் புகுவார். இப்பேரண்டமே அவர் உடலாய் இருக்கின்ற போதும், தம் அடியார்களின் அன்பு என்னும் வலைக்குள் அவர் சிக்கிக் கொள்வார்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்.

- திருமந்திரம் 2290

விவிலிய ஒப்பு:

கடவுளைக் காண்போர்

" தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்." - மத்தேயு 5: 8

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்..." - எபிரேயர் 11: 6

...தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார். -எபிரேயர் 12:14

"அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை; ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார்." 1 யோவான் 4:8

நம்மில் கடவுள்:

...கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார். - 1 யோவான் 4:16

"நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?... கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில்." - 1 கொரிந்தியர் 3:16,17.

நம்பிக்கை குறைவு என்றால்...

இயேசு அவரை நோக்கி, "...நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்" என்றார். உடனே அச் சிறுவனின் தந்தை," நான் நம்புகிறேன். என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்" என்று கதறினார். - மாற்கு 9:23,24

"அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் (உருவத்தில் வந்த இறைவனாகிய) அவர் அங்குப் பல வல்ல செயல்களைச் செய்யவில்லை." - மத்தேயு 13:58

நம்பிக்கை இருந்தால்:

"இயேசு அவர்களைப் பார்த்து," உங்கள் நம்பிக்கை குறைவு தான் காரணம். உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து இங்கிருந்து பெயர்ந்து அங்குப் போ எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது..." - மத்தேயு 17:20

இயேசு மறுமொழியாக, "அம்மா, உமது நம்பிக்கை பெரிது, நீர் விரும்பியவாறு உமக்கு நிகழட்டும்." என்று அவரிடம் கூறினார். - மத்தேயு 15:28

...இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் . - மத்தேயு 18:20

இறைவனைக் காண...

10. அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சாது உணர்ந்துஇருந்து உந்தீபற.
துய்ய பொருள்ஈதுஎன்று உந்தீபற

சொற்பொருள் :

அஞ்சு = ஐம்பெரும் பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, வெளி.

அஞ்சாக = மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகள்; இவற்றை உள்ளடக்கிய உடல்.

துஞ்சாது = தூங்காது, மயங்காது, சோர்வு இன்றி,

துய்யபொருள் = தூய்மையான பொருள் - தூய்மையே உருவான இறைவன்.

ஈது = இது

பதவுரை :

அஞ்சே அஞ்சாக = ஐம்பெரும் பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, வெளி என்னும் இவற்றால் உருவான ஐம்பொறிகளான மெய், வாய், மூக்கு, கண், காது இவற்றை உள்ளடக்கிய உடலில் குடி கொண்டுள்ள ஆன்மா.

அறிவே அறிவாக =(தன் சிற்றறிவின் வழி அல்லாமல்) இறைவனின் திருவருள் சக்தியின் முற்றறிவே அறிவாகக் கொண்டு,

துஞ்சாது = சோர்ந்து போகாது, இடைவிடா ஊக்கமுடன்

உணர்ந்து இருந்து = உணர்ந்திருக்கும்போது

துய்யபொருள் ஈது என்று = தூய்மையே உருவான விமலனாகிய இறைவனைக் காணலாம்.

கருத்துரை :

ஐம் பூதங்களால் உருவான உடலில் குடிகொண்டுள்ள ஆன்மா, இறைவனின் திருவருள் சக்தியின் முற்றறிவே அறிவாகக் கொண்டு, இடைவிடா ஊக்கமுடன் உணர்ந்திருக்கும் போது, தூய்மையே உருவான விமலனாகிய இறைவனைக் கண்டு களிக்கலாம்.

விளக்கவுரை :

ஐம் பூதங்களால்ஆன உடலில் குடிகொண்டுள்ள சிற்றான்மா, இப்பேரண்டமே உருவாகக் கொண்டுள்ள பேரான்மாவாகிய இறைவனின் ஒரு பகுதி 'தான்' என்று உணர இயலாமல், இவ்வுடலே 'தான்' என்று மயங்கி நிற்கிறது. அதாவது, சிற்றான்மா தன்னையும் உணராமல், தன்னை உருவாக்கிய இறைவனையும் உணராமல், மறைந்து போகிற இவ்வுடலே 'தான்' என்று மயங்கி நிற்கின்றது." "உணர்த்த உணர்தலின்" என்னும் சிவஞான போத சொற்றொடருக்கு இணங்க, இறைவனின் திருவருள் சக்தியின் முற்றறிவே அறிவாகக் கொண்டு, தூய்மையே உருவான பேரான்மாவைக் கண்டு இன்புறுகின்றது சிற்றான்மா.

விவிலிய ஒப்பு:

அஞ்சே அஞ்சாக, அறிவே அறிவாக...

"...ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் (ஆதாம் - மண்ணால் ஆனவன்) மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் (ஜீவ ஆத்துமா) ஆனான்." - தொடக்கநூல் 2:7

"....(மனிதனாகிய) நீ மண்ணாய் இருக்கிறாய், (இறந்தவுடன்) மண்ணுக்கே திரும்புவாய்." - தொடக்கநூல் 3:19

நம்முடைய உருவம் (உடல்) இன்னதென்று அவர் (கடவுள்) அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூருகிறார். - சங்கீதம் 103:14

முந்தின மனுஷன் (ஆதாம்) பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் (சகளமாய் வந்த இறைவன்) வானத்திலிருந்து வந்த கர்த்தர்.

மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம். 1 கொரிந்தியர் 15:47,49.

...(இறைவனின் திருவருள் சக்தியின் முற்றறிவு துணை கொண்டு) தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் இயேசுவே ஆண்டவர் என சொல்ல முடியாது... 1 கொரிந்தியர் 12:3..

சத்திய ஆவி (இறைவனின் திருவருள் சக்தி)யாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். - யோவான் 16:13.

(சகளமாய் மனிதனாகப் பிறந்து வந்துள்ள இறைவனாகிய) என் பெயரால் (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய இறைவனான) தந்தை அனுப்பப்போகிற (இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவியாராம் துணையாளர் (தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களாகிய) உங்ளுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். நான் கூறிய அனைத்தையும் நினைவூட்டுவார். - யோவான் 14:26.

துய்ய பொருள் ஈது என்று...

கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. அருவக் கடவுளாகிய தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும், கடவுள் தன்மை கொண்டவருமான (சகளமாய் வந்துள்ள) ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார். யோவான் 1:18

...வழியும், உண்மையும், வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. - யோவான் 14:6.

(உருவத்தில் வந்துள்ள கடவுளாகிய) என்னைக் காண்பது (அருவக் கடவுளாகிய) தந்தையைக் காண்பது ஆகும். - யோவான் 14:9

நோக்காமல் நோக்க

11. தாக்கியே தாக்காது நின்றதுஓர் தற்பரம்
நோக்கில் குழையும்என்று உந்தீபற.
நோக்காமல் நோக்கஎன்று உந்தீபற

சொற்பொருள் :

தாக்கு = எதிர்படுதல்
தற்பரம் = மேம்பட்ட இறைவன்
நோக்கில் = பார்க்கில்
குழையும் = விலகுதல், இரங்குதல், அளிதல்.

பதவுரை :

தாக்கியே தாக்காது நின்றது ஓர் தற்பரம் = ஒப்புயர்வற்ற இறை பரம்பொருள் ஆன்மாக்களிடம் ஒன்றாயும், உடனாயும், வேறாயும் நிற்கும். அப்படி நின்றாலும், அதனால் தான் எவ்விதத்திலும் கட்டுப்படாமல்,பாதிக்கப்படாமல் நிற்கும் இயல்பினை உடையது ஆகும்.

நோக்கில் குழையும் = தன்னிடம் சரண்புகும் ஆன்மாக்களுக்கு அப்பரம்பொருள் இரக்கத்துடன் அருள்பாலிக்கும்.

நோக்காமல் நோக்க = ஆனால், இறைவனை நோக்கி சரண்புகும் ஆன்மாக்கள் தன் முனைப்போடும், தன் அறிவாலும் அவரை நோக்காது, அவரின் திருவருள் சக்தியையே துணையாகக் கொண்டு அணுகவேண்டும்.

கருத்துரை :

ஆன்மாக்களிடம் ஒன்றாயும், உடனாயும், வேறாயும் நிற்கும் ஒப்புயர்வற்ற இறைபரம்பொருள், அதனால் தான் எவ்விதத்திலும் கட்டுப்படாமல், பாதிக்கப்படாமல் நிற்கும் இயல்பினை உடையது ஆகும்.

தன்னிடம் சரண்புகும் ஆன்மாக்களுக்கு அப்பரம்பொருள் இரக்கத்துடன் அருள்புரியும். ஆனால், பரம்பொருளிடம் சரணடையும் ஆன்மாக்கள் தன் முனைப்போடும், தன் அறிவாலும் அதை நோக்காது. அதன் திருவருள் சக்தியேத் துணையாகக் கொண்டு அணுக வேண்டும்.

விளக்கவுரை :

உலகத்துப் பொருள்களில் முழுமையாகக் கலந்து நின்றாலும், அத்தகையக் கலப்பினால் 'தான்' எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் நிற்கின்ற இயல்பினை உடையவர் இறைவன்.

அவர் எங்கோ தொலை தூரத்தில் இருக்கின்றார் என்று பலர் எண்ணுகின்றனர். ஆனால், அவர் அணுவில் அணுவாய் ஒவ்வொன்றிலும் கலந்து நிற்கின்றார். பின்னை ஏன் ஆன்மாக்களால் அவர் அறிய இயலாமல் இருக்கின்றார்?

'நான் அறிகிறேன்; என்னால் முடியும்' என்று நான், என்னால், எனது என்ற தன்னறிவால், தன் முயற்சியால் அறிய முயலும் ஆன்மாக்களுக்கு, அவர் எங்கோ தொலை தூரத்தில் எட்டாப் பொருளாய் இருக்கின்றார். ஆனால், இறைவனின் திருவருள் சக்தியின் வழியே அடைய முயல்பவர்களுக்கு அண்மைப் பொருளாயிருக்கிறார்.

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி - மாணிக்கவாசகர்

இறைவனின் அருளை, திருவருட் சக்தியைக் கிறித்தவம் பரிசுத்த ஆவி, தூய ஆவி எனக் குறிப்பிடுகிறது.

விவிலிய ஒப்பு :

"என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிட மாட்டேன்."- யோவான் 6: 37

"தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார்; ஏனெனில், எதற்காக, எப்படி, நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார்தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாக நமக்காகப் பரிந்து பேசுகிறார்." - உரோமையர் 8: 26

தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி, வேறு எவரும் ‘இயேசுவே ஆண்டவர்’ எனச் சொல்ல முடியாது. - 1 கொரிந்தியர் 12:3

இறைவனை அவரது திருவருளே கண்களாகக்கொண்டு காணவேண்டும் என்று சைவ சித்தாந்தம் கூறுவதும், தூய ஆவியால் (இறைவனின் திருவருள்) அன்றி ‘இயேசுவை ஆண்டவர்’ என்று சொல்ல முடியாது என்று கிறித்தவம் கூறுவதும் ஒப்பு நோக்கத்தக்கவை ஆகும்.

“சத்திய ஆவியாகிய அவர் வரும் போது. சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.” - யோவான் 16:13

“நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.” - எபேசியர் 4:30.

தவத்தில் தலைவர்

12. மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர்என்று உந்தீபற
தவத்தில் தலைவர்என்று உந்தீபற.

சொற்பொருள் :

மூலை = ஒடுக்கு - ஒதுக்கிடம் - ஆன்மாக்கள் பாவத்தினால் கட்டப்பட்டுள்ள கட்டுநிலை - பாவநிலை.

முற்றம் = முன்னிடம் - ஆன்மாக்கள் இறையருளால் பாவக்கட்டு அகன்ற நிலை - தூயநிலை.

சாலப்பெரியர் = மிகப் பெரியவர்

பதவுரை :

மூலை இருந்தாரை = மல (பாவ) த்தினால் கட்டப்பட்ட, கட்டுநிலையாகிய பாவநிலையில் இருந்த ஆன்மாவை

முற்றத்தே விட்டவர் = தன் பேரருளால் அதன் பாவ நிலையை அகற்றி, தூய நிலைக்கு கொண்டு வந்துள்ள இறைவன்.

சாலப் பெரியர் = மிகப் பெரியவர்.

தவத்தில் தலைவர் = அவர் தவத்தில் தலைவர்.

கருத்துரை :

மல(பாவ)த்தினால் கட்டப்பட்ட கட்டுநிலையாகிய பாவநிலை என்னும் மூலையில் இருந்த ஆன்மாவை, தன்பேரருளால் அதன் பாவ நிலையை அகற்றி, தூய நிலையாகிய முற்றத்துக்குக் கொண்டு வந்துள்ள இறைவன் மிகப்பெரியவர். அவரே தவத்தில் தலைவர்.

விளக்கவுரை :

மனிதன் பிறக்கும் போதே — அவனுடைய பிறவியிலேயே பாவம் அவனைத் தொடர்ந்து வருகிறது. பிறப்பிலேயே மனித இயல்போடு ஒட்டி வருகின்ற இப்பாவத்தை சகசமலம் அல்லது ஜென்ம பாவம் எனக் கூறுவர்.

சகசம் = இயல்பு   மலம் = பாவம்.

சகசமலம் = இயல்பிலேயே (பிறக்கும் பொழுதே) தொடர்ந்து வரும் பாவம். - சிவஞானபோதம் உரை. பக்.10 -டாக்டர் **மு. தெய்வநாயகம்.**

சகசமலத்திலிருந்து ஆன்மாவை விடுவிக்கும் முயற்சியில் துன்பத்தை விரும்பி ஏற்றுக் கொள்ளும் தவத்தை இறைவனோடு இணைத்துக்கூறுகின்றதுசைவசித்தாந்தம்.உலகமக்கள்எல்லாரும் செய்த தவத்தை விட, உலக மக்களுக்காக இறைவன் செய்த தவமே மிகவும் உயர்ந்தது... சகச மலமாகிய மூலையிருந்தாரை விடுவித்து, அம்பலமாகிய முற்றத்தே கொண்டு நிறுத்தியவராகிய இறைவன் மிகவும் பெரியவர். எல்லாத் தவங்களிலும் அவர் தவமே தலைமை பெற்றது. அதுவே ஆன்ம மீட்பை மக்களுக்கு எல்லாம் அருளுவது என்பன விளக்கப்படுகின்றன. - மே.நூ. பக்.40

தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு

- சிவஞானபோதம் - சூத்திரம் 8

எனவே 'தவத்தில் தலைவரின்' தவம் உலக மக்கள் செய்யும் தவம் போன்று ஐம்புலன்களையும் அடக்கும் தவம் அல்ல. ஏனெனில் ஐம்புலன்களையும் அடக்காதவன் இறைவனாக இருக்க முடியாது. அப்படியானால் இறைவன் செய்த தவம் என்ன?

" பொறிவாயில் ஐந்து அவித்து " - குறள் 6

(ஐம்புலன்கள் நிறைந்த உடலை உடைய மனிதனாக இம் மண்ணுலகில் வந்து, தன்னையே பொறியாகிய கொலைக் கருவியில் பலியாகக் கொடுத்து)

தன்னுயிர் தானறப் பெறுதல் – குறள் 268

(தன் உயிரைத் தானே மனம் உவந்து கொடுத்தல்) ஆகிய வள்ளுவப் பெருந்தகை காட்டியுள்ள தவம் ஆகும்.

ஆன்மாக்களின் பாவக்கட்டு அகல,

'பொறிவாயில் ஐந்து அவித்து',

'தன்னுயிர் தானறப் பெற்றவராகிய இறைவன்;

'கூற்றம் குதித்தலும் கை கூடும்' - குறள் 269

என்னும் அடுத்த குறட்பாவின் கருத்துபடி மரணத்திற்கு அதிகாரியான கூற்றனைத் தம் மரணத்தினால் வென்று, தன்னுயிரைத் தானே மீண்டும் எடுத்துக் கொண்டு, உயிர்பெற்று எழுந்தார். எனவே தான் அவர் 'தவத்தில் தலைவர்' ஆகிறார்.

மூல நோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய் -

திருமறைக்காடு - 9 - அப்பர் தேவாரம்

விவிலிய ஒப்பு:

மூலை இருந்தாரை

மென்காற்று வீசிய பொழுதினிலே, தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுள் உலவிக் கொண்டிருந்த ஓசைகேட்டு, மனிதனும் (ஆதாம்) அவன் மனைவியும் (ஏவாளும்) ஆண்டவராகிய கடவுளின் திருமுன்னிலிருந்து விலகி, தோட்டத்தின் மரங்களுக்கு இடையே ஒளித்துக் கொண்டனர். ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு "நீ எங்கே இருக்கின்றாய்?" என்று கேட்டார். உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால் எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி (கீழ்ப்படியாமையின் காரணமாக இறைவனின் திருவருள் சக்தி விலகிச் சென்ற நிலையில்) இருக்கிறேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன் என்றான் மனிதன். - தொடக்க நூல் 3: 8-10

நேர்மையாளரே இல்லை, ஒருவர் கூட இல்லை; மதி நுட்பம் உள்ளவர் ஒருவருமில்லை. கடவுளைத் தேடுபவர் எவராவது உண்டோ? எல்லாரும் நெறி பிறழ்ந்தனர்; ஒருமிக்கக் கெட்டுப்போயினர். - உரோமையர் 3: 10 — 12

முற்றத்தே விட்டவர்:

"நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்." - 1யோவான் 2: 2

அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். 1யோவான் 3: 5

"(அருவக் கடவுளாகிய) அவர் மகனாகிய (இம்மண்ணுலகில் மனிதனாகப் பிறந்து வந்த கடவுளாகிய) இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும்." - 1 யோவான் 1:7

"நம் பாவங்களை நாம் ஒப்புக் கொள்வோமென்றால், கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப் படுத்துவார்." - 1 யோவான் 1:9

"முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை; இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள். முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவராயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்." - 1 பேதுரு 2: 10

மறுநாள் இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட யோவான், 'இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்." - யோவான் 1 : 29

காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள், இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்க முடியாது... இயேசுகிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூ யவராக்கப்பட்டிருக்கிறோம். - எபிரேயர் 10: 4,10

"கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்... மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார்." - 1 கொரிந்தியர் 15:3, 4

சாலப்பெரியர்:

...ஆடு (ஆன்மாக்)களுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். ஒருவனும் அதை (ஜீவனை) என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு... யோவான் 10: 15,18

"நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன்"- யோவான் 11 : 25

தவத்தில் தலைவர்:

"ஊனும் இரத்தமும் கொண்ட அப்பிள்ளைகளைப் போல் அவரும் அதே இயல்பில் பங்கு கொண்டார். இவ்வாறு சாவின்மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாகவே அழித்து விட்டார்." - எபிரேயர் : 2 : 14

...கிறிஸ்து தம்மையே ஒரே முறை பலியாகக் கொடுத்தார். - எபிரேயர் 9 : 25

சிற்றறிவினால் தேடாதே

18. ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டுஅற்ற இடம்சிவம் உந்தீபற
தேடும் இடம்அதுஅன்று உந்தீபற.

சொற்பொருள் :

ஓட்டு = ஓடுகை; ஓட்டம்.

ஓட்டு அற்று = ஓட்டம் தவிர்த்து; ஆன்மா தன் சிற்றறிவினால் ஐம்புலன்கள் வழி உலகப் பொருட்கள் பலவற்றையும் பற்றிப்பிடித்து, ஒன்றிலும் நிறைவு பெறாமல் ஓடிக் களைத்து நிற்றல்.

நின்ற உணர்வு = தன் முயற்சியாகிய அத்தகைய வீண் ஓட்டத்தைத் தவிர்த்து, இறைவனின் திருவருள் சக்தியின் வழிகாட்டலில் ஆன்மா நிலைத்து நிற்கும் இடம்.

பதி = இறைவன்

முட்டி = நேர்பட்டு

தேட்டு அற்ற = வீண் ஓட்டத்தைத் தவிர்த்த; மனம் அலைபாயாமல் நிற்கின்ற.

சிவம் = அன்பே உருவான இறைவன்.

பதவுரை :

ஓட்டு அற்று = ஆன்மா தன் சிற்றறிவினால் (பசுஞானம்) ஐம்புலன்களின் வழி உலகப் பொருட்கள் பலவற்றையும் பற்றிப் பிடித்து, ஒன்றிலும் நிறைவு பெறாமல்

நின்ற உணர்வு = தன் முயற்சியாகிய அத்தகைய வீண் ஓட்டத்தைத் தவிர்த்து, இறைவனின் திருவருள் சக்தியின் வழி காட்டலின் (பதிஞானம்) படி நின்று

பதிமுட்டி = இறைவனைக் கண்டு வழிபடுதல் வேண்டும்.

அது தேடும் இடம் அன்று = மாறாக, அங்கும் இங்கும் தன் முயற்சியால் அலைந்து திரிவதனால் காணப்படுபவர் அல்ல இறைவன்.

தேட்டு அற்ற இடம் சிவம் = தன் முனைப்புடன் தேடுதல் தவிர்த்த இடத்தில் அன்பே உருவான இறைவன் நேர்படுவார்.

கருத்துரை :

ஆரவாரத்துடன் அங்குமிங்கும் வீணே அலைகின்ற மனம், இறைவனின் திருவருளைப் பெற்ற உடன், அசைவற்று இருக்கும். அந்நிலையில் இறைப்பேரின்பத்தில் மூழ்கி, வேறு நினைவின்றி அதில் திளைத்து நிற்கும். இந்நிலையே இறைவன் ஆன்மாக்களுக்கு காட்சியளித்து அருள்புரிகின்ற நிலையாகும். அது தவிர்த்து அங்கும் இங்கும் தேடிக் கண்டடையக்கூடியவர் அல்லர் இறைவன்.

விளக்கவுரை :

மெய்ப்பொருளாகிய இறைவன் ஆன்மாக்களால் அறிந்து கொள்ளப்படுவதற்கு அரியவர். ஆனால் அவர் இல்பொருளும் அல்லர். ஆன்ம அறிவாலும் (பசுஞானம்), உலகியல் அறிவாலும் (பாசஞானம்) அவரை அறிந்து கொள்ளல் இயலாது. இறைவனின் திருவருள் சக்தியின் வழிகாட்டலினால் (பதிஞானம்) மட்டுமே அவரை அறிந்து கொள்ளல் இயலும்.

அத்தகைய நிலையில் ஆன்மா இறைவனை அடைந்து, அவரைப் பற்றிக் கொண்டு, எல்லையில்லாப் பேரின்பத்தில் திளைத்திருக்கும். பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் அறிந்து கொள்ளப்பட இயலாத இறைவன் - பதிஞானத்தினாலேயே அறிந்து கொள்ளப்படுவார்.

'ஓட்டு அற்று நின்ற உணர்வு' என்னும் பகுதி சில பதிப்புகளில் 'ஒட்டு அற்று நின்ற உணர்வு' என்று காணப்படுகிறது. இதனால் பொருள் வேறுபாடு எதுவும் இல்லை. 'ஒட்டு' என்பதற்கு தன் மீதும், உலகப் பொருள்கள் மீதும் ஆன்மா வைக்கும் 'பற்று' என்றும், 'ஒட்டு அற்று' என்பதற்கு அத்தகைய 'பற்று அகன்றநிலை' என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

விவிலிய ஒப்பு:

ஓட்டு அற்று நின்ற உணர்வு

...வான தூதர் அப்பெண்களைப் பார்த்து "நீங்கள் அஞ்சாதீர்கள்" சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை...

அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். - மத்தேயு 28 : 5, 8, 9.

"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை" நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். - யோவான் 15 : 16

(சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) இயேசு: நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். (உருவத்தில் வந்த இறைவனாகிய) என்னாலேயல்லாமல் ஒருவனும் (அருவக் கடவுளாகிய) பிதாவினிடத்தில் வரான். - யோவான் 14 : 6

சரீர முயற்சி (பசுஞானம், பாசஞானம்) அற்பபிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது (பதிஞானமானது) இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. - 1 தீமோத்தேயு 4 : 8

தேட்டு அற்ற இடம் சிவம்

...இயேசு நெருங்கி வந்து (சீடர்களாகிய) அவர்களோடு நடந்து சென்றார். ஆனால் (உருவத்தில் வந்த இறைவனாகிய) அவர் யார் என்று அறிந்து உணர முடியாதவாறு (சீடர்களாகிய) அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் (அகக்)கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். - லூக்கா 24:15, 16, 30, 31

தேடும் இடம் அது அன்று

இயேசு கரையில் நின்றார். ஆனால் அவர் இயேசு என்று சீடர்கள் அறிந்துகொள்ளவில்லை. - யோவான் 21 : 4

திருவருள் சக்தியைப் பெறுதல்

14. கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை உடனேநின்று உந்தீபற
உன்னையே கண்டதுஎன்று உந்தீபற

சொற்பொருள் :

கிழவி = உரிமை உடையவள். பரம்பொருளை விட்டு ஒருநாளும் நீங்காத உரிமை உடையது இறைசக்தியாகிய திருவருள்.

கிடந்த கிழவி = ஆன்மாவினால் அறிந்து கொள்ளப்படாமல் இருக்கும் இறைவனின் திருவருள் சக்தி.

கிள்ளி எழுப்பி = வலிந்து வேண்டிப்பெற்றுக் கொள்ளுதல்; கிள்ளுதல் - தோண்டுதல்.

உடந்தை = உடன்படுதல் , துணை, உறவு.

பதவுரை :

கிடந்த கிழவியை = ஆன்ம அறிவினால் இதுவரை அறிந்து கொள்ளப்படாமல் இருந்த இறைவனின் திருவருள் சக்தியை

கிள்ளி எழுப்பி = (இறைவனிடமே) வலிந்து கேட்டுப் பெற்றுக்கொண்டு,

உடந்தை உடனே நின்று = அதனைவிட்டுப் பிரியாது, அதன் வழி காட்டலின்படியே நடந்து கொள்ளல் வேண்டும்.

உன்னையே கண்டது = அந்நிலையில் இறைவன் உன்னை முழுமையாக ஆண்டுகொள்வார்.

கருத்துரை :

ஆன்ம அறிவினால் இதுவரை அறிந்து கொள்ளப்படாமல் இருந்த இறைவனின் திருவருள் சக்தியை (இறைவனிடமே) வலிந்து கேட்டுப் பெற்றுக் கொண்டு, அதனை விட்டுப் பிரியாது, அதன் வழிகாட்டலின் படியே நடந்து கொள்ளல் வேண்டும். அந்நிலையில் இறைவன் உன்னை முழுமையாக ஆண்டுகொள்வார்.

"உன்னையே கண்டது" என்பதற்கு, அதுவரை நம்மிடம் இருந்த ஆன்மீகக் குறைபாடுகளை உணராத நாம், இறைவனின் திருவருள் சக்தி நம்மிடம் வரும்போது 'நம்மையே நாம் அருவருக்கத் தக்கவாறு உணர்த்தப் படுவோம்' என்றும் பொருள் கொள்ளலாம்.

விளக்கவுரை :

ஆன்ம அறிவினால் அறிந்து கொள்ளப்படாமல் இருக்கும் இறைவனின் திருவருள் சக்தியை, மனிதனாக வந்த இறைவனாகிய சற்குரு காட்டிய வழியில் ஆன்மா பெற்றுக் கொள்ள முடியும். சற்குருவின் அருள்பெற்ற ஞானாசிரியனும் வழிகாட்டுதல் உண்டு.

இறைவனின் திருவருள் சக்தியைப் பெற்றுக் கொள்ளும்வரை, இறைவனைப்பற்றி ஒருவர் அறிந்து கொள்ளல் கூடும்; உணர்தல் கூடும். ஆனால், இறைவனை அனுபவித்தல் அல்லது இறைவனோடு உறவாடுதல் என்பது இயலாத செயலாகும்.

எடுத்துக்காட்டு :

மாம்பழம் என்ற ஒன்றைப் பற்றி "அறிதல்" என்பது வேறு; அதைக் "காணுதல்" என்பது வேறு; அதை "சுவைத்தல்" என்பது முற்றிலும் மாறான ஓர் அனுபவம் ஆகும்.

இறைவனை அனுபவிப்பவரை, அந்த இறைவன் முழுமையாக ஆண்டு கொள்கிறார். இறைவனை அறிந்தவரும், உணர்ந்தவரும் துன்பங்கள் மிகும் போது, இறைவனை விட்டுப் பின்வாங்குதல் கூடும். ஆனால், இறைவனை அனுபவிப்பவர் எத்தகைய கொடுந் துன்பம் வந்த போதும், அவரை விட்டுப் பின்வாங்கவே மாட்டார்.

(எ.கா) திருநாவுக்கரசர்; பவுல் அடிகளார்.

திருநாவுக்கரசர் சமணத்திலிருந்து மீண்டும் சைவ சமயத்தைத் தழுவியதால் நாடாளும் மன்னனால்

1. சுண்ணாம்புச் சூளையில் வைத்து சுடப்பட்டார்.
2. கல்லில் பிணைக்கப்பட்டு கடலில் போடப்பட்டார்.
3. மண்ணில் தலை வரை அவரைப் புதைத்து, யானை அவர் தலையை மிதிக்கக் கட்டளையிடப்பட்டார்.

எந்த நிலையிலும், அவர் இறைவனைத் துதித்து, பேராபத்திலிருந்து மீண்டு வந்தது மட்டுமல்லாமல், தான்

துன்புறுத்தப்படக் காரணமாயிருந்தவர்களைத் தண்டிக்க நினைக்கவும் இல்லை. இந்த வல்லமை இறைவனின் திருவருள் சக்தி (கிடந்த கிழவி)யினாலேயே அவருக்குக் கிடைத்தது.

கிறிஸ்துவின் அடியார் பவுல், கிறிஸ்துவின் நிமித்தம் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டும், இறைவனைத் துதித்துப்பாடியது மட்டுமல்லாமல், தான் துன்புறுத்தப்படக் காரணமாயிருந்தவர்களைத் தண்டிக்க நினைக்கவும் இல்லை. மக்கள் திரண்டெழுந்து... (பவுல் அடிகளாரைத்) தாக்கினார்கள். மேலுடைகளைக் கிழித்து அவர்களைத் தடியால் அடித்து... கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தனர். நள்ளிரவில்... (பவுலும், சீடரும்) கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினர். - திருத்தூதர் பணிகள் 16: 22-25

...பன்முறை சிறையில் அடைபட்டேன்; கொடுமையாய் அடிபட்டேன், பன்முறை சாவின் வாயிலில் நின்றேன். ஐந்துமுறை யூதர்கள் என்னைச் சாட்டையால் ஒன்று குறைய நாற்பது அடி அடித்தார்கள். மூன்றுமுறை தடியால் அடிபட்டேன். ஒருமுறை கல்லெறிபட்டேன். மூன்று முறை கப்பல் சிதைவில் சிக்கினேன். ஓர் இரவும் பகலும் ஆழ்கடலில் அல்லலுற்றேன், பயணங்கள் பல செய்தேன்; அவற்றில் ஆறுகளாலும் இடர்கள், கள்வராலும் இடர்கள், என் சொந்த மக்களாலும் இடர்கள், பிறமக்களாலும் இடர்கள், நாட்டிலும் இடர்கள், காட்டிலும் இடர்கள், கடலிலும் இடர்கள், போலித் திருத்தூதர்களாலும் இடர்கள், இப்படி எத்தனையோ இடர்களுக்கு ஆளானேன்...II கொரிந்தியர் 11 :23 - 26

கிறிஸ்துவின்அன்பைவிட்டுநம்மைப்பிரிப்பவன்யார்?-ரோமர்8:36

...கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டுமல்ல, அவருக்காகத் துன்பங்களை ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள். ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுகிறேன், மகிழுங்கள். - பிலிப்பியர் 1 : 19 - 4: 4

அமுதூறும் மாமழை நீரதினாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்

- திருமந்திரம் - 248

விவிலிய ஒப்பு:

"கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்புதல்" என்பதைக் கிறித்தவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல், ஆவியின் அபிஷேகம் என்று கூறுவர்.

"யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார்; நீங்களோ இன்னும் சில நாள்களில் தூய ஆவியால் (இறைவனின் திருவருள் சக்தியினால்) திருமுழுக்குப் பெறுவீர்கள்." - திருத் தூதர்பணிகள் 1 : 5

கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் ...விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி. லூக்கா 11 : 9, 13

சற்குருவின் அருள்பெற்ற ஞானாசிரியன்

"பவுல் அவர்கள் மீது கைகளை வைத்ததும், தூய ஆவி அவர்கள் மேல் இறங்கினார். அப்பொழுது அவர்கள் பரவசப் பேச்சு பேசினர், இறைவாக்கும் உரைத்தனர்." - திருத்தூதர் பணிகள் 19 : 6

உன்மீதுஎன்கைகளைவைத்துத்திருப்பணியில்அமர்த்தியபோது எனக்குள் எழுந்த கடவுளின் அருள் கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன். -2 தீமோத்தேயு 1 : 6

பேதுரு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது அவருடைய சொற்களைக் கேட்ட அனைவர் மீதும் தூய ஆவி இறங்கி வந்தார்." திருத்தூதர் பணிகள் 10:44

"உண்மையை வெளிப்படுத்தும் (இறைவனின் திருவருள் சக்தி - அம்மை எனப்படும்) தூய ஆவியார் வரும் போது, அவர் முழுஉண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார், தாம் கேட்டதையே பேசுவார். வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். அவர் (மனிதனாகப் பிறந்து வந்த கடவுளாகிய சற்குரு - இயேசுகிறிஸ்துவாகிய) என்னிடமிருந்து கேட்டு (ஆன்மாக்களாகிய) உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிமைப் படுத்துவார். தந்தை (அப்பன் - இறைவன்)யுடையவை யாவும் என் (மகன் - சற்குருவி)னுடையவையே. எனவேதான் அவர் (தூய ஆவியார் - திருவருள் சக்தி - அம்மை) என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு (ஆன்மாக்களுக்கு) அறிவிப்பார்." - யோவான் 16 : 13-15

பரிசுத்த ஆவியானவரை நாம் ஏன்பெற வேண்டும்?

(கிடந்த கிழவியை ஏன் கிள்ளி எழுப்பவேண்டும்?)

தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது.

"தூய ஆவியார்தாமே சொல்வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்."- உரோமையர் 8 : 26

உன்னையே கண்டது

(இறைவனின் திருவருள் சக்தி நம்மிடம் வரும் போது, நம்மையே நாம் அருவருக்கத் தக்கவாறு உணர்த்தப்படுவோம்.)

"(இறைவனாகிய) உம்மைப்பற்றிக் காதால் மட்டுமே கேள்விப்பட்டேன், ஆனால் இப்பொழுது, என் கண்களே உம்மைக் காண்கின்றன. ஆகையால் என்னையே நொந்து கொள்ளுகின்றேன், புழுதியிலும் சாம்பலிலும் இருந்து மனம் வருந்துகின்றேன்." - யோபு 42 : 5, 6

"அப்பொழுது (ஏசாயா ஆகிய) நான்: ஐயோ! அதமானேன்! நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன், சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்." ஏசாயா 6 : 5

...தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் (சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்த கடவுளாகிய) 'இயேசுவே ஆண்டவர்' எனச் சொல்ல முடியாது. - 1 கொரிந்தியர் 12 : 3

"தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப்பெற்று. எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்." - திருத்தூதர் பணிகள் 1 : 8

தூய ஆவி	**= இறைவனின் திருவருள் சக்தி - அம்மை**
நீங்கள்	**= இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாக்கள்.**
கடவுள்	**= இறைவன் - அப்பன்**
எனக்கு	**= சற்குரு (மனிதனாகப் பிறந்து வந்த இறைவன்) மகன்**

"கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்." - உரோமையர் 8 : 14

திருவடிப்பற்று

15. பற்றை அறுப்பதுஓர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை அறுப்பர்என்று உந்தீபற
பாவிக்க வாரார்என்று உந்தீபற

சொற்பொருள் :

பற்று = விருப்பு, ஆசை. ‘யான்’ என்னும் அகப்பற்று, ‘எனது’ என்னும் புறப்பற்று.

ஓர்பற்று = ஒப்பற்ற இறைப்பற்று.

பற்றில் = பற்றிக் கொண்டால், பிடித்துக் கொண்டால்.

பாவித்தல் = பாசாங்கு செய்தல்; நடப்பது போல் நினைத்துக் கொள்ளுதல்; பாவனை.

பதவுரை :

பற்றை அறுப்பது = ‘யான்’ என்னும் அகப்பற்றையும், ‘எனது’ என்னும் புறப்பற்றையும் அறுக்கத்தக்க

ஓர் பற்றினைப் பற்றில் = ஒப்பற்ற இறைவனின் திருவடிப்பற்றை முறையாகப் பற்றிக்கொண்டால்

அப்பற்றை அறுப்பர் = ஆன்மாக்களிடம் உள்ள உலகப் பற்றுகளை இறைவனே அறுத்து எடுப்பார்.

பாவிக்க வாரார் = நாமே அவைகளை அறுத்து எறிந்து விடலாம் என்று நாம் பாவனை செய்து கொண்டால், இறைவன் இதற்குத் துணை வரமாட்டார்.

கருத்துரை :

‘யான் என்னும் அகப்பற்றையும், ‘எனது’ என்னும் புறப்பற்றையும் அறுக்கத்தக்க இறைவனின் திருவடிப்பற்றை, திருவருள் சக்தியில் நிரம்பி முறையாகப் பற்றிக் கொண்டால், ஆன்மாக்களாகிய மனிதர்களிடம் உள்ள உலகப்பற்றுகளை இறைவனே அறுத்து எடுப்பார்.

அப்படியின்றி, நம்முடைய 'தன்முயற்சி'யால் அவற்றை அறுத்து எறியலாம் என்று உள்ளத்தில் பாவனை செய்த கொண்டால், இறைவன் இதற்குத் துணைவரமாட்டார். எனவே உலகியல் பற்றுகளை அறுப்பதில் வெற்றி காண முடியாது.

விளக்கவுரை :

"உலகத்தைத் துறப்பேன்; உற்றாரைத் துறப்பேன்; பொன்னை வெறுப்பேன்; பொருளை வெறுப்பேன்; கானகம் செல்வேன்; கடுந்தவம் புரிவேன்".

என்றெல்லாம் சிந்திக்கும் போது, நம் உள்ளத்தில் உலகம், உற்றார், பொன், பொருள், யான் என்னும் நினைவுகள் எதிர்மறையாகவாவது தோன்றி மறையும். நம் நினைவை விட்டு அகலாமலேயே அவை நிற்கும்.

எனவே எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாக இருந்து, அதே நேரத்தில் தான் எதையும் பற்றிக் கொள்ளாமல் இருக்கும் இறைவனை, அவரது திருவருள் துணை கொண்டு நாம் பற்றிக் கொள்ளும்போது இறைவனே மற்ற பற்றுகளை அறுத்தெறிவார்.

பற்றுக பற்றற்றான் பற்றினை... எனத் திருவள்ளுவரும் இக்கருத்தையேக் கூறுகிறார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்

- திருமந்திரம் 2615

ஈசனிடம் அன்பு வைக்கலாம், பக்தி செலுத்தலாம், ஆசைபடத் தேவைஇல்லை. ஆசை என்பது கீழான மனநிலை; புறப்பற்றால் வருவது. அன்பு என்பது மனதின் உயர் பண்பு; அகப்பற்றால் வருவது.

விவிலிய ஒப்பு :

"உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் (அருவக் கடவுளாகிய) பிதாவின் அன்பில்லை." 1 யோவான் 2 : 15.

"பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் (பற்றற்றான்மேல் வைக்கும் பற்றாகிய) விசுவாசத்தினின்று பிறழ்ந்து திரிந்து பல வேதனைகளைத் தங்கள்மேல் வருவித்துக் கொள்கிறார்கள்.

(பற்றற்றானாகிய) கடவுளின் மனிதனாகிய நீ, இவற்றிலிருந்து தப்பிஓடு. (பற்றற்றான் பற்றாகிய) இறைப்பற்று, நம்பிக்கை, மனஉறுதி, பணிவு ஆகியவற்றை நாடித்தேடு (பற்றுக). - 1 தீமோத்தேயு 6 : 10, 11

"உன் முழு இருதயத்தோடும். முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் (பற்றற்றானாகிய) உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. (பற்றினைப் பற்றுக)." மத்தேயு 22 :37.

"நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்." - யோவான் 14:14

"நீங்கள் என்னுள்ளும், என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்." - யோவான் 15:7

(பற்றற்றானாகிய) ஆண்டவர் அவரைப் பார்த்து, "மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டு (பற்றுவைத்து)க் கலங்குகிறாய். ஆனால் தேவையானது (பற்றற்றான் பற்றினைப் பற்றுவது) ஒன்றே. மரியாவோ (பற்றற்றானாகிய இறைவனின்) நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்றார். - லூக்கா 10 :41, 42.

"உலகம் மறைந்து போகிறது; அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால் (பற்றற்றானாகிய) கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பார்." - 1 யோவான் 2 : 17

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு. - 1 தீமோத்தேயு 6: 7, 8, 11.

தாழ்மணிநாவு

16. உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
தழுவாமல் நிற்பர்என்று உந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற

சொற்பொருள் :

உழவாது = அலையாது
தழுவாமல் = ஈடுபடாமல்
தாழ்மணிநாவு = தரையின் மேல் வைக்கப்பட்டுள்ள மணியின் நாவு.

பதவுரை :

உழவாது = தம்மைத் துன்பத்தில் ஆழ்த்துகின்ற உலகப் பற்றுகளில் உழவாது

உணர்கின்ற யோகிகள் = தானாகவே நம்மைத் தேடிவந்து ஆட்கொண்ட இறைவனையே எப்பொழுதும் சிந்தையில் கொண்டுள்ள இறையடியார்கள்,

ஒன்றோடும் தழுவாமல் நிற்பர் = உலகியல் நிகழ்வுகள் ஒன்றோடும் தழுவாமல் நிற்பார்கள்.

தாழ்மணி நாவேபோல் = எப்படியெனில், தரையின் மேல் வைக்கப்பட்டுள்ள மணியின் நாவானது மணிக்குள் இருந்தாலும், மணியைத் தொடாமலும், அதனால் ஓசை எழுப்பாமலும் இருப்பது போல் யோகியர் தங்கள் உள்ளம் எந்நிலையிலும் அலைபாயாமல் இருப்பர்.

கருத்துரை :

தம்மைத் துன்பத்தில் ஆழ்த்துகின்ற உலகப்பற்றுகளில் உழவாது, தானாகவே தம்மைத் தேடிவந்து ஆட்கொண்ட இறைவனையே எப்பொழுதும் சிந்தையில் கொண்டுள்ள இறையடியார்கள், உலகியல் நிகழ்வுகள் ஒன்றோடும் தழுவாமல் நிற்பார்கள். எப்படியெனில், உயரே தொங்கவிடப்படும் மணியைத் தரை மீது வைக்கும் போது, அதன் நாவு மணிக்குள்ளேயே இருந்தாலும், அது மணியைத் தொடாமலும், அதனால் ஓசை எழுப்பாமலும் இருப்பது போல், யோகியர் தங்கள் உள்ளம் எந்நிலையிலும் அலைபாயாமல் இருப்பர்.

விளக்கவுரை :

தொங்கவிடப்படாமல் தரையிலே வைக்கப்பட்டுள்ள வெண்கல மணியின் நாவு, மணிக்குள்ளேயே இருந்தாலும் அசைவற்று, ஓசை எழுப்பாமல் இருப்பதுபோல, இறையடியார்களின் ஆன்மாக்கள் ஐம்பூதங்களால் ஆன உடல்களில் இருந்த போதிலும், உள்ளம் அசைவற்ற நிலையில் இருப்பதால் அவர்கள் இன்பத்தில் மகிழ்வதும் இல்லை; துன்பத்தில் துவள்வதும் இல்லை.

தொங்கவிடப்பட்டுள்ள மணியை அடிக்கும் போது ஓசை உண்டாவதும், அடியாத போது ஓசையின்றி நிற்பதும் போல, உலகியலில் உழலும் மக்கள் இன்பம் வரும் போது மகிழ்ச்சியால் ஆரவாரிப்பதும், துன்பம் வரும்போது துயரத்தால் துவண்டு புலம்புவதும் நடைமுறை நிகழ்வுகள்.

விவிலிய ஒப்பு:

தாழ்மணிநாவு: ஒன்றோடும் தழுவாமல் நிற்பவர்

...எந்நிலையிலும் மனநிறைவோடு இருக்கக் கற்றுக் கொண்டுள்ளேன். எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத்தெரியும்; வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ, எதிலும் எந்தச் சூழலிலும் வாழும் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு வலுவூட்டுகிறவரின் (இம்மண்ணுலகில் சற்குருவாகிய மனிதனாக வந்த கடவுள் மற்றும் இறைவனின் திருவருள் சக்தியானவர்களின்) துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. பிலிப்பியர் 4: 11 - 13

இயேசுவின் பெயரை முன்னிட்டு அவமதிப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டதால் திருத் தூதர்கள் மகிழ்ச்சியோடு தலைமை சங்கத்தை விட்டு வெளியே சென்றார்கள். - திருத்தூதர் பணிகள் 5:41

"...துன்பத்தில் தளராமனதுடன் இருங்கள்". - உரோமையர் 12 :12

"அத்திமரம் துளிர்த்து அரும்பாமல் போயினும், திராட்சைக் கொடிகள் கனிதராவிடினும், ஒலிவமரங்கள் பயன்அற்றுப் போயினும், வயல்களில் தானியங்கள் விளையாவிடினும், கிடையில் ஆடுகள் யாவும் அழிந்து போயினும், தொழுவங்களில் மாடுகள் இல்லாதுபோயினும், நான் ஆண்டவரில் களிகூருவேன்... ஆண்டவராகிய என் தலைவரே, என் வலிமை..." அபக்கூக்கு 3 : 17 - 19

...மக்கள் திரண்டெழுந்து (பவுல், சீலா என்னும் இறையடியார்களாகிய) அவர்களைத் தாக்கினார்கள். நடுவர்கள் அவர்களுடைய மேலுடைகளைக் கிழித்து அவர்களைத் தடியால் அடிக்க ஆணையிட்டார்கள். அவர்களை நன்கு அடித்துச் சிறையில் தள்ளி... அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டி வைத்தனர். நள்ளிரவில் பவுலும், சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினர். திருத்தூதர் பணிகள் 16: 23, 25

சோர்ந்துபோகும் மனிதர்கள்

"...அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்து போய் தனக்குள்ளே சாவை விரும்பி: நான் உயிரோடு இருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்." யோனா 4: 8

...பேதுரு: "ஆண்டவரே, உம்மோடு சிறையிடப்படுவதற்கும் ஏன், சாவதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன்" என்றார். இயேசு அவரிடம், "பேதுருவே, இன்றிரவு, என்னைத் தெரியாது என மும்முறை நீ மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். லூக்கா 22: 33-34

சற்று நேரத்திற்குப் பின் அங்கே நின்றவர்கள் பேதுருவிடம் வந்து, உண்மையாகவே நீயும் அவர்களைச் சேர்ந்தவனே... என்று கூறினார்கள் அப்பொழுது அவர் (பேதுரு), (இயேசுவாகிய) இந்த மனிதனை எனக்குத் தெரியாது என்று சொல்லி சபிக்கவும், ஆணையிடவும் தொடங்கினார். உடனே சேவல் கூவிற்று. - மத்தேயு 26: 73, 74

மரணத்திலும் மன்னித்தார்

"அவர்கள் ஸ்தேவான் மீது கல்லெரிந்த போது அவர், ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று வேண்டிக்கொண்டார். பின்பு முழந்தாள் படியிட்டு உரத்த குரலில் ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும் என்று சொல்லி உயிர் விட்டார். - திருத்தூதர் பணிகள் 7: 59, 60

...தீமை செய்பவரை எதிர்க்கவேண்டாம். மாறாக உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் - மத்தேயு 5: 39

ஆம் – ஓம் – ஆமென்

17. திருச்சிலம்பு ஓசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடுஎன்று உந்தீபற.
நேர்பட அங்கேநின்று உந்தீபற.

சொற்பொருள் :

திருச்சிலம்பு = இறைவனின் திருவருளாகிய சிலம்பு

சிலம்பு ஓசை ஒலி = ஓம் - ஆம் - ஆமென் என்று பலவாறு பல்சமய பக்தர்கள் உணர்ந்து கொள்ளும் இறைவனின் பாதஓசை. அகத்தில் (மனதில்) உணர்வதை ஓசை என்றும், புறத்தில் (செவியால்) கேட்பதை ஒலி என்றும் கூறுவர்.

நிருத்தன் = கூத்தபிரான் - நம் இருதயத்தில் இடையறாது அசைவாடிக் கொண்டிருக்கும் இறைவன்.

நேர்படல் = ஒன்றல், பெறுதல், பொருந்துதல்.

ஓசை = இறைவன் நம் உள்ளத்தில் இடையறாது அசைவாடிக் கொண்டிருத்தலின் அடையாளம்.

பதவுரை :

திருச்சிலம்பு ஓசை ஒலி வழியே சென்று = இறைவனை மனம், வாக்கு. காயத்தால், அதாவது சிந்தனை, சொல், செயலால் வணங்குபவர்களுக்கு, மெல்லிய ஓசை மூலம் அவர் தன்னை வெளிப்படுத்துகிறார். ஓம் - ஆம் - ஆமென் என்று பலரால், பலவகையாக உணரப்படும் அந்த மெல்லிய ஓசை வழியே சென்று, அவருடைய திருவடிகளைப் பற்றிக் கொண்டு,

நிருத்தனைக் கும்பிடு = நம் உள்ளங்களில் இடையறாது அசைவாடிக்கொண்டிருக்கும் இறைவனை வணங்குதல் வேண்டும்.

அங்கே நேர்பட நின்று = மனம் ஒன்றி அவரை வணங்கும்போது, அவர் காட்சியளித்து, அருள் வழங்கி, ஆட்கொள்ளுவார்.

கருத்துரை :

இறைவனை சிந்தனை, சொல், செயலால் வணங்குபவர்களுக்கு, தனது மெல்லிய ஓசை வழி அவர் தன்னை வெளிப்படுத்துகிறார். ஓம் - ஆம் - ஆமென் என்று பலரால் பலவகையாக உணர்ந்து

உரைக்கப்படும் அந்த மெல்லிய ஓசை வழியே சென்று, அவருடைய திருவடிகளைப் பற்றிக் கொண்டு, நம் உள்ளங்களில் இடையறாது அசைவாடிக்கொண்டிருக்கும் அவரை வணங்குதல் வேண்டும். அவரை மனம் ஒன்றி வணங்கும் போது, அவர் காட்சியளித்து, அருள் வழங்கி, ஆட்கொள்ளுவார்.

விளக்கவுரை :

"ஓம் தத் ஸத் என்று இறைவன் மூன்று வகையாக அழைக்கப்படுகின்றார்" - பகவத்கீதை 17: 23

ஓம் தத் ஸதிதி நிர்தேசோ ப்ரஹ்மணஸ் த்ரிவித : ஸ்மிருத :

ஓம் - நாதப் பிரமம் - சப்த பிரமம் - இப்பேரண்டம் படைக்கப்பட்டபோது முதலில் எழுந்தது இந்த ஒலியாகும்.

" Om, Tat, Sat" : this has been declared to be the triple designation of Brahman. Bhagavad Gita 17: 23

Om is the principal name of the Lord, because it means all that is manifest and the beyond. It also means "Yes" - Swami Swarupananda Commentary to Bhagavad-Gita

விவிலிய ஒப்பு:

"...உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து ஆம் என்றும், அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார்."

...தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறதே. 2 கொரிந்தியர் 1 : 19 , 20

(ஆமென் என்றால் அப்படியே ஆகட்டும் என்பது பொருள்)

ஓம் என்ற சொல்லிற்கு ஆம் என்றும் பொருள் உண்டு என்று சுவாமி சொரூபானந்தா விளக்கம் எழுதியிருப்பதும், இன்றும் கூட ஈழத்தமிழர்கள் ஆம் என்ற சொல்லை ஓம் என்றே உச்சரிப்பதும் சிந்திக்கத்தக்கவையாகும்.

ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. யோவான் 1:1

ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கி பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்தே உங்களுக்கு அறிவிக்கிறோம். - 1 யோவான் 1 : 1.

வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்... - யோவான் 1:14

...உண்மையும் சத்தியமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர்.... - வெளிப்படுத்தின விசேஷம் 3 : 14

இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. - வெளிப்படுத்தின விசேஷம் 19 : 13

மருள் — தெருள் — அருள்

18. மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே உந்தீபற
அதுவேஇங்கு உள்ளதுஎன்று உந்தீபற.

சொற்பொருள் :

மருள் = தெளிவின்மை - அறியாமை - மயக்கம். ஆன்மா இறைவனின் திருவருளில் திளைக்காமல், உலகியல் இன்பங்களில் ஈடுபட்டு மயங்கும் நிலை.

தெருள் = தெளிவு - ஞானம்.ஆன்மா இறைவனின் திருவருளில் மூழ்கி நிலையான பேரின்பத்தில் திளைக்கும் நிலை.

அருள் = இறைவனின் திருவருள்; கருணை; கிருபை.

மறக்கும் = அகலும்

அவன் = இறைவன்

பதவுரை :

அவன் கண் = தன் திருவருள் சக்தியுடன் கூடியுள்ள இறைவன் வழங்கும்

அருளை மறவாதே = திருவருளை விட்டுப் பிரியாதே.

மருளும் தெருளும் மறக்கும்= (இறைவனின் திருவருளைப் விட்டுப் பிரியாமல் ஆன்மா ஒன்றியிருக்கும் நிலையில்) மருளாகிய மயக்க நிலையும், தெருளாகிய தெளிவு நிலையும் மாறி மாறி வருகின்ற நிலை முற்றிலுமாக அகன்று, இறைவன் திருவருளில் தொடர்ந்து திளைக்கும் நிலை உருவாகும்.

அதுவே இங்குள்ளது = இறைவனின் திருவருள் மட்டுமே ஆன்மாக்கள் உய்வடைவதற்கு உரிய பற்றுக் கோடு. ஆதலால், அதனை விட்டு பிரியாமலிருத்தலே சிற்றான்மா செய்யத்தக்க செயலாகும்.

கருத்துரை :

இறைவன் வழங்கும் திருவருளை விட்டு ஆன்மாக்கள் பிரியாமல் இருந்தால், மயக்க நிலை - தெளிவு நிலை என்று மாறி மாறி வருகின்ற தன்மை முற்றிலுமாக அகலும். எனவே ஆன்மாக்கள் உய்வடைவதற்கு உரிய பற்றுக் கோடாகிய இறைவனின் திருவருள் சக்தியை விட்டுப் பிரியாமலிருத்தலே ஆன்மாக்கள் செய்யத்தக்க செயலாகும்.

விளக்கவுரை :

ஆன்மாக்கள் பல நேரங்களில் அறியாமையினால் உலகியல் இன்பங்களின் மூழ்கி, மருளாகிய மயக்க நிலையில் இருக்கும்.

உணர்த்த உணரும் 'சதசத்' ஆகிய ஆன்மாக்கள் இறைவனின் திருவருள் சக்தி நமக்கு உணர்த்தும் வேளைகளில் தெளிவு பெற்று, தெருள் ஆகிய தெளிவு நிலையில் இருக்கும்.

இப்படி மாறி மாறி இருக்கும் இயல்பினை உடையன ஆன்மாக்கள்.

உணவிலும், அசுத்தத்திலும் மாறி மாறி அமர்ந்து இன்பம் காணும் வீட்டு ஈ போன்ற இழிநிலையில் உள்ள ஆன்மா, மலரில் மட்டுமே அமர்ந்து தேன் உண்ணும் தேனீ போன்ற உயர்நிலைக்கு - பேரின்பத்தில் மட்டுமே திளைப்பதற்கு இறைவனின் திருவருட் சக்தியின் அருள் வேண்டும்.

விவிலிய ஒப்பு :

"...(உருவத்தில் வந்துள்ள கடவுளாகிய) நான் ஒளியாக உலகத்திற்கு வந்தேன்." யோவான் 12 : 46

...(உருவத்தில் வந்துள்ள கடவுளாகிய) நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே (மருளிலே) நடவாமல் ஜீவ ஒளியை (அருளை) அடைந்திருப்பான். யோவான் 8 : 12ண

இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடு இருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான் - யோவான் 12 : 36

(இறையடியார் - ஞானாசிரியன் - பவுலாகிய) நீ (ஆணவத்தால் கட்டுண்ட ஆன்மாக்களாகிய) அவர்களை (மருளாகிய) இருளிலிருந்து (இறைவனின் திருவருள் சக்தி எனும் அருளாகிய) ஒளிக்கும், (ஆணவம் என்கிற) சாத்தானின் அதிகாரத்திலிருந்து (அருளாகிய)கடவுளிடத்துக்கும் திரும்புமாறு அவர்கள் கண்களைத் திறக்க வேண்டும். - திருத்தூதர் பணிகள் 26 : 18

கடவுள் ஒளியாய் இருக்கிறார்... - 1 யோவான் 1 : 5

"(அருவக் கடவுளாகிய) அவர் (தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களாகிய) இறைமக்களுக்கான ஒளிமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கியுள்ளார். அவரே இருளின் (மருள்) அதிகாரத்திலிருந்து நம்மை விடுவித்துத் தன் அன்பார்ந்த மகனின் (அருளின்) ஆட்சிக்குட்படுத்தினார். (சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள) அம்மகனால்தான் நாம் பாவ மன்னிப்பாகிய மீட்பை (அருளை)ப் பெறுகிறோம்." - கொலோசையர் 1:12-14

உன்ன அரியன்

19. கருதுவ தன்முன் கருத்துஅழியப் பாயும்
ஒருமகள் கேள்வன்என்று உந்தீபற
உன்ன அரியன்என்று உந்தீபற

சொற்பொருள் :

கருதுதல் = எண்ணுதல், நினைத்தல்

பாயும் = விரைந்து வருதல்

ஒருமகள் = இறைவனைவிட்டு எப்பொழுதும் இணைபிரியாது நிற்கும் அவரது திருவருள் சக்தி

கேள்வன் = கணவன்

ஒருமகள் கேள்வன் = இறைவன்

உன்ன = நினைக்க

பதவுரை :

ஒருமகள் கேள்வன் = திருவருள் சக்தியைத் தன் பகுதியாகக் கொண்டுள்ள இறைவனை

கருதுவதன்முன் = அதே திருவருள் சக்தியின் துணை கொண்டு ஆன்மாக்கள் நினைக்கும் போது

கருத்தழியப் பாயும் = அந்த நினைப்பிலும் விரைவாக இறைவன் வந்து, தன்னை நினைக்கும் ஆன்மாக்களை ஆட்கொள்கிறார்.

உன்ன அரியன் = ஆனால், திருவருள் சக்தியின் துணையின்றி நினைக்கின்ற ஆன்மாக்கள் அறிந்து கொள்வதற்கு இறைவன் அரியவர் ஆகின்றார்.

கருத்துரை :

திருவருள் சக்தியின் துணைகொண்டு ஆன்மாக்கள் இறைவனை நினைக்கும்போது, அந்த நினைப்பிலும் விரைவாக வந்து அவற்றை அவர் ஆட்கொள்கிறார். ஆனால், திருவருள் சக்தியின் துணையின்றி ஆன்மாக்கள் தன் முயற்சியிலும், தற்போதத்திலும் அடைய நினைக்கும்போது, இறைவன் அந்த ஆன்மாக்களால் அறிதற்கு அரியவன் ஆகின்றார்.

விளக்கவுரை :

இறைவன் திருவருளினால் மட்டுமே இறைவனை ஆன்மாக்கள் அடைய முடியும். பெரிய ஞானிகள் கூடத் தங்கள் ஞானத்தின் செருக்கினால் இறைவனை அடைய முறப்பட்டுத் தோல்வியே கண்டுள்ளனர். ஆனால் பல பாமர மக்கள், எளியவர்கள் தங்கள் பக்தியினால் - இறைவனின் திருவருள் சக்தியின் துணைகொண்டு இறைவனை எளிதில் கண்டு, களித்து அனுபவித்துள்ளனர்.

...உள் மகிழ்ந்து உள்நின்று அடிதொழ
கண்ணவன் என்று கருதும் அவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றி நின்றானே.

- திருமந்திரம் 1505

பாசிக் குளத்தில் வீழ்கல்லா மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற்று அண்ணலை
நேசத்து இருந்த நினைவு அறியாரே.

- திருமந்திரம் 1506

விவிலிய ஒப்பு:

உன்ன அரியன்

"(இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் (மனிதனாகப் பிறந்துவந்துள்ள கடவுளாகிய) 'இயேசுவே ஆண்டவர்' எனச் சொல்ல முடியாது." - 1 கொரிந்தியர் 12 : 3

"...(இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார்; ஏனெனில், எதற்காக, எப்படி நாம் (ஒருமகள் கேள்வனாகிய) இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. (ஒருமகளாகிய) தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்." - உரோமையர் 8 : 26

"சிலுவை பற்றியச் செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது (ஒருமகள் கேள்வனாகிய) கடவுளின் வல்லமை. 1 கொரிந்தியர் 1 : 18

கருதுவதன் முன் கருத்தழியப் பாயும்

"தொழுகைக் கூடங்களுக்கும், ஆட்சியாளர், அதிகாரிகள் முன்னும் உங்களைக் கூட்டிக் கொண்டு போகும் போது எப்படி பதிலளிப்பது, என்ன பதில் அளிப்பது, என்னபேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனெனில் நீங்கள் பேச வேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார்." - லூக்கா 2 : 11, 12

'என் அடி சறுக்குகின்றது' என்று நான் சொன்னபோது, ஆண்டவரே! உமது பேரன்பு என்னைத் தாங்கிற்று. - திருப்பாடல்கள் 94 : 18

"....நானும் கடல்மீது நடந்து (இயேசுவாகிய) உம்மிடம் வர ஆணையிடும்" என்றார் (பேதுரு). (இயேசுவாகிய) அவர் "வா" என்றார்.

...(பேதுரு) கடல்மீது நடந்து சென்றார். அப்பொழுது பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி, அவர் மூழ்கும் போது , ஆண்டவரே, 'என்னைக் காப்பாற்றும்' என்று கத்தினார்.

இயேசு உடனே தம் கைகளை நீட்டி அவரைப் பிடித்து. 'நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?' என்றார் - மத்தேயு 14 : 28-31

ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்... - சங்கீதம் 50 : 15

இன்பவெளி

20. இரவு பகல்இல்லா இன்பவெளி ஊடே
விரவி விரவிநின்று உந்தீபற
விரைய விரையநின்று உந்தீபற.

சொற்பொருள் :

இரவு = ஆன்மா ஆணவத்தால் கட்டுண்ட இருள்நிலையாகிய அறியாமைநிலை.

பகல் = ஆன்மா இறைவனின் திருவருள் சக்தியால் வழி நடத்தப்படுதலால், இறைவனை உணர்கின்ற ஒளிநிலை - அறிவுநிலை.

இன்பவெளி = இரவே இல்லாத பகல் - இறைவனின் திருவருள் சக்தியின் அருளால், ஆன்மா இறைவனின் திருவடியில் அமர்ந்து, என்றும் மாறாத இன்பத்தில் திளைத்திருத்தல்.

விரவி விரவி - விரைய விரைய = இன்பவெளியை, அதாவது முக்தி என்று சொல்லப்படுகின்ற வீடு பேற்றினை ஆன்மா அடைய வேண்டிய இன்றியமையாமை மற்றும் விரைந்து அடைய வேண்டிய தேவை ஆகியவற்றை உணர்த்துகின்ற சொற்றொடர்கள்.

பதவுரை :

இரவு பகல் இல்லா = ஆன்மா ஆணவத்தால் கட்டுண்ட இருள்நிலையாகிய அறியாமைநிலை என்னும் இரவும், இறைவனின் திருவருள் சக்தியின் வழிநடத்துதலால் அது இறைவனை உணர்கின்ற ஒளி நிலையாகிய அறிவுநிலை என்னும் பகலும் மாறி மாறி வருகின்ற நிலையிலிருந்து விடுபட்டு,

இன்ப வெளியூடே விரவி விரவி நின்று = இறைவனின் திருவடிப் பேறாகிய இன்ப வெளியிலே நிலையாகக் கலந்து நிற்கும் பேரின்ப நிலையில் கூடுவாயாக.

விரைய விரைய நின்று = அந்நிலையில் தாமதமின்றி விரைந்து கூடுவாயாக.

கருத்துரை :

ஆன்மா ஆணவத்தால் கட்டுண்டு நிற்கின்ற இருள் நிலையாகிய இரவும், திருவருள் சக்தியின் வழிநடத்துதலால் இறைவனை உணர்கின்ற ஒளி நிலையாகிய பகலும் மாறி மாறி வருகின்ற தன்மையிலிருந்து விடுபட்டு, இறைவனின் திருவடிப்பேறாகிய இன்பவெளியில் நிலையாகக் கலந்து நிற்கும் பேரின்ப நிலையில் கூடுவாயாக, அந்நிலையில் விரைந்து கூடுவாயாக;

விளக்கவுரை :

ஆன்மா ஐம்பொறிகளுடன் கூடிச் செயல்படும்போது உலகியல் இன்பங்களிலும், இறைவனின் திருவருள் சக்தியில் நிறைந்து செயல்படும்போது இறை இன்பத்திலும் மாறி மாறி நிற்கிறது. இந்நிலை மாறி, இறைவனின் திருவடி இன்பத்தில் நிலையாக இருத்தல் வேண்டும்.

வீட்டு ஈ உணவிலும் அமரும். சிறிது நேரத்தில் அசுத்தத்திலும் அமரும், ஆனால் தேனீ எந்நிலையிலும் மலர்களில் மட்டும் அமர்ந்து தேன் சேகரிக்குமே அன்றி, மற்ற இடங்களில் அமராது. நம் ஆன்மாவும் தேனீபோல இரவு பகல் இல்லா இன்பவெளியாகிய இறைவனின் திருவடியிலேயே அமர்ந்திருத்தல் வேண்டும்.

பிறவிச்சுழற்சிக்கொள்கைசிந்தனைஉடையசைவசித்தாந்திகள் ஆன்மா மீண்டும் மீண்டும் பிறவிகள் எடுக்கிறது என்று கூறுவர்.

பிறவிச் சுழற்சிக் கொள்கையில் கடவுளுக்கு இடம் இல்லை.

சமண, பௌத்த சமயங்களில் இறைவனுக்கு இடமில்லாத காரணத்தினால் அவர்கள் பிறவிச் சுழற்சிக் கொள்கையைக் கொண்டுள்ளனர். கடவுள் நம்பிக்கை இல்லாத சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பதால் இளங்கோ அடிகள் தமது சிலப்பதிகாரத்தில் " ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்கிறார்.

ஊழ்வினை என்ற சொல் ஒருவர் தம் முந்தைய பிறவிகளில் செய்த தீவினைகள் என்னும் பொருளில் ஆளப்படுகிறது.

கோவலன், கண்ணகியின் துன்பநிலைக்கு அவர்களின் முற்பிறவி நிகழ்வுகள்தான் காரணம் எனக்காட்டும் சில பகுதிகளையும் சேர்த்துள்ளார்.

"மனிதர் ஒரேமுறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர், இறுதித் தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கெனவுள்ள நியதி". - எபிரேயர் 9 : 27

ஆனால் சைவ, வைணவ சமயங்களில் முழு முதற் கடவுளுக்கு இடம் உண்டு என்ற காரணத்தினால் அங்கு பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு இடம் கிடையாது. ஆனால், நடைமுறையில் பிறவிச் சுழற்சிக் கொள்கை பற்றிய நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். இதற்கு என்ன காரணம்?

மகேந்திரவர்மன், கூன்பாண்டியன் போன்ற மன்னர்கள் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய காலத்தில், திரளான சமண சமயத்தினரும் சைவ சமயத்திற்கு மாறினர். மன்னராட்சிக் காலத்தில் இது இயல்பான ஒன்றாகும். 'மன்னர் எவ்வழி - மக்கள் அவ்வழி' என்பது பொதுநிலை.

இப்படி சமயம் மாறிய சமணர்கள் கடவுட் கொள்கையை ஏற்றுக் கொண்டாலும், சமண சமயக் கொள்கையான பிறவிச் சுழற்சிக் கொள்கையைக் கைவிடவில்லை. இதனால், சைவ - வைணவ சமயங்களில் பிறவிச் சுழற்சிக் கொள்கை மெல்ல மெல்ல இடம் பெறலாயிற்று.

எனவே சைவசித்தாந்திகள் பலரிடத்திலும் பல பிறவிக் கொள்கை, பிறவிச் சுழற்சிக் கொள்கை இடம் பெறலாயின. இத்தகையவர்கள் 'இரவு' என்பதை ஆன்மாவின் கேவலநிலை என்றும், 'பகல்' என்பதை ஆன்மாவின் சகலநிலை என்றும், இவை இரண்டும் மாறி மாறித் தோன்றி பிறப்பு, இறப்பு முதலிய துன்பங்களுக்குக் காரணமாவதினால், அவற்றினின்று விடுபட்டுத் திருவருள் வழியே மிகவிரைந்து பிறவி நீக்கம் பெற்று, பேரின்ப நிலையை அடைய இறைவனை விரைந்து கூடுதல் வேண்டும்." என்பர்.

ஆன்மா ஆணவத்தில் கட்டுண்டு கிடப்பது கேவலநிலை எனப்படும்.

ஆன்மா மாயையின் காரியமாகிய தனு, கரண, புவன, போகமாகிய உடல், கருவிகள், உலகம், நுகர்ச்சிப் பொருள்களோடு கூடி சிற்றறிவு பெறுகின்ற நிலை 'சகல நிலை' எனப்படும். பல்பிறவிக் கொள்கை அறிவியலுக்குப் பொருந்தாத ஒன்றாகும்.

இறை நம்பிக்கை சமயங்களான யூதம், கிறித்தவம், இசுலாம் ஆகியவற்றில் பல் பிறவிக்கொள்கைக்கு இடமில்லை. அதுபோல், இறை நம்பிக்கை சமயங்களான சைவம், வைணவத்திலும் பல் பிறவிக் கொள்கைக்கு இடமில்லை என்றாலும், காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களினால் பல் பிறவிக்கொள்கையும், பிறவிச்சுழற்சிக் கொள்கையும் அவற்றில் இடம் பெறலாயின.

விவிலிய ஒப்பு:

...நகருக்கு (பரலோகத்திற்கு) ஒளி கொடுக்கக் கதிரவனோ, நிலாவோ தேவைப்படவில்லை. (அருவக்) கடவுளின் மாட்சியே அதன் ஒளி; (குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) ஆட்டுக்குட்டியே அதன் விளக்கு. (இறைவனின் திருவருள் சக்தியால் வழிநடத்தப்பட்டு, ஆட்கொள்ளப்பட்டவர்களாகிய) மக்கள் இனத்தார் அதன் ஒளியில் நடப்பர்... இனி (ஆன்மா ஆணவத்தில் கட்டுண்ட பாவ நிலையாகிய இருள்நிலை எனப்படும்) இரவே இராது. (ஆன்மாவின் சிற்றறிவு - தன்னறிவு தற்போதம் எனப்படும்) விளக்கின் ஒளியோ, கதிரவனின் ஒளியோ அவர்களுக்குத் தேவைப்படாது. ஏனெனில் கடவுளாகிய ஆண்டவர் அவர்கள் மீது ஒளி வீசுவார்... - திருவெளிப்பாடு 21 : 24, 25 - 22 : 5

"ஆனால் தீட்டுப்பட்டது எதுவும் ஒருபோதும் அதில் நுழையாது. அதுபோல் அருவருப்பானதைச் செய்வோரும், பொய்யரும் அதில் நுழைய மாட்டார்கள்." - திருவெளிப்பாடு 21 : 27

ஒளிக்கு இருளோடு என்ன பங்கு? - 2 கொரிந்தியர் 6: 14

(அருவக்) கடவுள் ஒளியாய் இருக்கிறார். - 1 யோவான்1 : 5

...(உருவத்தில் வந்துள்ள கடவுளாகிய) நான் ஒளியாக உலகத்திற்கு வந்தேன். யோவான் 12 : 46

(மனிதனாகப் வந்த கடவுளாகிய) அவரிடம் வாழ்வு இருந்தது, அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாயிருந்தது. - யோவான்1 : 4

அணுக முடியாத ஒளியில் வாழ்பவர். - 1 தீமோத்தேயு 6: 10

மனிதர் ஒரேமுறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித் தீர்ப்பு வருகிறது. - எபிரேயர் 9: 27

எல்லாம் ஆன இறைவன்

21. சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும்அங்கு
அல்லனாய் ஆனான்என்று உந்தீபற
அம்பிகை பாகன்என்று உந்தீபற

சொற்பொருள் :

சொல்லும் பொருள்கள் = இன்னது எனச் சுட்டி சொல்லவும், காட்டவும் கூடிய பொருள்கள்.

சொல்லாதன = சொல்லால் சுட்டவும், மனத்தால் நினைக்கவும் முடியாதன.

அல்லனாய் = இவைகள் இரண்டுமாய் அல்லாதன.

அம்பிகைபாகன் = அருளே வடிவான சக்தியைத் தனதுபகுதியாகக்கொண்டு,அவளுடன்நீக்கமின்றிநிற்கும்இறைவன்.

பதவுரை :

சொல்லும் பொருள்களும் = சொற்களால் விளக்கி, இன்னதெனச் சுட்டிச் சொல்லத்தக்க பொருள்களாகவும்,

சொல்லாதனவும் = சொற்களால் விளக்கி இன்னதெனச் சுட்டிச் சொல்ல முடியாத பொருள்களாகவும்,

அங்கு அல்லனாய் ஆனான் = மேற்கூறிய இரண்டு தன்மைகளும் அல்லாத, மனதால் நினைக்க முடியாதனவாகவும் இறைவன் விளங்குகிறார்.

அம்பிகைபாகன் = அருள்வடிவாகிய தன் திருவருள் சக்தியைத் தனது பகுதியாகக் கொண்டு, அவளுடன் நீக்கமற இணைந்து நிற்கிறார்.

கருத்துரை :

சொற்களால் விளக்கக்கூடிய பொருள்களாகவும், சொற்களால் விளக்க முடியாத பொருள்களாகவும், இவை இரண்டும் அல்லாமல் இவற்றிற்கு அப்பாற்பட்டு மனத்தால் நினைக்க முடியாத பொருள்களாகவும் திகழும் இறைபரம்பொருள், ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங் கருணையினால், அருளே வடிவான தனது திருவருள் சக்தியோடு இணைந்து அருள் வழங்குகின்றார்.

விளக்கவுரை :

இறைவனே யாவையுமாய், அல்லனுமாய் விளங்குகிறார். வாயினால் உரைப்பதற்கும், மனத்தால் நினைப்பதற்கும் அரியவர். ஆன்மாக்களிடம் கொண்ட பெருங்கருணையினால் தானே வந்து அவைகளை ஆட்கொள்கிறார்.

தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்.

திருஏசறவு - திருவாசகம்
மாணிக்கவாசகர்

...ஈசன் ஞாலம் அதனிடை வந்து இழிந்து நன்னெறிகாட்டி...

திருவார்த்தை - திருவாசகம்
மாணிக்கவாசகர்

விவிலிய ஒப்பு:

சொல்லும் பொருள்களும் சொல்லாதனவும்

...விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். - கொலோசையர் 1 : 16

சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. - யோவான் 1 : 3

"... உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று"... - யோவான் 1 : 10

ஆதியிலே தேவன் வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தார். - ஆதியாகமம் 1 :1

...தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது... ஆதியாகமம் 1 : 31

வானங்களைச் சிருஷ்டித்து, பூமியையும் வெறுமையாய் இருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர்... - ஏசாயா 45 : 18

காணக் கூடாத கடவுள் (அம்பிகைபாகன்) வெளிப்பட்டார்.

"கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை; தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்." - யோவான் 1 : 18

“(உருவத்தில் சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்துள்ள) அவர் கட்புலனாகாத கடவுளது சாயல்..” - கொலோசையர் 1 : 15

“மானிடராய் அவர் வெளிப்படுத்தப்பட்டார்...” - 1 தீமோத்தேயு 3 : 16

“பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்.” - 1 தீமோத்தேயு 1 : 15

உண்மையான ஆற்றல்

22. காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவது ஆற்றல்என்று உந்தீபற
அல்லாதது அல்லஎன்று உந்தீபற

சொற்பொருள் :

காற்று = மூச்சுக் காற்று

கருத்து = நினைவு

கருத்தினுள் = பரம்பொருளை அறியவேண்டும் என்னும் கருத்தினுள்

ஆற்றுவது = ஆற்றுப்படுத்தல் - வழிப்படுத்தல் - செலுத்துதல்

ஆற்றல் = வெற்றி - ஞானம் - வல்லமை - திறமை

அல்லாதது = மாறானது.

பதவுரை :

காற்றினை மாற்றி = மூச்சுக் காற்றினை அடக்கி, ஒரே சீராக்கி, மனதைக் கட்டுப்படுத்தி

கருத்தை = நினைவுகளை

கருத்தினுள் ஆற்றுவது = பரம்பொருளின்பால் செலுத்துதலே

ஆற்றல் = சிறந்த வெற்றியாகும்.

அல்லாதது அல்ல = இதற்கு மாறாக நினைவுகளை புறப்பொருள்களின் பால் செலுத்துதல் ஆற்றல் ஆகாது.

கருத்துரை :

மூச்சுக் காற்றினை அடக்கி, ஒரே சீராக்கி, மனதைக் கட்டுப்படுத்தி, நினைவுகளைப் பரம்பொருளின்பால் செலுத்துதலே சிறந்த வெற்றியாகும்.மாறாக, நினைவுகளைப் புறப்பொருள்களின்பால் செலுத்துதல் ஆற்றல் ஆகாது.

விளக்கவுரை :

மனதை ஒருமுகப்படுத்த மூச்சுக் காற்றினை ஒரே சீராகக் கட்டுப்படுத்துதல் வேண்டும். அளவு மீறிய இன்பத்திலும், அளவு மீறிய அச்சத்திலும் சீரின்றி இயங்கும் தன்மை உடையது மூச்சுக்காற்று. மனம் கட்டுப்பட்டால்தான் மூச்சுக்காற்று சீராகும்.

மனதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், உலகியல் இன்பங்களுக்குக் காரணமாகிய புறப்பொருள்களை நோக்கி அலைபாயும் மனதை பேரின்பத்திற்குக் காரணராகிய பரம்பொருளின்பால், அவர் திருவருள் சக்தியின் துணை கொண்டு திருப்பி, அவரையே வழிபட்டு, தியானித்தல் வேண்டும்.

திருவருள் சக்தியின் துணை கொண்டு, புலன்களை வென்று, மூச்சைக் கட்டுப்படுத்தி, அதன் மூலம் அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

"**அல்லாதது அல்ல**" என்பதை

"**அல்லாதது அல்லல்**" என்றும் கூறுவர்.

"அப்படிச் செலுத்தாவிட்டால் துன்பத்தைத் தரும்" எனப் பொருள் கொடுக்கும்.

"**அல்லாதது அல்லாது**" என்றும் கூறுவர்.

உலகப்பொருள்களில் அலைபாயும் மனத்தோடு இறைவனையும் நினைத்தல் ஆற்றலாகாது எனப் பொருள் கொடுக்கும்.

விவிலிய ஒப்பு:

அல்லாதது அல்ல

"எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து, மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும், செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது." மத்தேயு 6 : 24, 33

ஆற்றுவது ஆற்றல்

ஆகவே அனைத்திற்கும் மேலாக (அருவக் கடவுளாகிய) அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்.

அப்போது (உலகப் பொருள்களாகிய) இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். - மத்தேயு 6 : 33

கருத்தினுள் ஆற்றுவது

"என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது, உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்" - சங்கீதம் 119 : 25

"...நிறைவுள்ளவராக விரும்பினால் நீர்போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராயிருப்பீர். பின்பு வந்து (சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) என்னைப் பின்பற்றும்" என்றார்.

இயேசு தம் சீடரிடம்," செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்." என்றார். - மத்தேயு 19 : 21, 23

கள்ளரும், இல்லம் உடையவரும்.

23. கள்ளரோடு இல்லம் உடையார் கலந்திடில்
வெள்ள வெளியாம்என்று உந்தீபற
வீடும் எளிதாம்என்று உந்தீபற

சொற்பொருள் :

கள்ளர் = மலத்தினால் கட்டப்பட்டுள்ள ஆன்மாக்கள்

இல்லம் உடையார் = வீடுபேறு அளிக்க வல்ல இறைவன்.

வெள்ளவெளி = வரம்பற்ற பெருவெளி - இரவு பகல் இல்லா இன்பவெளி.

வீடு = வீடுபேறு - விடுதலை - கட்டுகளெல்லாம் அகன்ற முக்திநிலை.

பதவுரை :

கள்ளரோடு = கள்ளத்தனம் செய்யும் பொறி, புலன்களோடு கூடிய உடலில் இணைந்திருக்கும் ஆன்மாக்களாகிய கள்ளரோடு.

இல்லம் உடையார் கலந்திடில் = வீடுபேற்றினை அளிக்க வல்ல இறைவன் கலந்துவிட்டால்.

வெள்ளவெளியாம் = இரவு, பகலில்லாத இன்ப வெளியை ஆன்மாக்கள் அடையும்.

வீடும் எளிதாம் = வீடுபேறும் எளிதில் கிடைத்து விடும்.

கருத்துரை :

கள்ளத்தனம் செய்யும் பொறி, புலன்களை உடைய உடலில் இணைந்திருக்கும் ஆன்மாக்களாகிய கள்ளரோடு, வீடுபேற்றினை அளிக்க வல்ல இறைவன் கலந்துவிட்டால், இரவு பகல் இல்லாத இன்ப வெளியை ஆன்மாக்கள் அடையும். வீடுபேறும் எளிதில் கிடைத்துவிடும்.

விளக்கவுரை :

கள்ளப்புலன்கள் என்று கூறப்படும் கள்ளத்தனம் செய்யும் பொறிபுலன்கள் உள்ள உடலில் குடிகொண்டிருக்கும்

ஆன்மாவிற்கும் அவ்வியல்பே இருப்பதினால், ஆன்மாக்களைக் கள்ளன் என்று குறிப்பிடுகின்றார். இறைவன் நீக்கமற எங்கும் நிறைந்திருந்தும், மல(பாவ)த்தினால் கட்டப்பட்டுள்ள ஆன்மாக்களுக்கு அவர் உணர்ந்து கொள்ள அரியவராக இருக்கிறார்.

ஆனால், இறைவன் தன் அளப்பருங் கருணையினால் ஆன்மாக்களின் வினைகளை அகற்றி, அவைகளுக்கு வீடுபேறு அளிக்க விழைகிறார். எனவே, இறைவன் கள்ளர்களாகிய ஆன்மாக்களைத் தன் திருவருள் சக்தியினால் தன் பக்கம் ஈர்க்கிறார். அதாவது, கள்ளர்களாக இருக்கும் ஆன்மாக்களைத் தானே தேடி வந்து, அவற்றிற்கு வீடுபேறு அளிக்கத் தன்னிடமாய்ச் சேர்த்துக் கொள்கிறார்.

இந்நிலையில், கள்ளர்களாகிய ஆன்மாக்கள், திருவருள்சக்தியின் துணையினால் தங்கள் கள்ளத்தனம் நீங்கி, இறைவனோடு சேரும்போது, வெட்டவெளிபோலத் தடைகளற்ற வீடுபேறு கிடைக்கிறது. ஏனெனில் ஆன்மாக்களைப் பற்றியிருந்த மலம் என்னும் இருள் இறைவனின் திருவருள் சக்தி எனும் ஒளியினால் அகன்று போகிறது.

"எங்கும் நீக்கமற நிறைந்திருந்தும் ஆன்மாக்களால் அடைதற்கரிய இறைவனைக் கள்ளர் என்றும், ஐம்புலன்களால் ஆன உடலில் குடிகொண்டுள்ள ஆன்மாக்களை இல்லம் உடையார் என்றும் பொருள்கொண்டு, சிலர் உரை செய்வர்."

விவிலிய ஒப்பு:

(கள்ளர்களாகிய) நீங்கள் (இல்லம் உடையாராகிய) தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும், (இல்லம் உடையாராகிய) தேவனுடைய (திருவருள் சக்தியாகிய) ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா?

"...தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. (கள்ளராயிருந்து - கள்ளத் தன்மை நீங்கிய) நீங்களே அந்த ஆலயம்." - 1 கொரிந்தியர் 3 : 16, 17

"உங்கள் சரீரமானது நீங்கள் (இல்லம் உடையாராகிய) தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற (திருவருள் சக்தியாகிய) பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது..." 1 கொரிந்தியர் 6 : 19

(கள்ளர்களாகிய) நீங்கள் (இல்லம் உடையவராகிய) என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் (கள்ளர்களாகிய உங்களின் கள்ளத்தனத்தை நீக்கி) உங்களைத் தேர்ந்து கொண்டேன். யோவான் 15 : 16

வெள்ளவெளி

(மனிதராக இம் மண்ணுலகில் பிறந்து வந்த கடவுளாகிய) அவரையும், அவருடைய வலது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனே கூட (வெள்ள வெளியாம் வீடாகிய)ப் பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.- லூக்கா 23 : 33, 42, 43

(இங்கு கள்ளரோடு இல்லம் உடையார் கலக்கிறார். அதனால் கள்ளருக்கு கள்ளத்தன்மை நீங்கி, வெள்ளவெளியாம் வீடு எளிதாகக் கிடைக்கிறது.)

(மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) அவர் பாவி (கள்ளர்)களோடும், வரிதண்டுபவர்களோடும் உண்பதைப் பரிசேயரைச் சார்ந்த மறைநூல் அறிஞர் கண்டு, அவருடைய சீடரிடம்," இவர் வரிதண்டுபவர்களோடும், பாவி (கள்ளர்)களோடும் சேர்ந்து உண்பதேன்? " என்று கேட்டனர். இயேசு இதைக் கேட்டவுடன் அவர்களை நோக்கி," நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவி (கள்ளர்) களையே அழைக்கவந்தேன்." என்றார். - மாற்கு 2 :16, 17

"இதோ, (இல்லம் உடையாராகிய) நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டு கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று (கள்ளர்களாகிய)

அவர்களோடு உணவு அருந்துவேன் (வெள்ளவெளியாம் வீடுபேற்றில் இருப்பேன்). (கள்ளத்தன்மை நீங்கிய) அவர்களும் (வெள்ளவெளியாம் வீட்டில்) என்னோடு உணவு அருந்துவார்கள் - திருவெளிப்பாடு 3 :20

"..சக்கேயு என்னும் பேருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டுவோர்க்குத் தலைவர்... சக்கேயு குட்டையாயிருந்தார். அவர் முன்னே ஓடிப்போய், (மண்ணுலகில் மனிதராகப் பிறந்து வந்துள்ள கடவுளாகிய இயேசுவாகிய) அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டத்தி மரத்தில் ஏறிக்கொண்டார். இயேசு அந்த இடத்திற்கு வந்த உடன், அண்ணாந்து பார்த்து (கள்ளராகிய) அவரிடம் "சக்கேயு, விரைவாக இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் (இல்லம் உடையவராகிய) நான் தங்கவேண்டும்." என்றார். ...இதைக் கண்ட யாவரும் "பாவியிடம் தங்கப்போயிருக்கிறாரே இவர்" என்று முணு முணுத்தனர்.

சக்கேயு எழுந்து நின்று, ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன்; எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் அதை நான் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்று அவரிடம் கூறினார் (கள்ளத்தன்மை நீக்கப்படுகிறார்). இயேசு அவரை நோக்கி இன்று இந்த வீட்டிற்கு (வீட்டில் உள்ளவர்களுக்கு) மீட்பு உண்டாயிற்று (வெள்ளவெளியாம் வீடு). ...இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிட மகன் (சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்துள்ள கடவுளாகி இல்லம் உடையவர்) வந்திருக்கிறார் என்று சொன்னார். - லூக்கா 19: 2-10

இவ்வுலகே இறை உலகு ஆகும்

24. எட்டுக்கொண்டார் தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டார் உலகம்என்று உந்தீபற
வீடேவீடு ஆகும்என்று உந்தீபற

சொற்பொருள் :

எட்டுக்கொண்டார் = எண்வகைக் குணங்களைக் கொண்டவர் இறைவன் என்பது சைவ, சைவசித்தாந்தக் கோட்பாடு,

அவையாவன: 1. தன்வயத்தம் 2. தூய்மை 3. இயற்கை அறிவு 4. முற்றறிவு 5. கட்டின்மை 6. பேரருள் 7. எல்லாம் வன்மை 8. வரம்பிலின்பம்

உலகம் விட்டார் = 'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றுமாகிய உலகப்பற்றுகள் அறுதல் - நீங்குதல்

வீடே வீடாகும் = மனிதன் வாழும் வீடாகிய இவ்வுலகமே இறைவன் ஆன்மாக்களுக்கு அளிக்கும் முக்திப் பேறாகிய வீடு ஆகும்.

பதவுரை :

எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றார் = எண்வகைக் குணங்களைக் கொண்டுள்ள இறைவனை எப்போதும் உள்ளத்தால் தொட்டபடியே உள்ளவர்கள்.

உலகம் விட்டார் =இவ்வுலகப்பற்றுகளைவிட்டவர்கள்ஆவர்.

வீடே வீடாகும் = இப்படி உலகப் பற்றுகளை விட்டவர்களுக்கு, அவர்கள் வாழும் வீடாகிய இவ்வுலகமே இறைவன் அளிக்கப்போகும் முக்திப் பேறு வீடாகிய இறை உலகாகக் காட்சியளிக்கும்.

கருத்துரை :

எட்டுவகைக் குணங்களைக் கொண்டுள்ள இறைவனை எப்போதும் உள்ளத்தால் தொட்டபடியே உள்ளவர்கள், உலகப் பற்றுகளை விட்டவர்கள் ஆவர். இப்படி உலகப்பற்றுகளை விட்டவர்களுக்கு, அவர்கள் வாழுகின்ற வீடாகிய இவ்வுலகமே இறைவன் அளிக்கப்போகும் முக்திப்பேறு வீடாகிய இறை உலகமாகக் காட்சியளிக்கும்.

விளக்கவுரை :

எட்டுக்கொண்டார் என்னும் தொடருக்கு இறைவனின் எண்வகைக் குணங்களைக் கூறாமல், அவர் திருமேனியாகக் கீழ்க்காணும் எட்டும் விளங்குகின்றன என்றும் கூறுவர். அவையாவன

1. நிலம் 2. நீர் 3. தீ 4. காற்று 5. வான் எனும் பூதங்கள் ஐந்துடன் 6. கதிரவன் 7. திங்கள் 8. இயமானன் (ஆன்மா) எனும் மூன்றும் சேர்ந்த எட்டு ஆகும்.

அப்படியானால்

கதிரவன், திங்கள் ஆகிய இரண்டும் ஐம்பெரும் பூதங்களில் அடங்கவில்லையா? மேலும், கதிரவன், திங்கள் என்ற இரண்டை மட்டும் சேர்த்தால், மற்ற கோள்கள், விண்மீன்கள் என்னவாகும்?

என்றாலும், இப்பேரண்டத்தில் எல்லாமாக ஆகியவன் இறைவன் என்னும் நோக்கில் இப்படிக் கூறியிருக்கக் கூடும். 'வீடேவீடாகும்' என்னும் தொடருக்குக் கீழ்க் காணும்படியாகவும் பொருள் கொள்ளலாம்.

"ஆன்மா குடிகொண்டுள்ள வீடாகிய மனித உடலே, இப்பேரண்டமே தன் உடலாகக் கொண்டுள்ள பேரான்மாவாகிய இறைவன் வாழக்கூடிய வீடாகும்."

"உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம் " என்னும் திருமந்திரப் பகுதி இக்கருத்தையே உறுதி செய்கிறது.

விவிலிய ஒப்பு:

உலகம் விட்டார்

"கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்," இனிவாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன்." - கலாத்தியர் 2 : 19, 20

நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப் பற்றியும் ஒரு போதும் பெருமை பாராட்டமாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்த வரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். - கலாத்தியர் 6 : 4

...எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக் கருதினேன். உண்மையில், என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன். - பிலிப்பியர் 3 : 7, 8

"(கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவராகிய) என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்." - லூக்கா 9 :23

வீடே வீடாகும்

"நீங்கள் (உங்கள் உடல்) கடவுளுடைய கோவிலென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? கடவுளின் கோவில் தூயது; நீங்கள் அக்கோவில்." - 1 கொரிந்தியர் 3 : 16,17

உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? - 1 கொரிந்தியர் 6 : 19

ஒத்ததும் ஒவ்வாததும்

25. சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்ததுஎன்று உந்தீபற
ஒவ்வாதது ஒவ்வாததுஎன்று உந்தீபற

சொற்பொருள் :

சித்தம் = சித்தம் முதலிய உட்கரணங்கள் நான்கு; அவை மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்பன ஆகும்.

தீயகரணம் = தீமையை உண்டாக்கும் வெளிக்கரணங்கள் ஐந்து; மெய், வாய், மூக்கு, கண், செவி என்பன ஆகும்.

சித் = 'அறிவு' - சித் ஆகிய இறைவன்.

சத் - சித் - ஆனந்தம் = சச்சிதானந்தம் என்று இறைவன் அழைக்கப்படுகிறார்.

ஒத்தது = பொருந்தியது.

ஒவ்வாதது = பொருந்தாதது; இணங்காதது.

பதவுரை :

சித்தமும் = சித்தம் முதலிய உட்கரணங்கள் நான்கும்

தீயகரணமும் = தீமையை விளைவிக்கும் வெளிக்கரணங்கள் ஐந்தும் (உலகியல் சிற்றின்பங்களில் திளைக்காமல்)

சித்திலே = 'சித்' ஆகிய இறைவன் திருவருள் நெறியிலே

ஒத்ததே = பொருந்தித் தன் சுயசித்தத்தை இழந்து என்றும் நீங்காத பேரின்பத்தில் நிறைந்து இருப்பதே

ஒத்தது = ஆன்மாமுத்தி நெறி பெறுவதற்கு உரிய வழி ஆகும்.

ஒவ்வாதது = அவ்வாறு பொருந்தி இராமல், இறைவனின் திருவருளிலிருந்து அகன்று செல்கின்ற ஆன்மாக்கள்.

ஒவ்வாதது = முத்திநெறி பெறுவதற்குத் தகுதியற்றவை ஆகும்.

கருத்துரை :

சித்தம் முதலிய உட்கரணங்கள் நான்கும், புறக்கரணங்கள் ஐந்தும் உலகியல் சிற்றின்பங்களில் திளைக்காமல், 'சித்' ஆகிய இறைவனின் திருவருள் நெறியிலே பொருந்தித் தன் சுயசித்தத்தை இழந்து, என்றும் நீங்காத பேரின்பத்தில் திளைத்து இருப்பதே, ஆன்மா முத்தி நெறி பெறுவதற்கு உரியவழி ஆகும். அவ்வாறன்றி, இறைவனின் திருவருள் நெறியிலே பொருந்தாது, அகன்று செல்கின்ற ஆன்மாக்கள் முத்தி நெறி பெறுவதற்குத் தகுதியற்றவை ஆகும்.

விளக்கவுரை :

உட்கரணங்கள் நான்கில் ஒன்றான சித்தம், புறக்கரணங்கள் ஐந்துடன் இணைந்து உலகியல் சிற்றின்பங்களை நாடித் திரிந்து, அவற்றில் திளைப்பதால் 'சித்தமும், தீயகரணமும்' என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது.

பசு எனப்படும் ஆன்மாவின் கரணங்களான பசுக்கரணங்கள், பதி எனப்படும் இறைவனில் ஒன்றி, பதிக் கரணங்கள் எனவே செயல்பட்டு, தன் முனைப்பு அடங்கி, தற்போதம் அகன்று நிற்றலே ஆன்ம மீட்புக்கு வழி ஆகும்.

இறைவன் ஒருவனே "சித்" ஆவான்.
மனிதன் தவிரப் பிற உயிரினங்களும், உயிரற்றவைகளும் "அசித்" ஆகும்.
மனிதன் மட்டுமே சித் + அசித் - "சிதசித்"

எனப்படுகின்றான். அதாவது ஆன்மா உலகப் பொருட்களுடன் சேரும்போது அசித் ஆகவும், இறைவனுடன் சேரும் போது சித் ஆகவும் செயல்படுகின்றது.

விவிலிய ஒப்பு:

சித்திலே ஒத்தது

...நான் செய்வது என்னவென்று எனக்கே தெரிவதில்லை. எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை; எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்... அவ்வாறு செய்வது என்னுள் குடிகொண்டிருக்கும் பாவமே; நானல்ல. ஏனெனில், என்னுள், அதாவது வலுவற்ற என் ஊனியல்பில், நல்லது எதுவும் குடிகொண்டிருக்கவில்லை என எனக்கும் தெரியும்.

நன்மை செய்யும் விருப்பம் என்னிடம் இல்லாமல் இல்லை; அதை செய்யத்தான் முடியவில்லை. நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை; விரும்பாத தீமையையே செய்கிறேன்.. அந்தோ! இரங்கத் தக்க மனிதன் நான்! சாவுக்குள்ளாக்கும் இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்?

கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவி (இறைவனின் திருவருள் சக்தி)யின் சட்டம் பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது - - உரோமையர் 7 : 15, 17-19, 24., 8 : 2

(பசுக் கரணங்களாகிய) உங்கள் உடல்கள் (மனிதனாக உருவெடுத்து வந்த இறைவனாகிய) கிறிஸ்துவின் உறுப்புகள் (பதி கரணங்கள்) என்று தெரியாதா? கிறிஸ்துவின் உறுப்புகளை எடுத்து ஒருவிலைமகளின் உறுப்புகளாகும்படி நான் செய்யலாமா? கூடவே கூடாது. - 1 கொரிந்தியர் 6 : 15,16

"கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன் -எனவே இனிவாழ்பவன் நானல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்." - கலாத்தியர் 2 : 20

"கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள். தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம்." - கலாத்தியர் 5 : 24,25

ஒத்ததே ஒத்தது

உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட (இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. (குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்த) கடவுள் உங்களை(த் தன்னையே சிலுவையில் பலியாகக் கொடுத்து, தன் தூய இரத்தம் என்னும்) விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே, உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள். - 1 கொரிந்தியர் 6 : 19, 20

சித்தமும் தீய கரணமும்

உங்களிடையே சண்டை, சச்சரவுகள் ஏற்படக் காரணம் என்ன? உங்களுக்குள்ளே போராடிக்கொண்டிருக்கும் சிற்றின்ப நாட்டங்களல்லவா? நீங்கள் ஆசைப்படுவது கிடைக்காததால்,

கொலை செய்கிறீர்கள். அதை நீங்கள் ஏன்பெற முடிவதில்லை? நீங்கள் கடவுளிடம் கேட்பதில்லை. - யாக்கோபு 4 : 1-2

ஆன்மாவை எதிர்த்துப் போர்புரியும் ஊனியல்பின் இச்சைகளை விட்டு விடும்படி உங்களை வேண்டிக் கொள்கிறேன்." - 1 பேதுரு 2 : 11

நாங்கள் உலகில் தான் வாழ்கிறோம்; எனினும் எங்கள் போராட்டம் உலகைச் சார்ந்தது அல்ல. எங்கள் போராட்டத்தில் நாங்கள் பயன்படுத்தும் கருவிகள் உலகு சார்ந்தவை அல்ல; மாறாக அவை கடவுளின் வல்லமையால் அரண்களைத் தகர்த்தெறியக் கூடியவை. 11 கொரிந்தியர் 10 : 3 - 4

ஊனியல்பின் செயல்கள்

"அவை பரத்தைமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைவதில்லை..." - கலாத்தியர் 5 : 19 - 21

ஒத்ததே ஒத்தது

"....தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும்." கலாத்தியர் 5 : 22

அமுத ஊற்று

26. உள்ளும் புறம்பும் நினைப்புஅறின் உன்உள்ளே
மொள்ளா அமுதாம்என்று உந்தீபற
முளையாது பந்தம்என்று உந்தீபற

சொற்பொருள் :

உள்ளும் = அகவழிபாடு - யோகநெறி; 'யான்', 'நான்' என்னும் அகப்பற்றாகிய உள்நினைவுகள்.

புறம்பும் = புறவழிபாடு - சரியை, கிரியை நெறி; 'எனது', என்னுடையது என்னும் புறப்பற்றாகிய வெளியில் உள்ள மற்ற பொருட்கள், மனிதர்கள் மீது கொள்ளும் உலகியல் பற்றாகிய புறநினைவுகள்.

மொள்ளா = முகந்து கொள்ள முடியாத.

அமுது = அமுத ஊற்று - மரணமில்லாப் பேரின்பப் பெருவாழ்வு.

பந்தம் = பசு, பாச பந்தங்கள்.

பதவுரை :

உள்நினைப்பும் = 'யான்' - 'நான்' என்னும் அகப்பற்றாகிய உள்நினைவுகளும்

புறநினைப்பும் = 'எனது' - 'என்னுடையது' என்னும் புறப்பற்றாகிய புறநினைவுகளும்

அறின் = அகன்று போனால்

உன்னுள்ளே = ஆன்மாவாகிய உன்னுள்ளே

மொள்ளா அமுதாம் = அள்ள அள்ளக் குறையாத அமுத ஊற்றாம் இறையனுபவம் உண்டாகி, மரணமில்லாப் பெருவாழ்வு தோன்றும்.

பந்தம் முளையாது = வினையினால் உருவாகும் பசு, பாச பந்தங்களாகிய கட்டு உண்டாகாது.

கருத்துரை :

'யான்' என்னும் அகப்பற்றாகிய உள்நினைவுகளும், 'எனது' என்னும் புறப்பற்றாகி புறநினைவுகளும் அகன்று போனால், ஆன்மாவில் அள்ள அள்ளக் குறையாத அமுத ஊற்றாம் இறையனுபவம் உண்டாகி, மரணமில்லாப் பேரின்பப் பெருவாழ்வு தோன்றும். வினையினால் உருவாகும் பசு, பாச பந்தங்களாகிய கட்டு உண்டாகாது.

விளக்கவுரை :

'உள்ளும் புறம்பும் நினைப்பு அறின்' என்னும் தொடருக்கு 'அகத்தில் தியானித்து வணங்குகிற யோக நெறியாகிய அகவழிபாடும்', 'புறத்தில் உடலால் வணங்குகிற சரியை, கிரியை நெறிகளாகிய புறவழிபாடும்' அற்று, தன்னை மறந்து, தன் முனைப்பு அற்று, இறைவனின் திருவருள் சக்தியில் நிரம்பி, இறை இன்பத்தில் திளைப்பதாகிய வழிபாடு என்றும் பொருள்கொள்வர்.

அகவழிபாடு அல்லது புறவழிபாட்டை நான் செய்கிறேன் என்ற தன்முனைப்பு வருமானால், வழிபாட்டின் பயன் கிடைக்காது. எனவே, தன்னை மறந்து இறை இன்பத்தில் திளைப்பதே அமுத ஊற்றினை வழங்கும்.

விவிலிய ஒப்பு:

மொள்ளா அமுதாம்

"(குருவாகி மனிதனாகப் பிறந்து வந்துள்ள இறைவனாகிய) என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் (மதத்தில் ஈடுபடுதல் அல்ல) எவனோ, அவன் உள்ளத்திலிருந்து (மொள்ளா அமுதமாகிய) ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்." - யோவான் 7 : 38

(சகளமாய் வந்து, தானாகத் தந்த இறைவனாகிய) இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் (கிறித்தவ மதத்தில் அல்ல) வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்; என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் (மதசடங்காச்சாரங்களைக் கைக்கொள்ளுகிறவன் அல்ல) ஒருக்காலும் தாகமடையான். - யோவான் 6 : 35

முளையாது பந்தம்:

"...(குருவாகிய மனிதனாகப் பிறந்துவந்துள்ள இறைவனாகிய) என்னை விசுவாசிக்கிறவன் (மதவாதி அல்ல) மரித்தாலும்

பிழைப்பான். உயிரோடு இருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் (மதச் சடங்காச்சாரங்களையும், விழாக்களையும் கைக்கொள்ளுகிறவன் அல்ல) என்றென்றைக்கும் மரியாமலும் (மரணமில்லாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்று) இருப்பான். - யோவான் 11 : 25, 26

"...(சகளமாய் வந்து, தானாகத் தந்த இறைவனாகிய) நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாததுபோல், (என்னால் தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களாகிய) அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல." - யோவான் 17 : 14

(என்னால் தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களாகிய) அவர்களுக்காக (சகளமாய் வந்து, தானாகத்தந்த இறைவனாகிய) நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய) நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன், அவர்கள் உமக்கு உரியவர்கள். - யோவான் 17 : 9

"...வானதூதர் வாழ்வு அளிக்கும் (மொள்ளா அமுதமான) தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த ஓர் ஆற்றை எனக்குக் காட்டினார். அது பளிங்குபோல் ஒளிர்ந்தது. அது (அருவக்) கடவுளும் (மனிதனாகப் பிறந்து வந்த கடவுளான) ஆட்டுக்குட்டியும் வீற்றிருந்த அரியணையிலிருந்து புறப்பட்டு... பாய்ந்தோடியது. ....தாகமாயிருப்போர் என்னிடம் வரட்டும்; விருப்பம் உள்ளோர் வாழ்வு தரும் தண்ணீரை (தன் தன் சரியை, கிரியை நெறிகளாகிய புறவழிபாட்டினாலோ, யோகநெறியாகிய அகவழிபாட்டினாலோ அல்ல - இறைவனின் திருவருள் சக்தியில் நிறைந்து, பேரின்பத்தில் திளைத்து) இலவசமாய்க் குடிக்கட்டும்." - திருவெளிப்பாடு 22 :1, 17

அறிவுடன் நின்றால் அல்லல் அவிழும்

27. அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு
அவிழும்இவ் அல்லல்என்று உந்தீபற
அன்றி அவிழாதுஎன்று உந்தீபற

சொற்பொருள் :

அவிழ்தல் = உதிர்தல், பிரிதல்.

அவிழ = 'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும் ஆகிய ஆணவம் அகல.

அல்லல் = துன்பம்; பிறவிவினை - கர்மவினை,

அவிழும் = நீங்கும்.

பதவுரை :

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு = 'யான்' என்னும் அகப்பற்றும் - 'எனது' என்னும் புறப்பற்றுமாகிய ஆணவம் அகன்ற அறிவுடன் நிற்பவர்க்கு

இவ்வல்லல் அவிழும் = இறைவன் திருவருளால் பிறவிவினை, கர்மவினை என்னும் அல்லல்கள் நீங்கும்.

அன்றி அவிழாது = அவ்வாறு இல்லாமல் செருக்கினால் கட்டப்பட்ட நிலையிலிருந்து விடுபடாமல் நிற்பவர்க்கு அல்லல் அகலாது.

கருத்துரை :

'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றுமாகிய ஆணவம் அகன்ற அறிவுடன் நிற்பவர்க்கு, இறைவன் திருவருளால் பிறவிவினை, கர்மவினை என்னும் அல்லல்கள் நீங்கும். அவ்வாறு அல்லாமல் நிற்பவர்க்கு அல்லல் அகலாது.

விளக்கவுரை :

ஆன்மாவின் அறிவு சிற்றறிவு (பசுஞானம்)

"நான் செய்கிறேன்; நான் நினைக்கிறேன்" என்று தன்னை முன்னிறுத்தி, அகப்பற்றுடன் செயல்படும். "தனக்கு என்றால்

ஒன்றாகவும், பிறர்க்கு என்றால் வேறாகவும்" ஒருதலையாகச் செயல்படும். "இது என்னுடையது; இது நான் ஈட்டியது" என்று ஆணவத்துடன் செயல்படும்.

தனக்குத் துன்பம் வந்தால் 'இது இவரால் எனக்கு ஏற்பட்டது' என்று மற்றவர்களைக் குற்றஞ்சாட்டும். இச்சிந்தனைகளால் ஆன்மாவின் கட்டு அறுபடாமல், முன்னிலும் அதிகமாக இறுகுகிறது. ஆனால், இறைவனின் திருவருள் சக்தியினால் (பதி ஞானம்) வழி நடத்தப்படும் ஆன்மா

தீதும் நன்றும் பிறர்தர வாரா.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே.

அவனன்றி ஓரணுவும் அசையாது.

நடப்பது எல்லாம் நன்மைக்கே - ஏனெனில் எல்லாம் இறைவன் செயல்.

என்று உணர்ந்து, 'யான் - எனது' என்னும் அக, புறப்பற்றுகளை அகற்றிச் செயல்படும். எனவே இவ் அல்லல் அகலும்.

விவிலிய ஒப்பு:

யான் - எனது

...உலகம் முழுவதும் **நாம் சிதறுண்டு போகாதபடி** வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை **நமக்காகக் கட்டி** எழுப்பி, **நமது பெயரை** நிலை நாட்டுவோம் என்றனர். - தொடக்க நூல் 11:4

இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் **என் மகிமைப்** பிரதாபத்துக்கென்று ராஜ்ஜியத்துக்கு அரமனையாக (நேபுகாத்நேச்சாராகிய) **நான் கட்டின** மகாபாபிலோன் அல்லவா என்று சொன்னான். தானியேல் 4 : 30

...எங்கள் ஆற்றலும் எங்கள் கைகளின் வலிமையுமே இந்தச் செயல்களை எங்களுக்கு ஈட்டித் தந்தன என்று உங்கள் உள்ளங்களில் எண்ணாதபடி கவனமாயிருங்கள். - இணைச்சட்டம் 8 :17

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு

"என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன்; அங்கே திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான்

செல்வேன்; ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெருக " என்றார். - யோபு 1 : 21

அவிழும் இவ் அல்லல்

(பிறவினை - கர்மவினை என்னும் இருள்சேர் இருவினையாகிய பாவத்தினால் கட்டப்பட்டுள்ள ஆன்மாக்களாகிய) நீங்கள் (சகளமாய் வந்த இறைவன் வழியாக, அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய கடவுள் வழங்கும்) அந்த அருளாலே (ஆன்மாக்களாகிய உங்கள்) நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல; மாறாக இது கடவுளின் கொடை. இது மனித செயல்களால் ஆனது அல்ல..." - எபேசியர் 2 :8, 9

"...அந்த அருள்தான் மனிதர்களை கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கி, நிலைவாழ்வு பெற வழிவகுக்கிறது. - உரோமையர் 5 : 21

ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும்; அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம். - நீதிமொழிகள் 10 : 22

"காசுக்கு இரண்டு சிட்டுக்குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்று கூட உங்கள் தந்தையின் (இறைவனின்) விருப்பமின்றித் தரையில் விழாது." - மத்தேயு 10 : 29

"...உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது. " - மத்தேயு 5 : 36.

"...உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது." மத்தேயு 10 : 30

அன்றி அவிழாது

அவனவன் தன்தன் சுயஇச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பம்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் - யாக்கோபு 1 :14, 15

"ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி..." - 1 பேதுரு 2 : 21

"போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை,

இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதும் இல்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்க கடவோம்; பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது... " - 1 தீமோத்தேயு 6 : 6-10

"தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான். வந்தது போலவே நிர்வாணியாய்த் திரும்பப் போவான். அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலன் ஒன்றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை..." - பிரசங்கி 5 : 15

மனித உருவில் வந்து இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பித்தர்களே

28. வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்துஏறி னார்கள்என்று உந்தீபற
பெறுவதுஅங்கு என்பெணே உந்தீபற

சொற்பொருள் :

வித்து = விதை - மண்ணில் மறைந்திருக்கும் விதையைப் போன்று, நம் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து நிற்கும் இறைவன். (அருவநிலை)

முளை = மண்ணில் மறைந்திருக்கும் விதையிலிருந்து, நம் கண்கள் காணும்படி மண்ணிற்கு வெளியே தோன்றும் முளையைப்போல, நம் கண்களுக்குப் புலனாகும்படி மனிதனாக வந்த இறைவன் - (உருவநிலை)

என்பெணே = என் பெண்ணே - ஆன்மாவைக் குறிக்கிறது.

பதவுரை :

வித்தினைத்தேடி = நம் கண்களுக்குத் தெரியாமல் மண்ணில் மறைந்திருக்கும் விதையைத் தேடி.

முளையைக் கைவிட்டவர் = நம் கண்கள் காணும்படி அந்த விதையிலிருந்து மண்ணிற்கு வெளியே தோன்றும் முளையை, இது விதையினின்று வேறான ஒன்று என நினைத்து கைவிட்டவர்கள்

பித்து ஏறினார்கள் = பித்தர்களே ஆவர்.

பெறுவது அங்கு என் பெணே = விதைவேறு, முளைவேறு என்று அறிவற்ற நிலையில் கைவிட்டவர்கள் இங்கு பெறுவது என்ன?

கருத்துரை :

நம் கண்களுக்குத் தெரியாமல் மண்ணில் மறைந்திருக்கும் விதையைத்தேடி, நம் கண்கள் காணும்படி அந்த விதையிலிருந்து மண்ணிற்கு வெளியே தோன்றும் முளையை, இது விதையினின்று வேறான ஒன்று என நினைத்து கைவிட்டவர்கள் பித்தர்களே ஆவர். அப்படிப்பட்டவர்கள் இங்கு பெறப்போவது என்ன?

விளக்கவுரை :

அருவநிலையில், நம் கண்கள் காணாதபடி மறைந்திருக்கும் இறைவனைப் பல்வேறு இடங்களில், பல்வேறு முறைகளில் தேடித்தேடி சோர்வடைந்தும், உருவநிலையில் மனிதனாகப் பிறந்து, ஆன்மாக்களைத் தானே தேடி இம்மண்ணுலகிற்கு வந்த அவரை, இறைவன் என்று உணராமல் அவரும் நம்மைப்போன்ற ஒரு மனிதனே எனக் கருதி, அவரை ஏற்றுக் கொள்ளாமல் கைவிட்டவர்கள் பித்தர்களே ஆவர். அவர்கள் இம்மையிலோ, மறுமையிலோ பெறப் போவது தான் என்ன?

இக் கருத்தை திருமூலர் மிக அற்புதமாகக் கூறியுள்ளார்.

சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மைசெய்து
அத்தனை நல்கு அருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணால் நமர் என்பர் புண்ணியர்
அத்தன் இவன் என்று அடி பணிவாரே.

- திருமந்திரம் 1578

வித்தினில் அன்றிமுளை இல்லை அம்முளை
வித்தினில் அன்றிவெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறல்ல
அத்தன்மை யாகும் அரன்நெறி காணுமே

- திருமந்திரம்1932

விவிலிய ஒப்பு:

முளையைக் கைவிடல்

"இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர் தானே. - மத்தேயு 13 : 55

(வித்தினின்று தோன்றிய முளையாகிய) இயேசு (தன்னை இறைமகன் என்று உணர்ந்து கொள்ளாமல் எதிர்க்கும் யூதர்களாகிய) அவர்களை நோக்கி "நீங்கள் தாழ்விலிருந்து உண்டானவர்கள்; நான் உயர்விலிருந்து உண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்து உண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்து உண்டானவனல்ல. ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; (மண்ணில் மறைந்திருக்கும் விதையிலிருந்து, மண்ணிற்கு வெளியே, கண்கள் காணும்படியாக அவ்விதையிலிருந்து

முளைத்துத் தோன்றியுள்ள முளையைப் போன்று, மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்துள்ள இறைமகனாகிய) நானே (மண்ணில் மறைந்துள்ள விதையைப் போன்று, மனிதர்களுக்குக் காணப்படாமல் உள்ள அருவக் கடவுளாகிய) அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் (பித்தர்களாகிய அதி மூடர்) பாவங்களில் சாவீர்கள் என்றார்.

அதற்கு அவர்கள்: நீர்யார்? என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதல் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான். - யோவான் 8 : 23-25

வித்தினைத் தேடுபவர்

பிலிப்பு (இயேசுவாகிய) அவரை நோக்கி: ஆண்டவரே, (அருவக் கடவுளாகிய) பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்.

அதற்கு இயேசு : பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? (மனிதனாக வந்த இறைவனாகிய - முளை) என்னைக் கண்டவன் (அருவக் கடவுளாகிய இறைவன் - விதை) பிதாவைக் கண்டான் .... - யோவான் 14 : 9

நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். - - யோவான் 14 : 10

கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை; தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும், கடவுள் தன்மை கொண்டவருமான ஒரேமகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார். - யோவான் 1 : 18

வித்திலிருந்து முளை

நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்... - யோவான் 16 : 28

வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்... யோவான் 1 : 14

மானிடராய் அவர் வெளிப்படுத்தப்பட்டார். - 1 தீமோத்தேயு 3 : 16

(மறைந்திருக்கும் விதையினின்று தோன்றும் முளையைப்போன்று, இம்மண்ணுலகில் சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) இவர் அதரிசனமான தேவனுடைய (வித்தினுடைய) தற் சுரூபமும், சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்." - கொலோசேயர் 1 : 15

(வித்திலிருந்து தோன்றி, வெளிப்படும் முளையைப் போன்று இம் மண்ணுலகில் சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) இவரை எல்லாவற்றுக்கும் உரிமையாளராக்கினார்; இவர் வழியாக உலகங்களைப் படைத்தார். (நம் கண்களுக்குப் புலப்படாமல் மண்ணில் மறைந்திருக்கும் வித்தினைப்போன்று, நம் கண்களுக்கு புலப்படாமல் உள்ள அருவக்) கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப்பதிவாகவும் விளங்கும் இவர், தம் வல்லமை மிக்க செயலால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார். - எபிரேயர் 1 : 2-3

...சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்.... - யோவான் 18 : 37

வித்து உள்ள காலம் முதல் முளையும் உண்டு

வானத்தை அவர் நிலைநிறுத்தினபோது, கடல் மீது அடிவானத்தின் எல்லையைக் குறித்தபோது, நான் அங்கே இருந்தேன்.

உலகத்தில் மேகங்களை அவர் அமைத்தபோது, ஆழ்கடலில் ஊற்றுகளை அவர் தோற்றுவித்தபோது, நான் அங்கே இருந்தேன்.

அவர் கடலுக்கு எல்லையை ஏற்படுத்தி, அந்த எல்லையைக் கடல்நீர் கடவாதிருக்கும்படி செய்தபோது, பூவுலகிற்கு அவர் அடித்தளமிட்டபோது, நான் அவர் அருகில் அவருடைய 'சிற்பி'யாய் இருந்தேன். - நீதிமொழிகள் 8 : 27-30

இறைவன் இருப்பது எங்கே?

29. சொல்லும் இடம்அன்று; சொல்லப் புகும்இடம்
எல்லை சிவனுக்குஎன்று உந்தீபற
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற.

சொற்பொருள் :

சொல்லும் இடம் = சொற்களால் விரிவாக விளக்கிச் சொல்லக் கூடிய இடம் - இது அறிவு சார்ந்தது.

சொல்லப்புகும் இடம் = சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் வந்த இறைவனே உணர்த்துதல் - இது ஞானம் சார்ந்தது.

என் செய்கோம்? = என்ன செய்ய முடியும்?

பதவுரை :

சிவனுக்கு எல்லை = அன்பே உருவான இறைவனை ஆன்மாக்கள் அடையும் இடம்,

சொல்லும் இடம் அன்று = சொற்களால் விரிவாக, மனித அறிவு சார்ந்த முறையில் (பசுஞானம்) விளக்கிச் சொல்லக் கூடிய இடம் அல்ல.

சொல்லப் புகும் இடம் = சற்குருவாகிய மனிதனாக இம்மண்ணுலகில் வந்த இறைவன் ஆன்மாக்களிடம் (பதி) ஞானம் சார்ந்த முறையில், இறைவனின் திருவருள் சக்தியின் துணை கொண்டு நம் அனுபவத்தில் உணர்த்தும் இடம் ஆகும்.

என்றால் நாம் என்செய்கோம்? = அப்படியானால், (சற்குருவைச் சார்ந்து, தன் முயற்சி இன்றி, தன் செயலற்று, இறைவனின் திருவருள் சக்தியில் நிறைந்து இருப்பதை அன்றி) நாம் வேறு என்ன செய்ய இயலும்?

கருத்துரை :

இறைவன் ஆன்மாக்களை அடையும் இடம் எது என்றால், அது சொற்களால் மனித அறிவு சார்ந்த முறையில் விரிவாக விளக்கிச் சொல்லக்கூடிய இடம் அல்ல. சற்குரு இறைஞானம் சார்ந்த

முறையில், இறைவனின் திருவருள் சக்தியின் துணை கொண்டு நம் அனுபவத்தில் உணர்த்தும் இடம் ஆகும். அப்படியானால், சற்குருவைச் சார்ந்து, தன் முயற்சி இன்றி, தன் செயலற்று, இறைவனின் திருவருள் சக்தியில் நிறைந்து இருப்பதை அன்றி நாம் வேறு என்ன செய்ய இயலும்?

விளக்கவுரை :

இறைவன் ஆன்மாக்களை அடையும் இடம் எது?

சற்குரு இறைவனை உணர்த்தும் போது, ஆன்மாக்கள் இறைவனை சென்று அடையும் அவ்விடம் சொற்களால் விளக்கிச் சொல்ல இயலாத இடம் ஆகும். இறைவனே சற்குருவாகிய மனிதனாக இம் மண்ணுலகில் பிறந்து வந்தார்.

சுத்தசிவன் குருவாய் வந்து

- திருமந்திரம் 1578

விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு.

- திருமந்திரம் 113

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்

குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்

- திருமந்திரம் 1680

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி

- திருவாசகம்

இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்

பிறவா முதல்வன் பிறந்து ...

- போற்றிப் ப∴றொடை 69

விவிலிய ஒப்பு:

சொல்லப் புகும் இடம்

(சற்குருவாகிய மனிதனாக இம்மண்ணுலகில் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) நான் (அருவக் கடவுளாகிய) பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள். - யோவான் 14 :11

சிவனுக்கு எல்லை

(சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து சகளமாய் வந்துள்ள இறைவனாகிய) நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய) பிதாவினிடத்தில் வரான். - யோவான் 14 : 6

"நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்." - யோவான் 14 : 20

சற்குரு

(மனிதர்களாகிய) நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; (இம்மண்ணுலகில் மனிதனாகப் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவா (ஞானாசிரியனா) யிருக்கிறார். மத்தேயு 23 : 10

நீங்களோ ரபீ (போதகர்) என்றழைக்கப்படாதிருங்கள்; (உருவத்தில் வந்துள்ள கடவுளாகிய) கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். - மத்தேயு 23 : 8

திருவருள் சக்தி

சத்திய ஆவியாகிய (இறைவனின் திருவருள் சக்தியாகிய) அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். - யோவான் 15 : 13

"(உருவத்தில் வந்துள்ள கடவுளாகிய - சற்குருவாகிய) என் பெயரால் (அருவக் கடவுளாகிய) தந்தை அனுப்பப்போகிற (இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்." - யோவான் 14 : 26

இல்லறமும் துறவறமும்

30. வீட்டில் இருக்கில்என் நாட்டிலே போகில்என்
கூட்டில்வாள் சாத்திநின்று உந்தீபற
கூடப் படாததுஎன்று உந்தீபற

சொற்பொருள் :

வீடு = வீட்டின்பம் (ஆன்ம விடுதலை) பெற வேண்டி துறவறம் மேற்கொண்டு வாழும் வாழ்க்கை.

நாடு = நாட்டில் பெரும்பான்மையோர் பின்பற்றும் இல்லற வாழ்க்கை வாழ்ந்து, பிறர்க்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்து, பற்றின்றி வாழ்ந்து ஆன்மவிடுதலை பெறுதல்.

கூட்டில் வாள் சாத்துதல் = உறையில் இடப்பட்ட வாள்போல் தன் முயற்சிஇன்றி இருப்பவர்கள். இறைவனின் திருவருள் சக்தியின் வழி நடத்துதலின்படி வாழ்பவர்கள். “தன் முயற்சி இன்றி” என்பது சோம்பித்திரிதல் அன்று; ‘தான்’ என்ற மேட்டிமை இல்லாமல், இறைவன் திருவருள் வழிகாட்டலின்படி, “எல்லாம் அவன் செயல்” என்ற சிந்தனையுடன் தன் விருப்பு வெறுப்பின்றி நடந்து கொள்ளுதல்; பணியாற்றுதல்.

பதவுரை :

வீடடில் இருக்கில் என் = துறவறம் மேற்கொண்டு, ஊரெல்லாம் சுற்றித் திரிவதால் பயன் என்ன?

நாட்டிலே போகில் என் = நாட்டில் பெரும்பான்மையோர் பின்பற்றும் இல்லற வாழ்க்கை மேற்கொண்டால்தான் பயன் என்ன?

கூட்டில் வாள் சாத்திநின்று= உறையில் இடப்பட்ட வாள்போல், தன் முயற்சிஇன்றி, தன் விருப்பு வெறுப்புஇன்றி, இறைவன் திருவருள் சக்தியின் வழிநடத்தலின்படி நின்று, வாழ்க்கையை நடத்தினால் அன்றி.

கூடப்படாதது = ஆன்ம விடுதலை அடைதல் இயலாத செயலாகும்.

கருத்துரை :

வீட்டின்பம் பெறவேண்டி, துறவறத்தை மேற்கொண்டு, ஊரெல்லாம் திரிவதால் பயன் என்ன? இல்லறத்தை மேற்கொண்டு வாழ்வதால் தான் பயன் என்ன?

உறையில் இடப்பட்ட வாள் போன்று, தன் முயற்சி இன்றி, இறைவனின் திருவருள் சக்தியின் வழி நடத்தலின்படி வாழ்க்கையை நடத்தினால்தான் ஆன்ம விடுதலை அடையலாம். இல்லை எனில், ஆன்மவிடுதலை அடைய இயலாத ஒன்றே ஆகும்.

விளக்கவுரை :

இல்லறம், துறவறம் என்ற இரண்டுமே வீட்டின்பமாகிய முக்திப்பேறு அடைவதற்கு உகந்த வழிகளே. அவற்றில் இல்லறம் இயல்பான ஒன்று. துறவறம் இயற்கைக்கு மாறாக வலிந்து மேற்கொள்ளும் ஒன்று. இந்த இரண்டில் எதை மேற்கொண்டாலும், 'யான் - எனது' என்ற மேட்டிமை இல்லாமல், இறைவனின் திருவருள் சக்தியின் வழி நடத்துதலின்படி 'எல்லாம் அவன் செயல்' என்ற சிந்தனையுடன் மனம் அலைபாயாமல் ஒழுகுவதே சிறந்தது. இல்லாவிடில், முக்திப் பேறாகிய ஆன்ம விடுதலையை அடையமுடியாது.

"வீடு" என்பதற்கு வீட்டில் இருந்து கைக்கொள்ளும் இல்லற வாழ்வு என்றும், "நாடு" என்பதற்கு நாட்டின் பல இடங்களில் சுற்றி வாழும் துறவற வாழ்வு என்றும் பொருள் கொண்டாலும் இப்பாடலின் கருத்து மாறாது.

விவிலிய ஒப்பு:

வீட்டில் இருக்கில் என்?

அவருடைய சீடர்கள் அவரை (இயேசுவை) நோக்கி... "திருமணம் செய்து கொள்ளாதிருப்பதே நல்லது" என்றார்கள். அதற்கு அவர், "அருள்கொடை பெற்றவரன்றி வேறு எவரும் இக்கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது"... என்றார். - மத்தேயு 19 : 10- 11

எல்லாரும் என்னைப் போலவே (திருமணம் செய்து கொள்ளாமலேயே) இருக்க வேண்டும் என்பது (பவுலாகிய) என்

விருப்பம். எனினும், ஒவ்வொருவருக்கும் கடவுள்தரும் தனிப்பட்ட அருள்கொடை உண்டு. இது ஒருவருக்கு ஒருவகையாகவும், வேறொருவருக்கு வேறுவகையாகவும் இருக்கிறது." - 1 கொரிந்தியர் 7 : 7

நாட்டிலே போகில்

....தன்னடக்கம் இல்லாதவர்கள் என்றால் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில் காமத்தீயில் உருகுவதை விடத் திருமணம் செய்து கொள்வதே நல்லது. - 1 கொரிந்தியர் 7 : 9

"பெண்ணைத் தொடாமலிருப்பதே நல்லது. எனினும் எங்கும் பரத்தைமை காணப்படுவதால் ஆண்கள் ஒவ்வொருவரும் தம் சொந்த மனைவியோடேயே வாழவேண்டும்; பெண்கள் ஒவ்வொருவரும் தம் சொந்த கணவரோடேயே வாழ வேண்டும். - 1 கொரிந்தியர் 7: 1,2

வீடா? நாடா?

"எது எப்படியிருந்தாலும், ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் அவரவருக்குப் பகிர்ந்தளித்த கொடையின்படியும், அவர் விடுத்த அழைப்பின்படியும் வாழட்டும்." - 1 கொரிந்தியர் 7 : 17

"சிலர் பிறவியிலேயே மணஉறவு கொள்ள முடியாதவராய் இருக்கின்றனர். வேறுசிலர் மனிதரால் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். மற்றும் சிலர் விண்ணரசின் பொருட்டு அந்நிலைக்குத் தம்மையே ஆளாக்கிக் கொள்கின்றனர்..." - மத்தேயு 19 : 10-12

"...கடவுளின் கட்டளையைக் கடைப்பிடித்தலே பயன்தரும்." - 1 கொரிந்தியர் 7 : 19

"நான் - எனது - கூட்டில் வாள்சாத்தி"

அப்பொழுது ஒருவர் இயேசுவிடம் வந்து, "போதகரே, நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டுக் கொண்டார். அதற்கு இயேசு "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும்; அப்பொழுது விண்ணகத்தில் செல்வராய் இருப்பீர். பின்பு என்னைப் பின்பற்றும்" என்றார். செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது.' - மத்தேயு 19 : 16,21-24

இல்லறமும் துறவறமும்:

"ஏனோக்குக்கு அறுபத்தைந்து வயதானபோது, அவனுக்கு மெத்துசேலா பிறந்தான். மெத்துசேலா பிறந்தபின் ஏனோக்கு முந்நூறு ஆண்டுகள் கடவுளோடு நடந்தான். ஏனோக்கிற்குப் புதல்வரும், புதல்வியரும் பிறந்தனர். ஏனோக்கு மொத்தம் முந்நூற்று அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தான். ஏனோக்கு கடவுளோடு நடந்து கொண்டிருந்தான். பின்பு அவனைக் காணவில்லை. ஏனெனில் கடவுள் அவனை எடுத்துக் கொண்டார்." - தொடக்கநூல் 5 : 21-24.

...இதோ, அக்கினி ரதமும்., அக்கினிக் குதிரைகளும் அவர்கள் (எலியா - எலிசா) நடுவாக வந்து இருவரையும் பிரித்தது: எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். 2 இராஜாக்கள் 2 : 11 (எலியா திருமணம் செய்து கொள்ளாமல் இறைபணி செய்தவர்.)

மதுவெறி துவிர்ப்பீர்; இறைவனை நாடுவீர்!

31. சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்று
ஆவி அறாதேஎன்று உந்தீபற
அவ்வுரை கேளாதே உந்தீபற.

சொற்பொருள் :

சாவி = பதர் - உள்ளே அரிசி இல்லாது, வெளித்தோற்றத்தில் அரிசிஉள்ள நெல்போல் காட்சியளிக்கும் கருக்காயாக இருப்பது. ஆன்மாக்களுக்கு முக்திப்பேறு அளிக்காமல், சில சடங்குகள், விழாக்கள் போன்றவற்றில் ஈடுபடச் செய்து, உள்ளத்தில் பரவசத்தை உருவாக்கி, உணர்ச்சி வசப்படச் செய்து, சில நேரங்களில் வெறிகொள்ளவும் செய்து, மற்றவர்கள் மேல் வெறுப்பு கொள்ளச்செய்து, வாழ்நாளை வீணாக்கும் சமயங்களுக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ளது.

சமயம் = மதம்

புக்கு = புகுந்து, ஈடுபட்டு,

ஆவி = உயிர், வாழ்நாள்

அறாதே = போக்கிக் கொள்ளாதே

ஆவி அறாதே = வீடுபேறு அடைய இயலாமல் வாழ்நாள் வீணே கழிதல்.

பதவுரை :

சாவிபோம் = வெளித்தோற்றத்தில் நெல்போல் காட்சியளித்து, உள்ளே அரிசியில்லாத கருக்காயைப் போன்ற.

மற்றைச் சமயங்கள் புக்கு நின்று = சகளமாய் வந்து, தானாகத் தரும் இறைவனைப் பற்றிக்கொள்ளாமல், மனிதர் போதனைகளைக் கூறும் மதங்களில் புகுந்து, சமயச் சடங்குகள் பல ஆற்றி, சமயவெறி கொண்டு,

ஆவி அறாதே = வீடுபேறு அடைய இயலாமல், உன்வாழ்நாளை வீணாக்கிக் கொள்ளாதே.

அவ்வுரை கேளாதே = அவை உரைக்கும் வீண் ஆரவார உரைகளைக் கேட்டு, அவற்றைக் கைக்கொள்ள முனையாதே.

கருத்துரை :

சகளமாய் வந்து, தானாகத் தரும் இறைவனைப்பற்றிக் கொள்ளாமல், சமயச் சடங்குகள், விழாக்கள் போன்ற மனிதர் போதனைகளை முன்னிலைப் படுத்திக் கூறும் மதங்களில் புகுந்து, ஈடுபட்டு, வீடுபேறு அடையாமல், வாழ்நாளை வீணாக்கிக் கொள்ள வேண்டாம். உள்ளே அரிசி இல்லாமல், வெளித்தோற்றத்திற்கு அரிசி உள்ளதுபோல் தோற்றமளிக்கும் கருக்காயைப் போன்றவை அவை. எனவே, அவை உரைக்கும் ஆரவார, வெற்றுரைகளைக் கேளாதீர்.

விளக்கவுரை :

இறைவன் ஒருவரே. அவர் எம்மதத்தையும் சேர்ந்தவர் அல்லர். எம்மதத்திற்கும் உரியவர் அல்லர். உலகமக்கள் அனைவருக்கும் பொதுவானவர். எனவே, இறைவனது பிள்ளைகளான இறையடியார்களும் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது.

இறைபற்று, இறை அனுபவம், இறை அருள் மட்டுமே மனிதனை வீடுபேறு அடையச் செய்யும். சமயத்தின் குறிக்கோள் இறைவனிடம் வழி நடத்துதலும், வீடுபேற்றுக்கு வழிகாட்டலுமே ஆகும். சமயமே வீடு பேற்றினை வழங்க இயலாது.

பலர் இறைவனின் பிள்ளைகளாக இருப்பதை விட, தங்கள் முன்னோர் சார்ந்த மதத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்வதைத்தான் விரும்புகின்றனர். இறைவனை முதன்மைப் படுத்துவதை விட தங்கள் மதச் சடங்குகள், விழாக்கள் போன்றவைகளை நியாயப்படுத்துவதில் தான் பெருமை கொள்கின்றனர்; இன்பம் காண்கின்றனர்.

தங்கள் மத வேதம் மட்டுமே இறைவனிடமிருந்து நேரடியாக வந்தது என்றும், மற்ற மத வேதங்கள் மனிதர் கற்பனையே என்று கூறுவதிலும், அதை நிரூபிக்க முயல்வதிலும் உவகை கொள்கின்றனர், கடவுள் தங்கள் மதத்தைக் கைக்கொள்ளும்

மக்களை மட்டுமே துறக்கத்தில் (சொர்க்கத்தில்) வைப்பார் என்றும், மற்ற மதத்தினரை நிரையத்தில் (நரகத்தில்) போட்டுவிடுவார் என்றும் கூறி அச்சம் கொள்ளச் செய்வதில் இன்பம் காண்பர்.

மேலும், அரசியல் காரணங்களினால் நடைபெற்ற உலகப்பெரும் போர்களில் கொல்லப்பட்டவர்களைவிட, அன்பைப் போதிப்பதாகக் கூறிக்கொள்ளும் மதங்களின் பெயரால் நடைபெற்ற போர்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையே அதிகம் என்பது வரலாற்றாசிரியர்களின் கூற்று ஆகும்.

இறைபற்று உடன்மனிதர்களை நேசிக்கச் செய்யும்;
மதவெறி மற்றவர்களை வெறுத்து ஒதுக்கும்.
இறைபற்று உடன் மனிதர்கள் வாழ வழிவகுக்கும்;
மதவெறி மற்றவர்களைக் கொன்று குவிக்கும்.
இறைப்பற்று காட்டுவது முக்திகான பாதை!
மதவெறி ஊட்டுவது தற்காலிக போதை!!

எனவே சமயவெறி கொள்ளாமல், இறைப்பற்று கொண்டு, சகளமாய் வந்த இறைவனைப் பற்றிக்கொண்டு, அவரது திருவருள் சக்தியின் வழிகாட்டுதலின்படி நடப்பதே "வீடுபேறு" அடையச்செய்யும்.

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தான் எங்கே
யோகங்கள் எங்கே உணர்வு எங்கே - பாகத்து
அருள் வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யார் அறிவார் பேசு.

- திருக்களிற்றுப்படியார் 5

.... ஆர்த்தகடல் தண்ணீர் குடித்தவர்க்குத்
தாகம் தணிந்திடுமோ.....

- திருக்களிற்றுப்படியார் 6

ஆன சமயம் அதுஇது நன்றுஎனும்
மாய மனிதர் மயக்க மதுமொழி
கானம் கடந்த கடவுளை நாடுமின்
ஊனம் கடந்த உருவது ஆமே

- திருமந்திரம் 1545

ஆமாறு உரைக்கும் அறு சமயாதிக்குப்
போமாறு தான் இல்லை புண்ணியம் அல்லது அங்கு
ஆம் ஆம் வழி ஆக்கும் அவ்வேறு உயிர்க்கட்குப்
போம் ஆறு அவ் ஆதாரப் பூங்கொடி யாளே.

திருமந்திரம் 1561

எனவே, நாம் மதத்தின் பிள்ளைகளாக இருந்து அதன் உரையைக் கேட்டு, மதவெறி கொள்ளாமல், இறைவனின் பிள்ளைகளாக இருந்து, அவர் வழியில் நடந்து, அவர் அருளால் முக்திபேறு அடைவோமாக!

விவிலிய ஒப்பு:

சாவிபோம் சமயங்கள்

“வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஒருவரையாவது உங்கள் சமய(மத)த்தில் சேர்ப்பதற்கு, நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகிறீர். அவ்வாறு சேர்ந்த பின் அவரை உங்களை விட இருமடங்கு நரகத் தண்டனைக்கு ஆளாக்குகிறீர்கள்..” இயேசு - மத்தேயு 23 : 15

இறைவனை நாடுவீர்

...“ஏதென்சு நகர மக்களே, நீங்கள் மிகுந்த சமயப் பற்றுள்ளவர்கள் என்பதை நான் காண்கிறேன். நான் உங்களுடைய தொழுகையிடங்களை உற்றுப்பார்த்துக் கொண்டு வந்தபோது, ‘அறியாத தெய்வத்துக்கு’ என்று எழுதப்பட்டிருந்த பலிபீடம் ஒன்றைக் கண்டேன். நீங்கள் அறியாமல் வழிபட்டுக்கொண்டிருக்கும் அந்த தெய்வத்தையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகையும், அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள், விண்ணுக்கும், மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர் கையால் கட்டிய திருக்கோவில்களில் அவர் குடியிருப்பதில்லை. அனைவருக்கும் உயிரையும், மூச்சையும் மற்றனைத்தையும் கொடுப்பவர் அவரே. எனவே மனிதர் கையால் செய்யும் ஊழியம் எதுவும் அவருக்குத் தேவையில்லை...” - திருத்தூதர் பணிகள் 17 : 22- 25

ஆவி அறாதே; அவ்வுரை கேளாதே - ஏனென்றால்,

“நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்கு தெரியாதா? ...கடவுளின் கோவில் தூயது. நீங்களே அக் கோவில்.” - 1 கொரிந்தியர் 3 : 16, 17

இறைவனே முக்திப்பேறு அளிக்கமுடியும்

"வழியும், உண்மையும், வாழ்வும் (சகளமாய் வந்து, தானாகத் தந்த இறைவனாகிய) நானே - என் வழியாய் அன்றி எவரும் (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய அப் பொருளாகிய) தந்தையிடம் வருவதில்லை. - யோவான் 14 : 7

மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது. - மத்தேயு 4 : 17

உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. உன் மீது நீ அன்பு செலுத்துவதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு செலுத்து ." - மத்தேயு 22 : 37, 39

நாம் இருக்கவேண்டிய அடியார் திருக்கூட்டம்

"விண்ணகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள தலைப்பேறானவர்களின் திருச்சபை... நிறைவு பெற்ற நேர்மையாளர்களோடு சேர்ந்து அனைவருக்கும் நடுவரான கடவுள் முன்னிலையிலும், புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளராகிய (சற்குருவாகிய) இயேசுவின் முன்னிலையிலும் நிற்கிறீர்கள்..." - எபிரேயர் 12 : 23, 24

அனைவரையும் (சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்த) கிறிஸ்துவுக்கு அடிப்பணியச்செய்து, அனைத்துக்கும் மேலாக, அவரைத் திருச்சபைக்குத் தலையாகத் தந்தருளினார். திருச்சபையே அவரது உடல். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரால் அது நிறைவுபெறுகின்றது. - எபேசியர் 1 : 22, 23

(ஒரு குறிப்பிட்ட மதமாகிய) இக்கொட்டிலைச் சேரா வேறுஆடு (ஆன்மாக்)களும் எனக்கு உள்ளன. (சகளமாய் வந்துள்ள) நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் (சற்குருவாகிய மனிதனாக வந்துள்ள) எனது குரலுக்குச் செவிசாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் (மதங்கள் அல்ல - அடியார் திருக்கூட்டம்) ஒரே ஆயரும் (மதத்திற்கு ஒரு கடவுளல்ல) என்னும் நிலை ஏற்படும். - யோவான் 10 : 16

"கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, அனைத்தையுமே (சகளமாய் வந்து தானாகத் தந்த) கிறிஸ்துவின் தலைமையில் (கிறிஸ்துவ மதத்தில் அல்ல) ஒன்று சேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம் மறைபொருள்." - எபேசியர் 1 : 10

தாமரை இலைத் தண்ணீர்

32. துரியம் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதுஎன்று உந்தீபற
துறந்தார் அவர்கள்என்று உந்தீபற

சொற்பொருள் :

ஆன்மாக்கள் மனித உடலில் இவ்வுலகில் வாழும் காலத்தில் ஐந்து நிலைகளிலே நிற்கும் என்பர்.

அவை

நனவு, கனவு, உறக்கம் (துயில்), பேருறக்கம் (அறிதுயில்), உயிர்ப்பு அடக்கம் (இன்துயில்) என்று தமிழிலும்,

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்று வடமொழியிலும் கூறப்படும்.

நனவு என்னும் சாக்கிரத்தில் யான், எனது என்னும் அகப்பற்று, புறப்பற்றுகளாகிய செருக்கும், தன்னைப்பற்றிய உணர்வும், உலகியல் பற்றிய உணர்வுகளும் மேலோங்கி நிற்கும்.

இறைவனின் திருவருள் சக்தி வழிநடத்த, ஆன்மநிலை சாக்கிரத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து உலகியல் பற்றுகள் அகன்று, தன்முனைப்பும் அகன்று, பரம்பொருளுடன் ஆன்மாக்கள் கூடி இறைசாயலாகவே மாறிநிற்கும். இது ஐந்தாம் நிலையாகிய துரியாதீதம் எனப்படும்.

நான்காம் நிலையாகிய பேருறக்கம் (அறிதுயில்) எனப்படும் துரியநிலை அடைந்தவர்களின் பண்புகள்... "எல்லாவகையான தன் நினைப்புகளும் அகன்று இறை சிந்தனையாகவே இருப்பர்." இது மலங்களைக் கடந்த நிலையாகும்.

பதவுரை :

துரியம் கடந்த இத்தொண்டர்க்கு = ஆன்மாவின் வளர்ச்சிப்படி நிலைகளில் நான்காவது நிலையான துரியநிலையை அடைந்து, பின்பு அதையும் கடந்து ஐந்தாம் நிலையாகிய துரியாதீத நிலைக்குச் செல்ல இருக்கும் இறையடியார்கள்,

சாக்கிரம் துரியமாய் நின்றது = ஆன்மாவின் சாக்கிரம் எனப்படும் விழிப்பு நிலையிலேயே துரிய நிலைபோல நடந்து கொள்வர்.

அவர்கள் துறந்தார் = அத்தகைய இறையடியார்கள் இவ்வுலகில் மனித உடலில் வாழ்ந்து வந்தாலும், இவ்வுலகத்திற்கு உரியவர் அல்லர். இவர்கள் முற்றும் துறந்தவர் ஆவார்.

கருத்துரை :

துரிய நிலையை அடைந்து, துரியதீத நிலைக்குச் செல்ல இருக்கும் இறையடியார்கள், சாக்கிரநிலையாகிய நனவு நிலையிலேயே, உலகப் பற்றுகளால் பாதிக்கப்படாமல், இறை சிந்தனையாகவே எப்பொழுதும் இருப்பர். எனவே அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தாலும், இவ்வுலகத்திற்கு உரியவர்கள் அல்லர். இவர்கள் முற்றும் துறந்த துறவியர் ஆவர்.

விளக்கவுரை :

துரிய நிலையைக் கடந்து, இவ்வுலகில் வாழும் இறையடியார்கள் தங்களைப் பற்றிய சிந்தனை இன்றி, இறைசிந்தனையாகவும், மற்றவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகச் செயல்படுபவர்களுமாகவே வாழ்வர். உலகியல் செயல்களால் பற்றப்படாமல் இருப்பர்.

விவிலிய ஒப்பு:

துரியம் கடந்து

"(மனிதனாகப் பிறந்து வந்துள்ள இறைவனாகிய) நான் (அருவக் கடவுளாகிய) உம்முடைய வார்த்தையை (துரியம் கடந்த தொண்டர்களாகிய) அவர்களுக்குக் கொடுத்தேன், நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது."

"...நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல (துரியம் கடந்த) அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன் - " இயேசு - யோவான் 17 : 14, 21

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்; என் ஓட்டத்தை (துரிய நிலையை) முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது (துரியா தீத நிலையாகிய) நேரிய வாழ்வுக்கான வெற்றிவாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்." - 2 தீமோத்தேயு 4 : 7, 8

"...உயிர் நீத்துக் (துரியாதீத நிலையில்) கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம்; இதுவே மிகச் சிறந்தது. ஆனால், இன்னும் (துரிய நிலையில்) வாழவேண்டும் என்பது மற்றொருபுறம். இது (சாக்கிர நிலையில் வாழும்) உங்கள் பொருட்டு மிகத்தேவையாய் இருக்கிறது. நான் உங்களோடிருப்பதால் நீங்கள் நம்பிக்கையில் வளர்ச்சி பெற்று மகிழ்ச்சியடைவீர்கள். எனவே உங்கள் அனைவரோடும் (சாக்கிர நிலையில்) தங்கியிருப்பேன் என உறுதியாய் நம்புகிறேன். ஆகவே, நான் உங்களிடம் மீண்டும் வருவதால், கிறிஸ்து இயேசுவின் உறவில் வாழும் நீங்கள் என்பொருட்டு இன்னும் மிகுதியாய் பெருமிதம் கொள்வீர்கள்." - பிலிப்பியர் 1 : 23 - 26

சாக்கிரம் துரியமாய் நிற்பது எப்படி?
(நனவு அறிதுயிலாக நிற்பது எப்படி?)

"(சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள) கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள். இறைவனின் திருவருள் சக்தியாகிய தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம்." - கலாத்தியர் 5 : 24

"(துரிய நிலை கடந்த) நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன். அதன் வழியாகவே, என்னைப்பொறுத்தவரையில், உலகம் (இச்சைகள்) சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்..." கலாத்தியர் 6: 14

சாக்கிரம் துரியமானால்

"எல்லாவற்றையும் அனுபவிக்க (துரியம் கடந்த) எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்." - 1 கொரிந்தியர் 6: 12

"...தேகத்தை விட்டுப் பிரிந்து, (சகளமாய் வந்து தானாகத் தந்த) கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு; அது அதிக நன்மையாயிருக்கும். அப்படியிருந்தும் (துரிய நிலை கடந்த) நான் சரீரத்தில் தரித்திருப்பது (சாக்கிர நிலையில் உள்ள) உங்களுக்கு அதிக அவசியம்." - பிலிப்பியர் 11 : 23, 24

நிலையற்றது நிலையானதாகும்

33. பெற்றசிற் றின்பமே பேரின்ப மாய்அங்கே
முற்ற வரும்பரிசு உந்தீபற
முளையாது பந்தம்என்று உந்தீபற

சொற்பொருள் :

சிற்றின்பம் = நிலையற்ற உலகியல்இன்பம் - இம்மை - உடல் சார்ந்தது.

பேரின்பம் = நிலையான மறுஉலக இன்பம் - மறுமை - ஆன்மா சார்ந்தது.

முற்றவரும் = நிறைவேறும்; முடியும்.

பரிசு = தன்மை, பெருமை, கொடை

முளையாது = தோன்றாது, உருவாகாது.

பந்தம் = உறவு, கட்டு

பதவுரை :

பெற்ற சிற்றின்பமே = நிலையில்லாத இவ்வுலக வாழ்க்கையில் நாம் பெற்றுள்ள பொருட்களை தக்க முறையில் கையாண்டால்,

அங்கே பேரின்பமாய் = மறு உலக வாழ்க்கையை நாம் அடையும் பொழுது நிலையான இன்பம் அளிக்கும்.

பரிசு முற்ற வரும் = அருள் கொடையாய் அவை மாறும். மேலும்,

பந்தம் முளையாது = நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபாடு தோன்றாது.

கருத்துரை :

நிலையில்லாத இவ்வுலக வாழ்க்கையில் நாம் அடைந்துள்ள பொருட்களை, இறைவனின் திருவருள் சக்தியினால் முற்றிலுமாக வழிநடத்தப்பட்டு, தக்க முறையில் கையாண்டால், மறுஉலக வாழ்க்கையை நாம் அடையும் பொழுது நிலையான இன்பமளிக்கும் அருள் கொடையாய் அவை மாறும். மேலும் நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபாடு தோன்றாது.

விளக்கவுரை :

பரந்த நீர்ப் பரப்பான மாக்கடலில் பழுதற்ற படகு நீண்ட நேரம் பயணம் செய்தாலும், கடல்நீர் படகுக்குள் புகாது. நாம் விரும்பிய இடத்தையும் சென்றடையலாம். படகில் பழுது ஏற்பட்டால் கடல்நீர் உள்ளே புகுந்து, படகு மூழ்கிவிடும். பயணம் தடைபட்டு, பயணம் செய்பவரும் துன்பத்திற்கு ஆளாவார்.

பரந்த நீர்ப்பரப்பான மாக்கடல் = நிலையில்லா உலகப் பொருட்கள் (பெற்ற சிற்றின்பம்).

பழுதற்ற படகு = இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு திருவருள் சக்தியினால் வழிநடத்தப்படுதல்.

கடல் நீர் புகாது = உலகியல் இன்பங்களில் ஈடுபாடு வராது (முளையாது பந்தம்).

நாம் விரும்பிய இடத்தைச் சென்றடைதல் = மறுமையின்பம் (பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு) .

பழுதுள்ள படகு = திருவருளால் அன்றி, ஐம்புலன்களின் வழியாக நடத்தப்படுதல்.

ஆம்விதி நாடிஅறம்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்

- திருமந்திரம் 195

அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்
வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வல்மின்
செவ்வியன் ஆகிச் சிறந்துண்ணும் போதுஒரு
தவ்விக் கொடுஉண்மின் தலைப்பட்ட போதே

- திருமந்திரம் 196

பெரும்செல்வம் கேடென்று முன்னே படைத்த
அரும்செல்வம் தந்த தலைவனை நாடும்

- திருமந்திரம் 220

விவிலிய ஒப்பு:

பெற்ற சிற்றின்பம் பேரின்பமாய் மாறுவது எப்படி?

“(சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள) நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாததுபோல் (என்னால் தடுத்தாட்கொள்ளப்பட்ட

ஆன்மாக்களாகிய) அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல." - யோவான் 17 : 16

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. - மத்தேயு 5: 14

"தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும், மாசற்றதுமான சமயவாழ்வு எதுவெனில்... (பெற்ற சிற்றின்பமாகிய) உலகத்தால் (பேரின்பமாய் முற்றவரும் படியாகக்) கறைபடாதபடி தம்மைக் காத்துக் கொள்வதும் ஆகும்." - யாக்கோபு 1 : 27

"...உலகுக்கு (சிற்றின்பத்திற்கு) நண்பராக விரும்பும் எவரும் (பேரின்பத்தை அருளும்) கடவுளைப் பகைப்பவர் ஆவார்." - யாக்கோபு 4 : 4

"இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக!" - உரோமையர் 12 : 2

"...தூய வாழ்வுக்கு வழிவகுக்கும் ஏற்புடைய செயல்களுக்கு உங்கள் உறுப்புகளை அடிமையாக்குங்கள்." - உரோமையர் 6 : 19

"(தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களாகிய) உங்கள் உடல்கள் (சகளமாய் வந்து தானாகத் தந்த இறைவனாகிய) கிறிஸ்துவின் உறுப்புகள்..."- 1 கொரிந்தியர் 6 : 15

செல்வந்தர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது என்றார். சீடர்கள் இதைக்கேட்டு, அப்படியானால் யார்தாம் மீட்புப் பெறமுடியும்? என்று கூறி மிகவும் வியப்படைந்தார்கள். இயேசு அவர்களைக் கூர்ந்து நோக்கி, மனிதரால் இது இயலாது. ஆனால் கடவுளால் எல்லாம் இயலும் என்றார். - மத்தேயு 19 : 24 - 26

...இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?

அதற்கு இயேசு நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று, ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும் என்றார். - மத்தேயு 19 : 20-21.

மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும்; திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள்; அங்கே பூச்சியோ, துருவோ அழிப்பதில்லை; திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும். மத்தேயு 6 : 19-21

உலகத்திற்கு நாம் எதையும் கொண்டு வந்ததில்லை; உலகத்தை விட்டு எதையும் கொண்டு போகவும் முடியாது. எனவே உணவும் உடையும் நமக்கு இருந்தால் அவற்றில் நாம் மனநிறைவு கொள்வோம். செல்வத்தைச் சேர்க்க விரும்புபவர்கள் சோதனையாகிய கண்ணியில் சிக்கிக் கொள்கிறார்கள். அறிவீனமான, தீமை விளைவிக்கக் கூடிய பல்வேறு தீய நாட்டங்களில் வீழ்ந்து விடுகிறார்கள்... பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். - 1 தீமோத்தேயு 6 : 7-10

அதற்கு இயேசு பிரதியுத்தரமாக என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான். - மாற்கு 10 : 29, 30

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்... -மத்தேயு 10: 42

...நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளில் ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள். - லூக்கா 16: 9.

அம்மையப்பர்

34. பேரின்பம் ஆன பிரமக் கிழத்தியோடு
ஓர்இன்பத்து உள்ளான்என்று உந்தீபற
உன்னையே ஆண்டான்என்று உந்தீபற

சொற்பொருள் :

பேரின்பம் = தன்னோடு இணையும் ஆன்மாக்களுக்கு இறைவன் அளிக்கும் நிலையான, எல்லையற்ற இன்பம்.

கிழத்தி = உரிமை உடையவள்; தலைவி.

கிழவன் = உரிமை உடையவன்; தலைவன்.

பிரமக் கிழத்தி = பெருமானான இறைவனுக்கே உரிமை உடையவள்; இறைவனின் திருவருள் சக்தி. பரம்பொருளாகிய இறைவனைத் தலைவனாகவும், அடியார் (ஆன்மாக்)களின் தூய வாழ்விற்கு வழிநடத்தும் அவரது திருவருள் சக்தியைத் தலைவியாகவும் உருவகம் செய்துள்ளார். இறைவனின் 'அர்த்த நாரீசுவரர்' என்னும் 'அம்மையப்பர்' திருக்கோலம் இக்கருத்தையே உணர்த்துகிறது. அடியார் துயர்களைந்து அவர்தம் வாழ்வில் எல்லையில்லாப் பேரின்பம் வழங்கி முக்திப்பேறு அளிக்க இறைவன் மேற்கொண்ட திருக்கோலமே இது.

பதவுரை :

பேரின்பம் ஆன பிரமக் கிழத்தியோடு ஓரின்பத்து உள்ளான்= ஆன்மாக்களுக்குப் பேரின்பம் வழங்கும் திருவருள் சத்தியுடன் இணைந்து நிலையான இன்பத்தில் உள்ளார் இறைவன்.

உன்னையே ஆண்டான் = அப்பரம்பொருளை நீ சார்ந்து நிற்கும்போது, அவர் உன்னையே ஆண்டுகொள்கின்றார்.

கருத்துரை :

பேரின்பத்தை ஆன்மாக்களுக்கு வழங்கும் பிரமக்கிழத்தியான தனது திருவருள் சக்தியுடன் என்றென்றும் பிரியாது, நிலையான இன்பத்தில் திளைத்திருக்கும் இறைவன், தன்னைச் சார்ந்து நிற்கும் ஆன்மாக்களை ஆண்டுகொள்கிறார்.

விளக்கவுரை :

இறைவனின் திருவருள் சக்தியை வள்ளுவர் தமது நூலான திருக்குறளின் பாயிரத்தில் வான்சிறப்பு என்ற தலைப்பில் போற்றிச் சிறப்பிக்கின்றார். திருமூலர் தம் திருமந்திரத்திலும் இப்பெயரால் போற்றுவது சிறப்பிற்குரியது.

வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
உரையில்லை உள்ளத்து அகத்துநின்று ஊறும்
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீரக்
கரையில்லை எந்தை கழுமணி ஆறே

- திருமந்திரம் 249

அமுதூறும் மாமழை நீர்அத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்.

- திருமந்திரம் 248

விவிலிய ஒப்பு:

கிறித்தவர்கள் இறைவனின் திருவருள் சக்தியைத் தூய ஆவி என்று குறிப்பிடுகின்றனர்.

(சற்குருவாகிய மனிதனாக வந்த கடவுளாகிய) என்பெயரால் (அன்பே உருவான அருவக் கடவுளான) தந்தை அனுப்பப் போகிற (பேரின்பமான பிரமக் கிழத்தியான) தூய ஆவியாராம் துணையாளர் (இறையடியாராகிய ஆன்மாக்களாகிய) உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். - யோவான் 14 : 26

(பிரமக் கிழத்தியான) தூய ஆவியின் கனியோ அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும். - கலாத்தியர் 5 : 22,23

மிகுந்த வேதனையின் நடுவிலும் நீங்கள் தூய ஆவி (திருவருள் சக்தி) அருளும் மகிழ்வோடு இறைவார்த்தையை ஏற்றுக் கொண்டீர்கள். - 1 தெசலோனிக்கேயர் 1 : 6

உண்மையை வெளிப்படுத்தும் (பேரின்பமான பிரமக் கிழத்தியாகிய) தூய ஆவியார் வரும்போது, அவர் முழுஉண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார். - யோவான் 16 : 13

மாம்ச சிந்தை மரணம்; (பிரமக் கிழத்தியான) ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம். - ரோமர் 8 : 6

..."அவ்வுடன்படிக்கை (புதிய உடன்படிக்கை), எழுதப்பட்ட சட்டத்தைச் சார்ந்ததல்ல; (பிரமக் கிழத்தியாகிய) தூய ஆவியையே சார்ந்தது. ஏனெனில் எழுதப்பட்ட சட்டத்தால் விளைவது சாவு; தூய ஆவியால் விளைவது வாழ்வு." - 2 கொரிந்தியர் 3 : 6

பெண்களும் பேய்களும்

**35. பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டார்என்று உந்தீபற
காணாதார் காணார்என்று உந்தீபற**

சொற்பொருள் :

பெண்டிர்பிடி = பேயால் பிடிக்கப்பட்ட பெண்கள்; இறைவனின் திருவருள் சக்தியால் நிறைந்த ஆன்மாக்களுக்கு எடுத்துக் காட்டாக இங்கு சொல்லப்படுகிறது.

ஆண்மக்கள் பேய் = பெண்டிரைப் பிடித்துள்ள பேய்; இறைவனின் திருவருள் சக்திக்கு எடுத்துக் காட்டாக இங்கு சொல்லப்படுகிறது. இறைவனின் திருவருள் சக்தி ஆன்மாவை நிறைத்து, அதனைத் தன் வசப்படுத்துகிறது. ஆண்மக்கள் என்னும் சொல் பன்மை வடிவில் இருந்தாலும், இறைவனின் திருவருள் சக்தியைக் குறிப்பதினால், அதனை ஒருமையாகக் கொள்வது வழக்கம்.

இறைவனின் திருவருள் சக்தியால் நிரம்பப்பெற்ற ஆன்மாவைப் பேய்பிடித்தபெண்ணாகவும், இறைவனின் திருவருள் சக்தியை அப்பெண்ணைப் பிடித்துள்ள ஆண்பேயாகவும் இந்நூலாசிரியர் உருவகப்படுத்தியுள்ளார்.

பதவுரை :

பெண்டிர் பிடிபோல = பேயால் பிடிக்கப்பட்டுள்ள பெண் போல ஆன்மாக்களும், (பேயால் பிடிக்கப்பட்டுள்ள பெண், தான் ஒரு பெண் என்ற நிலைமை மாறி, பேயின் செயலாகவே நடந்து கொள்வாள். அது போல இறைவனின் திருவருள் சக்தியால் நிரம்பப்பெற்ற ஆன்மாக்கள் காணப்படுகின்றன).

ஆண்மக்கள் பேய்போல = அப்பெண்ணைப் பிடித்துள்ள பேயினைப் போல, இறைவனின் திருவருள் சக்தியும் (பேய் தன்னால் பிடிக்கப்பட்டுள்ள பெண்ணை அவள் விருப்பத்தின்படி நடக்கவிடாமல், தன் செயலாகவே நடத்திச் செல்லும். அதுபோல ஆன்மாக்களை நிறைத்துள்ள இறைவனின் திருவருட் சக்தியும் ஆன்மாக்களிடம் செயல்படுகிறது).

கண்டாரே கண்டார் = இருக்கின்ற நிலை அடைந்தவரே இறை அனுபவத்தில் நிலை பெற்றவர் ஆவார்.

காணாதார் காணார் = இது போன்ற நிலை அடையப்பெறாதவர் இறை அனுபவத்தை முழுமையாக உணரமாட்டார்கள்.

கருத்துரை :

பேயால் பிடிக்கப்பட்டுள்ள பெண்ணின் நிலையையும், அப்பெண்ணைப் பிடித்துள்ள பேயின் நிலையையும் போன்றது, இறைவனின் திருவருட் சக்தியால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களின் நிலையும், அவ்வான்மாக்களை ஆட்கொள்ளும் இறைவனின் திருவருட்சக்தியின் நிலையுமாகும்.

இதுபோன்ற நிலையை அடைந்தவரே இறை இன்பத்தில் முற்றிலுமாகத் திளைப்பவர் ஆவார். இந்நிலையை அடையாதவர் இறை இன்பத்தில் முழுமையாகத் திளைக்க முடியாது. :

விளக்கவுரை :

ஆன்மாவின் நிலை பேய் பிடித்த பெண்ணின் நிலை போன்றது. இறைவனின் திருவருள் சக்தியின் நிலை பெண்ணைப் பிடித்துள்ள பேயின் நிலை போன்றது. பேயால் பிடிக்கப்பட்டுள்ள ஒரு பெண்ணுடைய சொல்லும் செயலும் பேயின் சொல்லும், செயலுமாகவே மாறிவிடுகிறது. அதுவரை அவளிடம் காணப்பட்ட அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணநலன்கள் மறைந்து, வலிமை, துணிவு, ஆவேசம் உருவாகிறது. அவளின் பெண்தன்மை மறைந்து, தான் ஒரு பெண் என்பதையே மறந்து விடுகிறாள்.

அதுபோல், இறைவனின் திருவருட்சக்தியும் ஆன்மாக்களை ஆட்கொள்ளும்போது அவற்றின் செயல்களை அகற்றி, தன் செயலாகவே மாற்றி விடுகிறது.

இத்தகையவர்கள் இறைவனுக்காக எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். இத்தகைய செயல்களைப் பல இறையடியார்களிடம் நாம் காணலாம். நாயன்மார், ஆழ்வார் போன்றோர்களின் வாழ்வில் நாம் இத்தகையப் போக்கைக் காண்கிறோம்.

இறைவனின் திருவருட்சக்தி இறையடியார்களை ஆட்கொள்ளும்போது, அதுவரை அவர்களிடம் இருந்த

தயக்கம் - கூச்சம் போன்றவை ஓடி ஒளிந்து விடும். எனவே, இறைவன் மீது ஆராத அன்பு பூண்டவர்கள் உலகியல் இயல்பிற்கு மாறாக நடப்பதினால் பித்தேறியவர்கள் போல் காட்சியளிப்பர். பேயாழ்வார், பூதத்தாழ்வார் போன்ற ஆழ்வார்களின் பெயர்களும், காரைக்கால் அம்மையார் போன்ற நாயன்மார்களின் செயல்களும் இதற்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.

விவிலிய ஒப்பு:

பெண்டிர் பிடிபோல

பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது அவர் (இறையடியார்) கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள். திடீரென்று கடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப்போன்ற பிளவுள்ள நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் (இறைவனின் திருவருள் சக்தி எனப்படும்) தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத்தொடங்கினர்...

...திரளான மக்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் அவர்கள் பேசக் கேட்டு குழப்பமடைந்தனர்... எல்லோரும் மலைத்துப்போய் இதன் பொருள் என்னவென்று ஒருவரோடொருவர் கேட்டவாறு மனம் குழம்பி நின்றனர். இவர்கள் இனிய மதுவை நிரம்பக் குடித்துள்ளனர் என்று மற்றவர்கள் கிண்டல் செய்தனர்." - திருத்தூதர் பணிகள் 2 : 1-13

அவர் (அன்னா என்னும் பெண்) இவ்வாறு ஆண்டவர் திருமுன் தொடர்ந்து மன்றாடிக் கொண்டிருந்தபோது, (குருவாகிய) ஏலி அவருடைய வாயைக் கவனித்தார். அன்னா தம் உள்ளத்தினுள் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய உதடுகள் மட்டும் அசைந்தன. குரல் கேட்கவில்லை. ஆகவே ஏலி அவரை ஒரு குடிகாரி என்று கருதினார். ஏலி அவரை நோக்கி, "எவ்வளவு காலம் நீ குடிகாரியாய் இருப்பாய்? மது அருந்துவதை நிறுத்து" என்றார். அதற்கு அன்னா மறுமொழியாக," இல்லை என் தலைவரே! நான் உள்ளம் நொந்த ஒருபெண். திராட்சை இரசத்தையோ, வேறு எந்த மதுவையோ நான் அருந்தவில்லை. மாறாக ஆண்டவர் திருமுன்

என் உள்ளத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறேன் என்றார். - 1 சாமுவேல் 1 : 12-15

(அன்னா இறைவனின் திருவருட்சக்தியால் நிரப்பப் பெற்று, இறைவேண்டுதல் செய்யும் போது அவர் செயல்கள் ஒரு குடிகாரியின் செயல்போல் தோற்றமளித்தன. ஒரு குருவிற்கே இதைத் தெரிந்து கொள்ள இயலவில்லை).

"நார்ப்பட்டால் நெய்யப்பட்ட ஏபோத்தை அணிந்து கொண்டு தாவீது தம் முழு வலிமையோடு ஆண்டவர் முன்பாக நடனமாடிக் கொண்டிருந்தார்." - 2 சாமுவேல் 6: 14

(இறைவனின் தூய ஆவியால் மேற்கொள்ளப்பட்டு, நாடாளும் மன்னன் நடுவீதியில் நடனமாடுகிறான்.)

ஆண்மக்கள் பேய்போல

இவ்வாறு மன்றாடியவுடன் அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் அனைவரும் தூய ஆவி (ஆண்மக்கள் பிடி) யால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய்க் கடவுளின் வார்த்தைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறினர். - திருத்தூதர் பணிகள் 4 : 31

(இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவி (இறையடியார்களாகிய) உங்களிடத்தில் வரும்போது நீங்கள் (பிறர்க்கு நன்மைகள் செய்து, அதன் பயனாக தீமைகள் அடைவதற்கான) கடவுளது வல்லமையைப் பெற்று... (சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள கடவுளான) எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். - திருத்தூதர் பணிகள் 1 : 8

உயிர்க்காற்றும் இறைவாக்கும்

36. நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின
நாலாம் நிலையாம்என்று உந்தீபற
நாதற்கு இடம்அதுஎன்று உந்தீபற

சொற்பொருள் :

நாலாய பூதம் = ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாகிய காற்று; நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐந்தில் கீழிருந்து - நிலத்திலிருந்து எண்ணினால் நான்காவது பூதம் காற்று ஆகும்.

நாதம் = வாக்கு என்னும் ஒலி.

ஒன்றிடின் = ஒன்றுபடுமானால்.

நாலாம்நிலை = ஆன்மாக்களின் முக்தி நிலையில் நான்காவது உயர்நிலையாகிய "சாயுச்சிய நிலை." சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன முறையே முதல் மூன்று நிலைகளாகும்.

நாதன் = இறைவன் - அருவநிலை

பதவுரை :

நாலாய பூதமும் = ஐம்பூதங்களில் நான்காவதாகிய காற்றும்

நாதமும் ஒன்றிடின் = காற்றால் உந்தப்பட்டு தோன்றுவதாகிய வாக்கு எனப்படும் ஒலியும் ஒன்றிடும்போது

நாலாம் நிலையாம் = முக்தி நிலையில் நான்காவதாகிய - உயர் நிலையாகிய - சாயுச்சியம் என்னும் நிலையை ஆன்மாக்கள் அடையும்.

அது நாதற்கு இடம் = அந்நிலையே அருவக் கடவுளாகிய நாதனுக்கு உரிய இடமாகும்.

கருத்துரை :

காற்றும், காற்றால் உந்தப்பட்டு தோன்றுவதாகிய வாக்கு எனப்படும் ஒலியும் ஒன்றிடும் போது, முக்தி நிலையில் உயர்நிலையாகிய சாயுச்சியம் என்னும் நான்காம் நிலையை ஆன்மாக்கள் அடையும். அந்நிலையே அருவக் கடவுளாகிய நாதனுக்கு உரிய இடமாகும்.

விளக்கவுரை :

இறைவனின் திருவருள் சக்தியாகிய தூய ஆவியானவர் காற்றாக உருவகப் படுத்தப்படுகிறார். உயிரினங்களை அழியாமல் காப்பாற்றுவது, ஐம்பெரும் பூதங்களில் நான்காவதாகக் குறிக்கப்படும் காற்றாகிய பிராணவாயு. பிராணவாயுவாகிய காற்று இல்லாமல் மனிதர்கள் சில மணித்துளிகள் கூட உயிர் வாழ்வது அரிதாகும்..

திருக்குறள் பாயிரத்தின் இரண்டாம் அதிகாரமான 'வான்சிறப்பு' இறைவனின் திருவருள் சக்தியாகிய தூய ஆவியானவரைக் குறிப்பதாக முனைவர் மு.தெய்வநாயகம் தம் திருக்குறள் பற்றிய ஆய்வில் தெளிவுபடுத்தி உள்ளார். இதன் அடிப்படையில் வான் எது? என்னும் விரிவான நூல் ஒன்றையும் எழுதி உள்ளார்.

"வான் சிறப்பு" அதிகாரத்தில் தூய ஆவியானவர் காற்றாக உருவகப்படுத்தப்படும் குறள் கீழே தரப்பட்டுள்ளது.

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால். - குறள் 14

நாதம் என்பது 'காற்றால் உந்தப்பட்டு தோன்றுவதாகிய வாக்கு' ஆகும்.

காற்றால் உந்தப்பட்டு தோன்றுவதே வாக்கு. - சி.சு.மணி

- திருஉந்தியார் - திருக்களிற்றுப்படியார் தெளிவுரை பக்கம் 27

'பிராணவாயு என்ற காற்றால் (நான்காவது பூதம்) உந்தப்பட்டுத் தோன்றுவது ஒலியாகிய வாக்கு ஆகும்." - முனைவர் பழ. முத்தப்பன்

- சைவசித்தாந்த சாத்திரங்கள் விளக்கவுரை பக்கம் 34.

இறைவன் 'நாதப்பிரமம்' என்றும், 'சப்தப்பிரமம்' என்றும் ஒலியாக உருவகிக்கப்படுகிறார். இறைவனின் திருவருள் சக்தியாகிய தூய ஆவியானவரின் திருவருளால் மரியாள் கர்ப்பமாகிப் பெற்றெடுத்த இறை அவதாரமே சற்குருவாகிய மனிதனாகப் பிறந்த இயேசுகிறிஸ்து. இம்மண்ணுலகில் மனிதனாகப் பிறந்து, தம் மரணமாகிய கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்து, ஆன்மாக்களுக்குப் பாசநீக்கம் அளித்து, முக்திப்பேறு அருளுகின்ற இறைவன் இவர்.

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் இறைவனின் திருவருள் சக்தியாகிய தூய ஆவியானவர் 'காற்றாக' உருவகப்படுத்தப்படுவதும், தூய ஆவியானவரின் திருவருளால் அன்னை மரியாளிடம் தோன்றி, மனிதனாகப் பிறந்து வந்த இறைமகன் 'வாக்காக' உருவகப்படுத்தப்படுவதும் சிந்திக்கத் தக்கவை ஆகும்.

'காற்றால் உந்தப்பட்டுத் தோன்றுவதே வாக்கு' என்னும் ஆன்றோர்களின் கருத்துக்கு இவை பொருத்தமாக இருப்பதும் நோக்கத்தக்கவை ஆகும்.

(காற்றால் உந்தப்பட்டு தோன்றுவதாகிய) வாக்கு என்று உருவகப்படுத்தப்படும் இறைமகன் இயேசு கிறித்துவின் தூய இரத்தத்தால் ஓர் ஆன்மா மீட்கப்பட்டு, (இறைவனின் திருவருள் சக்தியாகிய) காற்றாக உருவகப்படுத்தப்படும் தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டு வழி நடத்தப்படும்போது இறைவனாகிய நாதன் அருளால் அவ்வான்மா முக்திப்பேறு அடைவது மட்டுமல்லாமல், இம்மண்ணுலகில் மனித உடலில் வாழும் காலத்தில் இறைவன் வாழும் ஆலயமாகவே அது திகழ்வதும் சிந்திக்கத்தக்கன ஆகும்.

விவிலிய ஒப்பு:

நாலாய பூதம் - காற்று

அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று... அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, - அப்போஸ்தலர் 2 : 2, 4

நாதம் - ஒலி - வாக்கு

தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது, அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது; வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார்.

அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார். - யோவான் 1 : 1, 14

"இரத்தம்தோய்ந்த ஆடையை அவர் அணிந்திருந்தார்." கடவுளின் வாக்கு' என்பது அவரது பெயர். - திருவெளிப்பாடு 19 : 13

தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம்; கண்ணால் கண்டோம்; உற்றுநோக்கினோம்; கையால் தொட்டுணர்ந்தோம். - 1 யோவான் 1 : 1

காற்றால் உந்தப்பட்டு தோன்றுவதே வாக்கு

வானதூதர் அவரைப் பார்த்து, மரியா, அஞ்சவேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்... தூய ஆவி உம் மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். - லூக்கா 1 :30, 31, 35

நாதற்கு இடம் அது - நாலாம் நிலை

"நீங்கள் கடவுளுடைய கோவில் என்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?... கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில். - 1 கொரிந்தியர் 3 :16,17

"...உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா?..." - 1 கொரிந்தியர் 6 : 19

"....பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்." - யோவான் 17 : 21

"என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில், உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகிறேன்' என்று சொல்லியிருப்பேனா? நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். ." யோவான் 14 : 2,3

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்

"...அவர் மகனாகிய இயேசு கிறித்துவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும் " - 1 யோவான் 1 : 7

"...கடவுளின் அருளால் அனைவருடைய நலனுக்காகவும், இவர் சாவுக்கு உட்படவேண்டி இருந்தது..." - எபிரேயர் 2 :9

நானே வாசல்; என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். - யோவான் 10 : 9

"...இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" - யோவான் 14:6

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.." - யோவான் 16 : 13

(சகளமாய் வந்த இறைவனாகிய) இயேசு அவரைப் பார்த்து ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்..." என்றார். - யோவான் 3 : 5

சைவ சித்தாந்தம் கூறும் ஆன்மா அடையும் முக்தியின் நான்கு நிலைகள்

1. **சாலோகம்** - கடவுளுடன் ஓரிடத்தில் உறையும் (வாழும்) நிலை.
2. **சாமீபம்** - கடவுளை அணுகியிருக்கும் (நெருங்கியிருக்கும்) நிலை.
3. **சாரூபம்** - கடவுளைப் போல வடிவம்(தோற்றம்) பெறும் நிலை.
4. **சாயுச்சியம்** - கடவுளோடு ஐக்கியம் (ஒற்றுமை) பெறும்நிலை. கடவுளின் திருவடியில் தொடர்ந்திருக்கும் நிலை.

நீ செயல் செய்யாதே

37. சென்ற நெறிஎல்லாம் செந்நெறி ஆம்படி
நின்ற பரிசுஅறிந்து உந்தீபற
நீசெயல் செய்யாதே உந்தீபற

சொற்பொருள் :

செந்நெறி = செம்மையான நெறி, மேலான வழி.

பரிசு = தன்மை, விதம், முறை.

பதவுரை :

சென்றநெறி எல்லாம் செந்நெறி ஆம்படி = இறைவனின் திருவருள் சக்தி நடத்துகின்ற வழியில் செயல்படுகின்ற ஒருவன் செல்கின்ற வழியெல்லாம் மேலான வழியாகவே இருக்கும். அப்படி ஆகும்படி.

நின்ற பரிசு அறிந்து = நிற்கின்ற தன்மையை அறிந்து அதன் வழியிலேயே செயல்படுக.

நீசெயல் செய்யாதே = இறைவனின் திருவருள் சக்தியின் வழி காட்டுதலின்றி, தன் முனைப்போடும், தன் அறிவோடும் நீயாக எத்தகைய செயலையும் செய்யாதே; செய்ய முயலாதே.

கருத்துரை :

விருப்பு, வெறுப்பு இன்றி, எல்லாம் இறைவன் செயல் என்று, இறைவனின் திருவருள் சக்தியின் வழிகாட்டலின்படி செயல்படுகின்ற ஒருவன் செல்கின்ற வழியெல்லாம் செம்மையான வழியாகவே இருக்கும். எனவே அவ்வழியிலேயே செயல்படுக. திருவருள் சக்தியின் வழிகாட்டுதலின்றி தன்முனைப்போடும், தன்னறிவோடும் நீயாக எத்தகைய செயலையும் செய்யாதே; செய்ய முயலாதே!

விளக்கவுரை :

'யான்' என்னும் அகப்பற்றோடும், 'எனது' என்னும் புறப்பற்றோடும் செயல்படும்போது, விருப்பு, வெறுப்பு தன்னை அறியாமலேயே உருவாகி, ஒருதலைச்சார்பாக செயல்பட நேரிடும். எனவே, இறைவனின் திருவருள் சக்தியின் வழிநடத்துதலின்படி, விருப்பு,

வெறுப்பு இன்றி, எல்லாம் இறைவன் செயல் எனச் செயல்படுதல் வேண்டும். இல்லையெனில் விருப்பு, வெறுப்புகள் செம்மையான பாதையிலிருந்து ஒருவரை விலகச்செய்து, ஆணவத்தின் காரணமாக அவர் ஆன்மாவிற்கு நன்மை வழங்காது தடுத்துவிடும்.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறிஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறுயார் பெறுவார் அச்சோவே

அச்சோப்பதிகம் - 2

திருவாசகம் - மாணிக்கவாசகர்

விவிலிய ஒப்பு:

நீ செயல் செய்யாதே:

யான் - எனது என்ற பற்றின்றி:

"கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன்..." - கலாத்தியர் 2 : 20

"...நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்." - மத்தேயு 7: 24

இறைவனின் திருவருள் சக்தியே

"உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும் போது அவர் முழுஉண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்." - யோவான் 16 : 13

"அவர்கள் உங்களைக் கைது செய்து கொண்டு செல்லும்போது என்னபேசுவது என நீங்கள் முன்னதாகவே கவலைப்பட வேண்டாம். அந்த நேரத்தில் உங்களுக்கு அருளப்படுவதையே பேசுங்கள். ஏனெனில் பேசுவோர் நீங்கள் அல்ல. மாறாக, தூய ஆவியானவரே." மாற்கு 13 :11,12

"(இறைவனின் திருவருள் சக்தியாகிய) ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்." - ரோமர் 8 : 26

என் நினைவுகள் (ஆன்மாக்களாகிய) உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் (இறைவனாகிய) என் வழிகளும் அல்ல; - ஏசாயா 55 : 8

....சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்.

...என்னுடைய எதிரிகளின் கண்முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்;.... எனது (ஆன்மா என்னும்) பாத்திரம் (உமது திருவருள் சக்தி என்னும் தூய நீரால்) நிரம்பி வழிகின்றது. - திருப்பாடல்கள் 23 : 4, 5

பொற்கொழுக் கொண்டு

38. பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவதுஎன்?
அக்கொழு நீஅறிந்து உந்தீபற
அறிந்துஅறி யாவண்ணம் உந்தீபற

சொற்பொருள் :

கொழு = நிலத்தை உழுவதற்குப் பயன்படுத்தப்படும் கலப்பையின் நுனியில் மாட்டப்படும் இரும்பால் செய்யப்படும் ஒரு கருவி.

பொற்கொழு = பொன்னால் செய்யப்பட்ட கொழு; ஆன்மா குடியிருக்கும் உடலில் உள்ள ஐம்பொறிகளுக்கும், ஐம்புலன்களுக்கும் உருவகமாக சொல்லப்பட்டுள்ளது.

வரகு = புன்செய்ப் பயிர் - சிறப்பற்ற, மலிவான ஒரு தானியம்- நிலையற்ற உலகியல் இன்பங்களுக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ளது.

பதவுரை :

பொற் கொழுக் கொண்டு வரகுக்கு உழுவது என்? = புன்செய் நிலத்தில் வளரும் மலிவான வரகை விதைப்பதற்கு, விலைமதிப்புள்ள பொன்னால் கொழுவைச் செய்து, அதைக் கலப்பையில் மாட்டி எவராவது நிலத்தை உழுவார்களா? அதனால் பயன் என்ன?

அக்கொழு நீ அறிந்து = அக்கொழு செய்யப்பட்டுள்ள பொன்னின் சிறப்பை நீ உணர்ந்து, அதை மேலான நோக்கிற்காகப் பயன்படுத்த வேண்டும்.

அறிந்து அறியா வண்ணம் = பொன்னின் மேன்மையை நீ அறிந்தும், அதைக் கீழான செயல்களில் பயன்படுத்தி வீணாக்கி விடாத வண்ணம் நடந்து கொள்வாயாக.

கருத்துரை :

வரகு போன்ற மலிவான பயிர் ஒன்றை விதைப்பதற்கு, பொன்னால் கொழுவைச் செய்து, அதைக் கலப்பையில் மாட்டி, காய்ந்து கிடக்கும் தரிசு நிலத்தை உழுவார்களா? பொன்னால்

செய்யப்பட்ட அக்கொழுவின் மேன்மையை நீ உணர்ந்து கொண்டு, கீழான செயல்களில் அதைப் பயன்படுத்தி வீணாக்காமல், மேலான நோக்கத்திற்காக அதைப் பயன்படுத்திக் கொள்வாயாக.

விளக்கவுரை :

பொன்னால் செய்யப்பட்ட கொழுபோன்று விலை மதிப்புமிக்க ஐம்புலன்களையும், ஐம்பொறிகளையும், (தரிசு நிலத்தை உழுது வரகு போன்ற புன்செய் பயிர் வளர்க்க அக்கொழுவைக் கொண்டு உழுவது போல) நிலையற்ற உலகியல் சிற்றின்பங்களை நுகர்வதற்குப் பயன்படுத்தாமல், நிலையான பேரின்பமாகிய வீடுபேறு அடையும்படி இறைவனை அறிந்து, அவரோடு ஒன்றியிருப்பதற்குப் பயன்படுத்த வேண்டும்.

நிலையற்ற சிற்றின்பமாகிய உலகியல் இன்பங்களை விட்டு விலகி, நிலையான பேரின்ப வாழ்வளிக்கும் இறை அனுபவத்தில் ஒன்றியிருத்தல் வேண்டும்.

விவிலிய ஒப்பு :

பொற்கொழு - வரகுக்கு உழுதல்

உங்கள் உடல்கள் (மனிதனாகப் பிறந்து வந்த இறைவனாகிய) கிறிஸ்துவின் உறுப்புகள் என்று தெரியாதா? கிறிஸ்துவின் உறுப்புகளை (பொற்கொழுவை) எடுத்து (வரகுக்கு உழுவதுபோன்று) ஒரு விலைமகளின் உறுப்புகளாகும்படி நான் செய்யலாமா? கூடவே கூடாது. ...(பொற்கொழு போன்ற) உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட (இறைவனின் திருவருள் சக்தியாகிய) தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே (அக்கொழு நீ அறிந்து) உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள். 1 கொரிந்தியர் 6 : 15, 19, 20

நீங்கள் கிறிஸ்துவின் உடல்; ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள். 1 கொரிந்தியர் 12 : 27

ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தைமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை,

சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைவதில்லை. - கலாத்தியர் 5 : 19 - 21

அக்கொழு நீ அறிந்து...

கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள். (இறையருளால் கட்டுப்படுத்தியுள்ளனர்). - கலாத்தியர் 5 : 24

...நான் கடவுளுக்காக வாழ்கிறேன். கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். - கலாத்தியர் 2 : 19, 20

"நீங்களோ உங்கள் உறுப்புகளைத் தீவினையின் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்புவிக்காதீர்கள்; மாறாக, இறந்தும் வாழ்வோராய் உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள்; கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள்." - உரோமையர் 6 : 13

"...முன்பு (பொற்கொழு கொண்டு வரகுக்கு உழுவது போன்று) கட்டுப்பாடற்ற வாழ்வுக்கு வழிவகுக்கும் கெட்ட நடத்தைக்கும், நெறிகேட்டிற்கும் உங்கள் உறுப்புகளை நீங்கள் அடிமையாக்கியிருந்தீர்கள். அதுபோல இப்பொழுது (அக்கொழு நீ அறிந்து) தூய வாழ்வுக்கு வழிவகுக்கும் ஏற்புடைய செயல்களுக்கு உங்கள் உறுப்புகளை அடிமையாக்குங்கள்." - உரோமையர் 6 : 19

...உலகப் போக்கிலான உங்கள் இயல்புக்குரிய பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீயநாட்டம், சிலைவழி பாடான பேராசை ஆகியவற்றை ஒழித்து விடுங்கள். - கொலோசையர் 3 : 5

மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். உரோமையர் 8: 6

சிற்றறிவு – முற்றறிவு

39. அதுஇது என்னாது அனைத்து அறிவாகும்
அதுஇது என்றுஅறிந்து உந்தீபற
அவிழ்ந்த சடையான்என்று உந்தீபற

சொற்பொருள்:

அது இது = ஆன்மா (மனித அறிவு) தான் உலகில் காணும் பொருள்களை அது என்றும், இது என்றும் ஒவ்வொன்றாகப் பார்த்து அறியும் நிலையைக் குறிக்கிறது. ஏனெனில் ஆன்மாவின் அறிவு சிற்றறிவு ஆகும். எனவே ஒருநேரத்தில் ஒவ்வொரு பொருளாகத் தனித்தனியாக அறியும் திறன் தான் உடையது ஆன்மா. (பசு ஞானம்)

அனைத்து அறிவு = இறைவனின் அறிவு முற்றறிவு எனப்படும் பேரறிவு ஆகும். அதனால் ஒவ்வொரு பொருளாகச் சுட்டி அறியாமல், அனைத்துப் பொருள்களையும் ஒருசேர உணர்கிறார். (பதிஞானம்)

அவிழ்ந்த சடையான் = விரிந்த சடையை உடைய இறைவன். இறைவனுடைய விரிந்த சடை, அவரது திருக்கூத்தின்போது, அண்டமுகடுகளை எல்லாம் தொடுகின்றது என்பர்.

அதாவது, இறைவனுடைய இயக்கமானது, தன் அவிழ்ந்த சடையைக் கூட முடிந்து கொள்ள இயலாத அளவிற்கு இடைவெளி இல்லாது, தொடர்ந்து நடைபெறக்கூடிய ஒன்று என்றும், அண்டமுகடுகளை எல்லாம் தொடக்கூடிய பேரியக்கம் என்றும் உணர்த்தும் அழகிய உருவகமாகும். இறைவனின் அறிவு முற்றறிவு ஆகும் என்பதன் உருவகமாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம்.

பதவுரை:

அதுஇது என்னாது = அது என்றும், இது என்றும் ஒவ்வொன்றாக சுட்டி அறியும் ஆன்மாவின் சிற்றறிவு (பசுஞானம்) போல் இல்லாமல்,

அனைத்து அறிவாகும் அது = எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் முழுமையாக அறியும் முற்றறிவு (பதிஞானம்) உடைய இறைவன்.

இது என்று அறிந்து = சிற்றறிவு உடையது ஆன்மா என்றறிந்து, தன் பேரருளால் அதனோடு இணைந்து நின்று அதற்குத் தக்க துணையாக இருக்கிறார்.

அவிழ்ந்த சடையான் = அந்த இறைவன் அன்பே உருவான, விரிந்த சடையை உடையவர் ஆவார்.

கருத்துரை :

உலகப்பொருள்களை அது என்றும், இது என்றும் தனித்தனியாக அறிந்து உணரும் ஆன்மாவாகிய மனிதனின் அறிவு சிற்றறிவு ஆகும். சிற்றறிவு உடைய ஆன்மாவைப்போல் அல்லாமல், ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் முழுமையாக அறிந்து கொள்ளும் முற்றறிவு உடைய இறைவன், ஆன்மாக்களின் நிலையை உணர்ந்து, தன் அளவற்ற கருணையினால் ஆன்மாக்களோடு பொருந்தி நின்று, அவற்றின் ஆன்ம ஈடேற்றத்திற்குத் துணையாக இருந்து உதவுகிறார். அந்த இறைவன் விரிந்த சடையை உடைய அன்பே உருவானவர் ஆவார்.

விளக்கவுரை :

ஆன்மாக்களாகிய மனிதர் உள்ளங்களில் கோவில்கொண்டு உறையும் இறைவன், ஆன்மாக்களின் அறிவை விளக்கித் தொலைவில் இல்லாமல் அவற்றுடனே நிற்கின்றார்.

விவிலிய ஒப்பு :

முற்றறிவு (பதி ஞானம்)

ஆராய முடியாப் பெரியனவற்றையும், எண்ணிலடங்கா வியக்கத் தக்கனவற்றையும் செய்பவர் அவரே." - யோபு 5 : 9

"கடவுளின் அருள்செல்வம் எத்துணை மிகுதியானது! அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல் முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை! - உரோமையர் 11 : 33

"...முதிர்ச்சி பெற்றவர்களோடு நாங்கள் ஞானத்தைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் இதுஉலக (பாச) ஞானம் அல்ல; உலகத் தலைவர்களின் (பசு) ஞானமுமல்ல. அவர்கள் அழிவுக்குரியவர்கள். வெளிப்படுத்தப்படாமல், மறைபொருளாய் இருக்கும் இறை (பதி) ஞானத்தைப் பற்றியே நாங்கள் பேசுகிறோம்..." 1 கொரிந்தியர் 2 : 6,7

“ஞானமே உருவாகிய கடவுள் ஒருவருக்கே...” உரோமையர் 16 : 27

சிற்றறிவு (பசுஞானம்)

“ ...வினவுவேன் உன்னிடம், விடை எனக்களிப்பாய். மண்ணகத்திற்கு (கடவுளாகிய) நான் கால்கோள் இடும்போது நீ எங்கு இருந்தாய் ? உனக்கு அறிவிருக்குமானால் அறிவிப்பாயா?...” - யோபு 38 : 3, 4

இது என்று அறிந்து

நம்முடைய உருவம் இன்னதென்று அவர் (கடவுள்) அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூருகிறார். முந்தின மனுஷன் (முதற்கொடி) பூமியிலிருந்துண்டான மண்ணானவன் (சிற்றறிவு உடையவன்). இரண்டாம் மனுஷன் (சகளமாய் வந்து தானாகத் தந்த இறைவன்) வானத்திலிருந்து வந்த கர்த்தர். மேலும் மண்ணானவனுடைய (மோகக் கொடி படர்ந்த) சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய (முத்தி - இறை) சாயலையும் அணிந்து கொள்வோம். 1 கொரிந்தியர் 15 : 47, 49

அவன் இவன் ஆனான் – இறைவன் மனிதரானார்.

40. அவன்இவன் ஆனது அவன்அருளால் அல்லது
இவன்அவன் ஆகான்என்று உந்தீபற
என்றும் இவனேஎன்று உந்தீபற

சொற்பொருள் :

அவன் = பேரான்மாவாகிய பதி - இறைவன்

இவன் = சிற்றான்மாவாகிய பசு - மனிதன்

பதவுரை :

அவன் = எவ்விதக் கட்டுகளுமற்ற, முற்றறிவு உடைய பேரான்மாவாகிய இறைவன்

இவன் ஆனது = சிற்றான்மாவாகிய மனிதனாக இம்மண்ணுலகில் வந்தது,

அவன் அருளால் = இறைவன் மனிதன் மீது வைத்துள்ள ஒப்பற்ற, எல்லையற்ற அருளாலேயே ஆகும் .

அல்லது = பேரான்மாவாகிய இறைவன் மனிதனாக இம்மண்ணுலகில் வராவிட்டால்

இவன் = பாவ (மல)க் கட்டில் உள்ள சிற்றான்மா ஆகிய மனிதன்

அவன் ஆகான் =தன் பாவக் கட்டில் இருந்து விடுபட்டு, இறைசாயலை அடைந்து, இறை இன்பத்தை அனுபவித்து, அதில் திளைக்க முடியாது.

என்றும் இவனே = என்றென்றும் தன் பாவ நிலையிலேயே ஆன்மா நிலைத்திருக்கும்.

கருத்துரை :

எவ்விதக் கட்டுகளுமற்ற, முற்றறிவு உடைய பேரான்மாவாகிய இறைவன், பாவ நிலையிலுள்ள சிற்றான்மா ஆகிய மனிதனாக உடல் எடுத்து வந்தது, இறைவன் மனிதன் மீது வைத்துள்ள ஒப்பற்ற, எல்லையற்ற அருளாலேயே ஆகும்.

பேரான்மாவகிய இறைவன், மனிதனாக உடல் எடுத்து வராவிட்டால், பாவக்கட்டில் உள்ள சிற்றான்மா ஆகிய மனிதன், தன் பாவக்கட்டில் இருந்து விடுபட்டு இறைசாயலை அடைந்து, இறை இன்பத்தை அனுபவித்து, அதில் திளைக்க முடியாது. என்றென்றும் தன் பாவ நிலையிலேயே ஆன்மா நிலைத்திருக்கும்.

விளக்கவுரை :

இறைவன் மனிதனாகப் பிறந்து வந்தான் என்பதை, சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் ஒன்றான போற்றிப் ப ஃறொடை - 69

"இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்

பிறவா முதல்வன் பிறந்து" ... என்று கூறுகிறது

பிறவா முதல்வன் பிறந்து, தமது மரணமாகிய கண்டத்தைக் கொண்டு, பாவக்கட்டில் இருக்கும் மனிதனை மீட்டு எடுத்தார் என்பதை 'கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்' என்று திருஉந்தியார் - 3 கூறுகிறது.

அவன் இவன் ஆனது பற்றித் திருமூலர் தம் திருமந்திரத்தில் கீழ்க்காணுமாறு கூறகிறார்.

விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்நின்று உருக்கிஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்நின்று காட்டிக் களிம்பு அறுத்தானே.

- திருமந்திரம் 113

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி

- மாணிக்கவாசகர்

இறைவன் பாதங்களை ஆன்மாக்கள் வணங்குவதற்குக் கூட, இறைவன் திருவருள் வேண்டும். ஆன்மா இறைவன் அருளால் உயருமே அன்றித் தானே உயர்தல் இயலாது.

முத்திநிலையில் ஆன்மா இறைவனின் திருவடி கீழ் இறைசாயலாகவே வீற்றிருக்கும். ஆனால் அது இறைவனாகவே ஆகிவிட முடியாது.

விவிலிய ஒப்பு:

அவன் இவன் ஆனது அவன் அருளால்

"(பாவக்கட்டில் உள்ள ஆன்மாக்களாகிய) நாம் (இப்பூமியில் மனிதனாகப் பிறந்து வந்துள்ள கடவுளான) கிறிஸ்து வழியாக (அருவக் கடவுளாகிய) தமக்கு ஏற்புடையவராகுமாறு (அருவக்) கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்." - 2 கொரிந்தியர் 5 : 21

"...ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய்த் தம் சொந்த மகனை அனுப்பி, மனிதரிடமுள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார்." - உரோமையர் 8 : 3

"மானிடராய் அவர் வெளிப் (படுத்தப்)பட்டார்." - 1 தீமோத்தேயு 3 : 16

நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மை(த் திரு)ச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார். - கலாத்தியர் 3 : 13

கிறிஸ்து உயிருடன் எழுப்பப் படவில்லை என்றால்... நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களில் வாழ்பவர்களாவீர்கள். 1 கொரிந்தியர் 15 : 17

(அருவக் கடவுளாகிய) தம் ஒரே மகன் (மனிதனாகப் பிறந்து வந்த இறைவன்) மீது நம்பிக்கை கொள்ளும் (பாவக்கட்டில் உள்ள மனிதர்) எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே (உலகத்தினர் பாவம் போக்கும் பலியாக) அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் (ஆணவத்தில் உழல்கின்ற மனிதர்) மேல் அன்பு கூர்ந்தார். - யோவான் 3 : 16

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்." - பிலிப்பியர் 2 : 6- 8

"நம் குற்றங்களுக்காகச் சாகுமாறு கடவுள் இயேசுவை(ப் பலியாக) ஒப்புவித்தார். நம்மைத் தமக்கு ஏற்புடையவர்களாக்குமாறு அவரை உயிர்த்தெழச் செய்தார்" - உரோமையர் 4: 25

பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு; மாறாகக் கடவுள் கொடுக்கும் அருள்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு. - உரோமையர் 6: 23

"...கடவுள் ஒருவரே - கடவுளுக்கும் மனிதருக்கும்இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே (குருவாகிய மனிதனாகப் பிறந்த வந்துள்ள இறைவனாகிய) இயேசுகிறிஸ்து." - 1 தீமோத்தேயு 2 : 5

கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார்... மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். 1 கொரிந்தியர் 15: 3,4

அல்லது இவன் அவன் ஆகான்...

"இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார்... கிறிஸ்து உயிருடன் எழுப்பப் படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்.

...கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே; நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களில் வாழ்பவராவீர்கள்." - 1 கொரிந்தியர் 15 : 12 - 17

முத்திக் கொடியில் மோகக் கொடி

41. முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்ததுஎன்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற

சொற்பொருள் :

முத்தி	= ஆன்மாவின் பாவமற்ற நிலை
முதல்கொடி	= இறைவனால் படைக்கப்பட்ட முதல் மனிதன்
மோகக்கொடி	= ஆணவமாகிய பாவக்கொடி
அத்தி	= பாவத்தின் பலன்; பின்விளைவு

பதவுரை :

முத்தி முதற்கொடிக்கே = இறைவனால் பாவமற்ற நிலையில் படைக்கப்பட்ட முதல் மனிதனில்,

மோகக் கொடிபடர்ந்து = ஆணவமாகிய மோகக்கொடி படர்ந்தது. அதன் விளைவாக,

அத்தி பழுத்தது = பாவ(மல)ம் அவனைப்பற்றிக் கொண்டது. எனவே முத்திநிலை மறைந்தது.

அப்பழம் உண்ணாதே = ஆணவ சிந்தனையைத் தொடராது விலக்கல் வேண்டும்.

கருத்துரை :

இறைவனால் பாவமற்ற நிலையில் படைக்கப்பட்ட முதல் மனிதனில் ஆணவமாகிய மோகக் கொடி படர்ந்தது. அதன் விளைவாகிய பாவ(மல)ம் அவனைப் பற்றிக் கொண்டது. எனவே, அவனுடைய முத்திநிலை மறைந்தது. ஆகவே, ஆணவ சிந்தனையைத் தொடராது தவிர்த்தல் வேண்டும்.

விளக்கவுரை :

இறைவனால் படைக்கப்பட்ட முதல் மனிதன் மல மற்ற தூய நிலையில் படைக்கப்பட்டான். இதுவே சைவ சித்தாந்தக் கருத்து ஆகும்.

மேலும், இறைவன் முதலில் ஒரு மனிதனையே படைத்தார். அந்த முதல் மனிதனின் வழித் தோன்றல்களே இவ்வுலக மனிதர் அனைவரும் ஆவர் என்பதும், 'முதல்கொடி' என்னும் தொடரால் தெளிவாகிறது.

எனவே 'பதி - பசு -பாசம் ' எனும் ' முப்பொருள் அநாதி ' என்பதில் ' பசு - பாசம்' என்னும் இரண்டும் பதியைப் போன்று அநாதியா? எனும் கேள்வி எழுந்து, 'பசு -பாசம்' என்ற இரண்டும் அநாதி எனும் கருத்து சிந்தனைக் குரியதாகிறது.

அதாவது பதியை (இறைவனை)ப் போலவே பசு (ஆன்மா)வும், பாச(மல)மும் அநாதி என்ற கருத்து ஆய்வுக்குரியதாகிறது.

'ஆன்மாவாகிய பசு அநாதி காலந்தொட்டே ஆணவமல (பாச) த்தால் கட்டப்பட்டுள்ளது. அது ஆணவ மலத்தால் கட்டப்பட்டிராத முத்தி நிலையாகிய தூய நிலையில் இருந்தகாலம் என்ற ஒன்று என்றுமே இருந்ததில்லை' என்ற பாரம்பரியக் கருத்தும் ஆய்வுக்குரியதாகிறது.

ஆன்மாவின் முத்திநிலையாகிய தூயநிலையில், மோகமாகிய பாவ(மல)ம் படர்ந்து, தீமையாகிய பழம் பழுத்த தன்மையை இப்பாடல் தெளிவாகக் கூறுவதுபோல, இப்பாடல் இயற்றப்படுவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னர் எழுதப்பட்ட கிறித்தவத் திருமறையான விவிலியத்தின் தொடக்க நூலும் 'முத்தி நிலையாகிய (ஏதேனில்) இன்பநிலையில் உண்டாக்கப்பட்ட முதற்கொடியாகிய ஆதாமில் மோகக் கொடியாகிய பாவம் படர்ந்ததினால், ஆதாம் தான் படைக்கப்பட்ட முத்திநிலையை இழக்க, அத்தியாகிய சாவுக்கனி பழுத்து மரணத்திற்கு உள்ளானான்" என்று கூறுவது ஒப்புநோக்கத்தக்கது.

விவிலிய ஒப்பு:

முத்தி முதற்கொடி

"கடவுள் தம் உருவில் (முத்திநிலையில்) மானிடரைப்படைத்தார்; கடவுளின் உருவிலேயே (முத்திநிலையிலேயே) அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்... கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன..." - தொடக்க நூல் 1 : 27, 31

மோகக்கொடி படர்ந்து அத்தி பழுத்தது

ஒரே ஒரு மனிதன் (முதன் மனிதன் - முதற்கொடி - ஆதாம் - ஆதன்) வழியாகப் பாவம் (மோகக்கொடி) இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப்பாவத்தின் (மோகக்கொடி) வழியாய்ச் சாவு (அத்தி பழுத்தல்) வந்தது ... - உரோமையர் 5 : 12

(முதற்கொடி - முதல்மனிதனாகிய) ஒருவரின் கீழ்ப்படியாமையினால் (மோகக்கொடி படர்தலாகிய) குற்றம் எல்லா மனிதருக்கும் (அத்தி பழுத்தலாகிய) தண்டனைத் தீர்ப்பாய் அமைந்தது. - உரோமையர் 5 : 18

அப்பழம் உண்ணாதே:

((முதற்கொடியாகிய முதல் மனிதன் என்னும்) ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் (மோகக்கொடி படர்தலாகிய) பாவிகளானது போல், (மனிதனாக இம்மண்ணுலகில் பிறந்து வந்துள்ள இறைவனாகிய) ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள். - உரோமையர் 5: 19

"...(மனிதனாக இம்மண்ணுலகில் பிறந்து வந்த - சகளமாய் வந்த இறைவனாகிய) நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் அருள் ஆட்சி செய்கிறது. அந்த அருள்தான் மனிதர்களை (அருவ)க்கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கி, ((முத்தி நிலையாகிய ஆதிநிலை) நிலைவாழ்வு பெற வழி வகுக்கிறது." - உரோமையர் 5 : 21

படைப்பு மாயை – படைத்தவரே சத்யம்

42. அண்டம் முதலாம் அனைத்தையும் உட்கொண்டு
கொண்டஅத்தைக் கொள்ளாதே உந்தீபற
குறைவுஅற்ற செல்வம்என்று உந்தீபற

சொற்பொருள் :

அண்டம் = இவ்வுலகமும், அதில் உள்ளவைகளும்,

உட்கொண்டு = தன்னில் அடக்கிக் கொண்டு,

கொண்ட அத்தை = பேரண்டம், பிரபஞ்சம்,

கொள்ளாதே = நிலையானது என்று கொள்ளாதே,

பதவுரை :

அண்டம் முதலாம் அனைத்தையும் உட்கொண்டு = இவ்வுலகத்தையும், அதில் உள்ள அனைத்தையும் தன்னுள் அடக்கி,

கொண்ட அத்தைக் கொள்ளாதே = வைத்திருக்கும் பிரபஞ்சமாகிய இப்பேரண்டமும், அதில் உள்ளவைகளும் நிலையானவை என்று எண்ணி மயங்காதே.

குறைவற்ற செல்வம் என்று = இவை அனைத்தையும் படைத்து, இவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் இறைவனைப் பற்றிக் கொண்டு நிற்றலே குறைவற்ற செல்வமாகிய முக்தி இன்பத்தைத் தரும்.

கருத்துரை :

உலகத்தையும், அதில் உள்ள அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டு இருக்கும் இப்பேரண்டத்தை நிலையானது என்று எண்ணி மயங்காதே. இவை அனைத்தையும் படைத்து, இவற்றிற்கெல்லாம் ஆதாரமாய் நிற்கும் இறைவனே மெய்யானவர். இத்தகைய அறிவோடு, இறைவனைப் பற்றிக் கொண்டு நிற்றலே குறைவற்ற செல்வமாகிய முக்திப் பேற்றைத் தரும்.

விளக்கவுரை :

சுட்டி அறியப்படும் இவ்வுலகனைத்தும் நிலையானவை அல்ல; இவை இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவை ஆகும். இவை அனைத்தும் நின்று, அழிவன ஆகும். நிலையில்லாதவற்றை நிலையானவை என்று எண்ணும் அறிவின்மையைக் கைவிட்டு, என்றும் நிலையாக உள்ள அருட்கடலான இறைவனிடம் ஈடுபடல் வேண்டும். அதுவே குறையில்லா நிறைவாகும்.

விவிலிய ஒப்பு :

கொண்ட அத்தைக் கொள்ளாதே

"உலகின்மீதும், அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவோரிடம் தந்தையின்பால் அன்பு இராது."

"உலகம் மறைந்துபோகிறது. அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பர்." - 1 யோவான் 2 : 15, 17

"என் தாயின் கருப்பையிலிருந்து பிறந்த மேனியனாய் யான் வந்தேன்; அங்கே திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன். ஆண்டவர் அளித்தார்; ஆண்டவர் எடுத்துக் கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக!" என்றார். - யோபு 1 : 21

"...பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல..." - லூக்கா 12 : 15

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது." - மத்தேயு 6 : 24

"... ஒருவன் (மனிதனாகப் பிறந்து வந்த இறைவனாகிய) என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்." - மாற்கு 8 : 34

“மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமை எல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது. புல் உலர்ந்தது; அதின் பூவும் உதிர்ந்தது.” - 1 பேதுரு 1 : 24

குறைவு அற்ற செல்வம்

“உன் முழு இருதயத்தோடும், முழுஉள்ளத்தோடும், முழுமனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.” - மத்தேயு 22 :37

(கடவுள்) தம் ஒரேமகன் (குருவாக இம்மண்ணுலகில் பிறந்து வந்தவர்) மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே (உலகமக்களின் பாவங்களுக்குப் பலியாக) அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் (பாவம் செய்த ஆன்மாக்கள்) மேல் அன்பு கூர்ந்தார். - யோவான் 3: 16

அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார். - யோவான் 1: 12

உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் (எங்கள் பாவங்களைப் போக்க) நீர் (சற்குருவாகிய மனிதனாக இம்மண்ணுலகிற்கு அனுப்பிய கடவுளாகிய) இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு. - யோவான் 17 : 3

ஆனந்தத் தேன்

**43. காயத்துள் மெய்ஞானக் கள்உண்ண மாட்டாதே
மாயக்கள் உண்டார்என்று உந்தீபற வறட்டுப்
பசுக்கள்என்று உந்தீபற**

சொற்பொருள் :

காயம் = ஐம்பூதங்களால் ஆன நிலையற்ற மனித உடல்.

மெய்ஞானக்கள் = நிலையான இன்பம் அருளும் இறைவனின் திருவருளாகிய தேன்

மாயக்கள் = மயக்கத்தைத் தருகின்ற உலகியல் சார்ந்த சிற்றின்பமாகிய கள்

வறட்டுப் பசு = பால் வற்றிப்போன பசு; பயனற்ற ஆன்மா. சைவசித்தாந்தம் ஆன்மாவைப் பசு என்றும், இறைவனைப் பதி என்றும் குறிக்கும்.

பதவுரை :

காயத்துள் = ஐம்பூதங்களால் ஆன, நிலையற்ற இவ்வுடலால்

மெய்ஞானக்கள் உண்ணமாட்டாதே = என்றும் நிலையான இன்பம் அருளக்கூடிய இறையருளாகிய மெய்ஞானக்கள்ளை உண்ணாமல்,

மாயக்கள் உண்டார் = அழிந்து போகிற உலகியல் சார்ந்த சிற்றின்பமாகிய மாயக்கள்ளை உண்டு, களித்து, மயங்குகின்ற ஆன்மாக்கள்.

வறட்டுப் பசுக்கள் = பால் வற்றிப்போன வறட்டுப் பசுக்கள் போன்று பயனற்றவர் ஆவர்.

கருத்துரை :

ஐம்பூதங்களால் ஆன நிலையற்ற மனித உடலால், நிலையான பேரின்பம் அருளும் இறையருளாகிய தேனை உண்ணாமல், அழிந்து போகிற உலகியல் சார்ந்த சிற்றின்பமாகிய மாயக்கள்ளை உண்டு, களித்து, மயங்குகின்ற ஆன்மாக்கள், பால்வற்றிப் போன வறட்டுப் பசுக்களைப் போன்று பயனற்றவர் ஆவர்.

விளக்கவுரை :

இறைவன் திருவடிகளைப் பற்றிக் கொள்வதினால் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இறைஞானத் தேனாகிய பேரின்பத்தேனை உண்ணாமல், உடலால் துய்க்கும் நிலையற்ற சிற்றின்பக்கள்ளை உண்டு, மகிழ்ந்து, மயங்கித் தம் வாழ்நாளை வீணாக்கும் மனிதர்கள் பால்வற்றிப்போன வறட்டுப் பசுக்களைப் போன்று பயனற்றவர் ஆவர்.

ஏனென்றால்,

"பால் வற்றிப்போன வறட்டுப் பசுக்கள் இறைச்சிக்காக அடிமாடாகக் கொல்லப்படுவது உலகியல் நிகழ்வு" ஆகும்.

ஆராத இன்பம் அருளுமலை போற்றி - சிவபுராணம், திருவாசகம்

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ

- திருக்கோத்தும்பி திருவாசகம்
மாணிக்கவாசகர்

விவிலிய ஒப்பு :

மெய்ஞானக்கள்

நான் மெய்யான திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னை யல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது. - யோவான் 15 : 1, 5

(சற்குருவாகிய மனிதனாகப் பிறந்து வந்துள்ள கடவுளாகிய) நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். - யோவான் 6 : 51

வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப் போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான். - யோவான் 6 : 58

...இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ

ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்." - இயேசு - யோவான் 7 : 38

மெய்ஞானக்கள்ளும் மாயக்கள்ளும்

அழிந்து போகிற உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை (மனிதனாகப் பிறந்து வந்த இறைவனாகிய) மானிடமகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய(அருவக்) கடவுள் அவருக்கே தம் அதிகாரத்தை அளித்துள்ளார் என்றார். - யோவான் 6 : 27

வறட்டுப் பசுக்கள்

"நல்ல கனி கொடாத மரங்களெல்லாம் (வறட்டுப் பசுக்கள்) வெட்டப்பட்டு நெருப்பில் போடப்படும்." - மத்தேயு 7 : 17

அவர் (இறைவன்) சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும், பதரையும் பிரித்தெடுப்பார்; கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். ஆனால், பதரை அவியாத நெருப்பில் சுட்டெரிப்பார்." - மத்தேயு 3: 12

பாற்பசுக்கள்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." - யோவான் 7 : 38

சேரவந்தவர் வாழ்க

**44. சிந்தையின் உள்ளும் என்சென்னியி லும்சேர
வந்தவர் வாழ்கஎன்று உந்தீபற
மடவாள் உடனேஎன்று உந்தீபற**

சொற்பொருள் :

சென்னி = தலை

மடவாள் = பெண்; துணைவி; இறைவனின் திருவருள் சக்தி.

பதவுரை :

சிந்தையின் உள்ளும் = என் உள்ளத்தில் குடிகொண்டு,

என் சென்னியிலும் = என் தலையில் தன் மலரடிகளைச் சூட்டி

சேரவந்தவர் = ஆட்கொள்ளும்படி என்னைச் சேரவந்த இறைவனாகிய என் நாயகன்

வாழ்க = என்றென்றும் வாழ்க;

மடவாள் உடனே = அவர் தன் திருவருள் சக்தியுடன் வாழ்க.

கருத்துரை :

என் உள்ளத்தில் குடிகொண்டு, என் தலையில் தன் மலரடிகளைச்சூட்டி, என்னை ஆட்கொள்ளும்படி தன் திருவருள் சக்தியுடன் என்னைத் தேடி வந்த இறைவன் என்றென்றும் வாழ்க.

விளக்கவுரை :

ஆன்மாக்களாகிய நம்மை ஆட்கொள்ளும்படி இறைவன் தானே நம்மைத் தேடி வந்தார். நாம் அவரைத் தேடி சென்றடைய முடியாது. எனவே நம்மேல் கொண்ட இரக்கத்தால் அவரே நம்மைத் தேடிவந்தார் என்பதை 'சேரவந்தவர்' என்னும் தொடர் விளக்குகிறது. 'தானாகத் தந்தது என்று உந்தீபற' என்று முதல் பாடலில் கூறியுள்ள கருத்தே, நூலின் இறுதிப் பகுதியிலும் வந்துள்ளது. இது ஆன்மாக்களின் இயலாமையையும், இறைவனின் தனிப்பெருங் கருணையையும் விளக்கிக் காட்டுகிறது.

சிந்தையின் உள்ளும், என்சென்னியிலும் என்னும் தொடர் இறைவன் நமக்கு உள்ளும், புறம்புமாய் திருவருள் புரிகிறார் என்பதை விளக்குகிறது.

நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்

தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்

- திருக்கோத்தும்பி 15

திருவாசகம் - மாணிக்கவாசகர்.

மேலும், மாணிக்கவாசகர் தாம் இயற்றிய திருவாசகத்தைத் தொடங்கும் போது,

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

என்று இறைவன் பாதங்களை வாழ்த்தியே தொடங்குகிறார்.

விவிலிய ஒப்பு:

உள்ளத்தில் குடிகொண்டார்

“நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும், கடவுளின் ஆவியார் (மடவாள்) உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?

ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில்.” - 1 கொரிந்தியர் 3: 16, 17

உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூயஆவி (மடவாள்) தங்கும் கோவில் என்று தெரியாதா? - 1 கொரிந்தியர் 6 : 19

Bless the LORD, O my soul ; And all that is within me, Bless His holy name ! Bless the LORD, O my soul.. - Psalm 103 : 1,2

இயேசு நாதர் தன் பன்னிரண்டு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்து கட்டளை கொடுத்தபோது, ..வீட்டுக்குள் செல்லும் பொழுதே வீட்டாருக்கு வாழ்த்துக் கூறுங்கள். வீட்டார் தகுதி உள்ளவராய் இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவர்கள் மேல் தங்கட்டும்; அவர்கள் தகுதியற்றவர்களாயிருந்தால்

அது உங்களிடமே திரும்பி வரட்டும். - மத்தேயு 10 : 12, 13 என்று கூறுகிறார்.

"நம் உடலே கடவுள் வாழும் ஆலயமாயிருப்பதினால் கடவுளை நாம் வாழ்த்தும் போது, அந்த வாழ்த்துதல் நமக்கே வந்து சேருகிறது." "இறைவனை வாழ்த்துவது நாம் வாழ்வதற்காகவே" ஆகும்.

உய்யவந்தான் உரை

45. வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்
உய்யவந் தான்உரை உந்தீபற உண்மை
உணர்ந்தார்என்று உந்தீபற

சொற்பொருள் :

வையம் = உலகம்; உலகில் வாழும் ஆன்மாக்கள்.

கயம் = ஆழமான நீர்நிலை.

மலக்கயம் = மலம் + கயம் = மனிதர்கள் பிறவியிலேயே மல(பாவ)த்தினால் கட்டப்பட்டுள்ளதால் மலக்கயம் என்று கூறப்படுகிறது. பிறவிப் பெருங்கடல்; சகசமலம்.

கண் = பற்றுக்கோடு

கண்டிடுதல் = பிறவிப்பெருங்கடலில் மூழ்கித் தத்தளிக்காமல், இறைவன் திருவடிகளாகிய கரை ஏறுதல். (பிறவிப் பெருங்கடல் நீந்துதல்).

உய்கை = ஈடேறுகை; துன்பம் நீங்குகை.

உய்யவந்தான் = பிறவியிலேயே பாவத்தினால் கட்டப்பட்டுள்ள ஆன்மாக்களை, அப் பாவக்கட்டிலிருந்து உய்யச் செய்பவர்.

உரை = ஆன்மாக்களை உய்விக்க அருளிய உரை.

பதவுரை :

வையம் முழுதும் = இவ்வுலகத்தில் வாழும் மனிதர்கள் (ஆன்மாக்கள்) அனைவரும்.

மலக்கயம் = பிறவியிலேயே தாங்கள் கட்டப்பட்டுள்ள பாவமாகிய கடலில் மூழ்கித் தத்தளிக்காமல்

கண்டிடும் = அதிலிருந்து அவர்களை இறைவன் திருவடிகளாகிய கரை ஏற்றி.

உய்யவந்தான் = உய்விக்க வந்தவருடைய

உரை = உரையைத் தம் வாழ்வில் அனுபவப் பொருளாக்கிக் கொண்டவர்கள்.

உண்மை உணர்ந்தார் = மெய்ப்பொருளாகிய இறைவன் திருவடிகளைச் சேர்வர்.

கருத்துரை :

பிறவியிலேயே மலத்தினால் கட்டப்பட்டு, உலகில் வாழும் ஆன்மாக்களைப் பிறவிப் பெருங்கடலாகிய மலக்கயத்தில் மூழ்கித் தத்தளிக்கவிடாமல், இறைவன் திருவடிகளாகிய கரை ஏற்றி உய்விக்க வந்தவருடைய உரையை அறிந்து, அதைத் தம் வாழ்வில் அனுபவப் பொருளாக்கிக் கொண்டவர்கள், மெய்ப்பொருளாகிய இறைவன் திருவடிகளைச் சேர்வர்.

விளக்கவுரை :

'உய்யவந்தான் உரை' என்னும் தொடரால் இந்நூல் ஆசிரியரான திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் தன்னையும் தன்னுடைய நூலையும் தான் குறிப்பிடுகிறார் என்று சிலர் கூறுவதுண்டு.

ஆனால், தன்னடக்கம் நிறைந்து, தன் முனைப்பு அகன்று, இறைவனின் திருவருள் சக்தியினால் வழிநடத்தப்பட்ட ஓர் இறையடியார் தன்னை முதன்மைப் படுத்திக் குறிப்பிடுகிறார் என்பது பொருந்தாக் கூற்றாகவேக் காணப்படுகிறது.

எனவே, மனிதனாகப் பிறந்து, நம்மை உய்விக்க வந்த இறைவனாகிய சற்குருவையும், அவர் அருளிய உபதேசங்களையும் தான் இப்பாடல் குறிக்க வேண்டும். அதாவது, மூலை இருந்தாரை முற்றத்தே விட்டு உய்வித்த, சாலப்பெரியரான தவத்தின் தலைவரைத் தான் 'உய்யவந்தான்' என்று இந்நூலாசிரியர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும் எனக் கருதுவது சிறப்பாக உள்ளது.

"உய்யவந்தான்" என்று குறிப்பிடுபவரைத் தான் கிறித்தவம் மனிதனாகப் பிறந்த வந்து நமக்கு உரை செய்து, தம் கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவராகிய இயேசு கிறித்து என்று குறிப்பிடுகிறது.

அவர் மனிதராக இம்மண்ணுலகில் பிறந்து வந்த போதிலும், நம்மைப் போன்ற மனிதர் அல்லர்; இறைவனே ஆவர். நம்மை மலக்கயத்திலிருந்து மீட்டு உய்விக்க சகளத்தில் வந்த இறைவனே ஆவர்.

ஏனெனில், மலக்கயத்திலிருந்து மற்றவர்களை மீட்டு உய்விக்க வேண்டியவர், அவர் தாம் மலக்கயத்தில் வீழாதவராக இருத்தல் வேண்டுமல்லவா?

கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான்;

விட்ட வேதனையைத் தீர்க்க விடுவிப்பான் ஒருவன் வேண்டும்.

அல்லவா? இதைத்தான் திருமூலர்;

"சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மைசெய்து"

- திருமந்திரம் 1578 என்று குறிப்பிடுகிறார்.

"உய்யவந்தான் உரை" யை வள்ளுவப் பெருந்தகை

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய் தீர் ஒழுக்க நெறி..."

என்று குறிப்பிடுகிறார்.

விவிலிய ஒப்பு:

(மீட்கப்பட்ட ஆன்மாக்களாகிய) நீங்கள் என்னுள்ளும், (நீங்கள் உய்ய வந்தானாகிய) என் வார்த்தைகள் (உரை) உங்களுக்குள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். யோவான் 15: 7

(உய்ய வந்தானாகிய) அவருடைய (உரையை) கட்டளைகளை நாம் கடைப்பிடித்தால் நாம் அவரை அறிந்து கொண்டோம் என்பது உறுதியாகத் தெரியும். (உய்யவந்தானாகிய) அவரை எனக்குத் தெரியும் எனச் சொல்லிக் கொண்டு அவருடைய கட்டளைகளை (உரையை)க் கடைபிடிக்காதோர் பொய்யர்; உண்மை அவர்களிடம் இராது.

ஆனால் அவரது வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது. நாம் அவரோடு

இணைந்து இருக்கிறோம் என அதனால் அறிந்த கொள்ளலாம். - 1 யோவான் 2 : 3-5

உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும்; உமது வார்த்தையே (உய்ய வந்தான் உரையே) உண்மை. - யோவான் 17 : 17

ஆகையால், (உய்யவந்தானாகிய) நான் சொல்லும் இவ்வார்த்தைகளை (உரையை)க் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம்வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்....

நான் சொல்லும் இந்த வார்த்தை (உரை)களைக் கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல்மீது தன் வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். - மத்தேயு 7 : 24, 26

முடிவுரை

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் முதல் சாத்திரமும். சைவசித்தாந்தத்தின் மணிமுடியாகத் திகழும் சிவஞானபோதத்திற்குக் காலத்தாற் முற்பட்டதுமான திருஉந்தியாரின் 45பாடல்களையும் மூலம்-சொற்பொருள் - பதவுரை - கருத்துரை - விளக்கவுரை - விவிலியஒப்பு என்னும் வரிசையில் தனித்தனியாக விளக்கமாக நாம் கண்டோம்,

இவற்றில் சொற்பொருள் - பதவுரை - கருத்துரை என்னும் மூன்று பகுதிகளில் மூலநூலாசிரியர் கையாண்டுள்ள சொற்களின் அடிப்படையிலேயே, எந்தவித எடுத்துக்காட்டுகளும் கூறாமல், நேரடியான பொருளே கூறப்பட்டுள்ளது. ஆனால், விளக்கவுரைப் பகுதியில், மூலநூலாசிரியர் கையாண்டுள்ள சொற்களின் உட்கருத்து என்னவாக இருக்கக்கூடும்; அவை என்ன நோக்கத்தில் ஆளப்பட்டுள்ளன என்பதைப் பல எடுத்துக்காட்டுகளின் வழி தெளிவாகக் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

விவிலிய ஒப்பு என்னும் பகுதியில், திருஉந்தியார் பாடல்களில் ஆளப்பட்டுள்ள சொற்களின் உட்கருத்துகள், அவற்றிற்கு இணையான திருவிவிலியப் பகுதிகளுடன் முழுமையாக ஒத்துவருவதை அறிந்து கொள்ளலாம்.

அ. எம் முறையில் ஒத்துள்ளன?

1. உலகின் முதல் மனிதன் பாவமற்ற நிலையில் படைக்கப்பட்டான்.

    முத்தி முதல் கொடி... திருஉந்தியார்-41.

2. பின்பு, முதல் மனிதனில் தோன்றிய ஆணவத்தால் பாவ(மல)ம் அவனை மேற்கொண்டது.

    மோகக் கொடிபடர்ந்து அத்தி பழுத்தது... திருஉந்தியார்-41

3. மனிதனின் பாவ(மல) நிலையைப் போக்கி, முன்னிருந்த முத்தி நிலையில் மீண்டும் அவனை நிறுத்த, உருவமற்ற அருவக் கடவுள், மனித உருவம் தாங்கி வந்தார்.

    அகளமாய் யாரும் அறிவு அரிது, அப்பொருள் சகளமாய் வந்தது...

    திருஉந்தியார்-1.

4. மனிதனாக வந்த கடவுள் தன்னையேப் பலியாகத் தந்து, தனது மரணத்தின் மூலம் முழு மனித இனத்தையும் பாவத்திலிருந்து மீட்டெடுத்தார்.

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்... திருஉந்தியார்-3
தவத்தில் தலைவர்... திருஉந்தியார்-12

5. ஒருவராக உள்ள அருவக்கடவுள், மனிதனைத் தடுத்தாட்கொள்ள, உருவத்தில் இம்மண்ணுலகில் மனிதனாகப் பிறந்து வந்துள்ளவர்,கடவுளின் திருவருட்சக்தி எனத் தானே மூன்று நிலைகளில் காட்சியளிக்கிறார்.

ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்... திருஉந்தியார்-5.

6. ஆன்மாவைத் தடுத்தாட்கொண்ட கடவுள், அந்த ஆன்மாவின் ஆன்ம மணமகனாகவும் ஆகிறார்.

நாதனும் ஆனான்... திருஉந்தியார்-5.

7. கடவுளால் தடுத்தாட்கொள்ளப்பட்ட ஆன்மா, கடவுள் அருளால் தன் முக்தி நிலையாகிய உயர் நிலையை மீண்டும் அடைகிறது.

மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்... திருஉந்தியார்-12

இவை போன்ற பல்வேறு முதன்மைக் கருத்துகளில் திருஉந்தியாரும், திருவிவிலியமும் ஒத்தக் கருத்தைப் பெற்றுள்ளன. அப்படியானால்,

ஆ. திருஉந்தியார் - திருவிவிலியம் வேறுபாடு என்ன? ஐந்து நோக்குகளில்

1900 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டிற்கும், அதற்கு ஏறக்குறைய 1200 ஆண்டுகளுக்குப் பின்னர் இயற்றப்பட்ட திருஉந்தியாருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்க முன்னாள் ஒருங்கிணைப்பாளரும், அண்மையில் இறைவனடி சேர்ந்தவருமான முனைவர் தெ. தேவகலா அவர்களின் ஆய்வுக் கருத்துகளின்படி அறிஞர்கள், படித்தவர்கள், பொதுமக்கள், பாமரர்கள் என சமுதாயத்தின் அனைத்து மக்களும் அறிந்து, இன்புறும் வண்ணம் தமிழர் சமயம் கீழ்க்காணும் ஐந்து நோக்குகளில் (Five Aspects) விளக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கும், எளியவர்களுக்கும்

1. புராண நோக்கு Mythical Aspect.

2. சிற்பவியல் நோக்கு Iconographic Aspect.

அறிஞர்களுக்கும், படித்தவர்களுக்கும்

3. இலக்கிய நோக்கு Literary Aspect.

4. இறையியல், தத்துவ நோக்கு Thelogical / philosophical Aspect.

காலம், இடம், வரலாறு அடிப்படையில் அறிந்து கொள்ள

5. வரலாற்று நோக்கு Historical Aspect.

இந்த நோக்குகளின் அடிப்படையில், நாம் மேலே கண்ட கருத்துகள் திருவிவிலியத்தில் வரலாற்று நோக்கிலும், திருஉந்தியாரில் இறையியல் நோக்கிலும் விளக்கப்பட்டுள்ளன.

இறையியல் நோக்கில், நடைபெற்ற நிகழ்வுகள் பொது நிலையில் மட்டுமே விளக்கிக் கூறப்பட்டிருக்கும். ஆனால், வரலாற்று நோக்கில், நிகழ்வுகள், நடைபெற்ற இடங்கள், நடைபெற்ற காலங்கள், நிகழ்வுகளில் தொடர்புடையவர்களின் பெயர்கள் போன்றவை தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டாக

அகளமாய் யாரும் அறிவு அரிது அப்பொருள் சகளமாய் வந்தது...

என்று கூறுவதில், அகளமாய் உள்ள இறைவன்

எந்த நாட்டில் சகளமாய் வந்தார்?

எந்த ஊரில் சகளமாய் வந்தார்?

எந்தக் காலத்தில் சகளமாய் வந்தார்?

எந்தப் பெயரில் சகளமாய் வந்தார்? போன்ற கேள்விகளுக்கும்;

முத்தி முதற்கொடிக்கு மோகக்கொடி படர்ந்து அத்தி பழுத்தது...

என்று கூறுவதில்

முதல் கொடி யார்?

மோகக்கொடி படர்ந்தது ஏன்?
எவ்வாறு படர்ந்தது?

அத்தி பழுத்த விவரம் என்ன?

போன்ற கேள்விகளுக்கும் இறையியல் நோக்கில் எழுதப்பட்டுள்ள திருஉந்தியாரில் பதில் இருக்காது. ஆனால், வரலாற்று நோக்கில் எழுதப்பட்டுள்ள திருவிவிலியத்தில் இவ்வனைத்துக் கேள்விகளுக்கும் நாம் பதில் காணலாம்.வரலாறு முழுநிகழ்வுகளையும் விளக்கமாகக் கொடுக்கிறது. இறையியல்,

மனிதனின் ஆன்ம மீட்பிற்கு, ஈடேற்றத்திற்கு வேண்டியவற்றை மட்டுமே கொடுக்கிறது.

வரலாற்று நோக்கில் எழுதப்பட்டுள்ள திருவிவிலியத்தில் அகளமாய் உள்ள கடவுள், யூதேயா நாட்டில், பெத்லகேம் என்னும் ஊரில், ஏறக்குறைய 2013 ஆண்டுகளுக்கு முன்னர் இயேசு கிறிஸ்து என்னும் பெயரில் சகளமாய் வந்தார் என்று அறிந்து கொள்ளலாம்.

இ. திருஉந்தியாருக்கும், திருவிவிலியத்திற்கும்: சைவ சித்தாந்தத்திற்கும், கிறிஸ்தவத்திற்கும் அடிப்படைக் கோட்பாடுகளில் காணப்படும் ஒத்தக் கருத்துகள் எதனால் உருவாயின?

இந்திய சமயங்கள்

இந்தியாவில் உள்ள பெரியசமயங்களில் சமணமும், பௌத்தமும் கிறிஸ்துவிற்கு முந்தைய நூற்றாண்டுகளில் தோன்றிய சமயங்கள் என்றும், இவை இரண்டும் நாத்திக சமயங்கள் என்றும், இவற்றில் சமண சமயம் கடவுளின் இருப்பை ஏற்றுக் கொள்ளாத நாத்திக சமயம் என்றும், பௌத்தம் கடவுளை அறியாத நாத்திக சமயம் என்றும் முன்னரே நாம் கண்டோம். இஸ்லாம், கடவுள் மனிதனாகப் பிறப்பார் (அவதாரக் கோட்பாடு) என்னும் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாத சமயம் ஆகும். எனவே, "அகளமாய் யாரும் அறிவு அரிது, அப்பொருள் சகளமாய் வந்தது" என்னும் கருத்து இம் மூன்று சமயங்களுக்கும் பொருந்தாக் கருத்தே ஆகும்.

ஆரிய வேதங்களான ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கும் முழுமுதற் கடவுளை அறியாதவை ஆகும். வருணன், அக்னி, வாயு போன்ற இயற்கையையே கடவுளாக வணங்கி, பலிகொடுத்து வந்த கோட்பாட்டை உடையவை ஆகும். எனவே சகளமாய் இறைவன் வந்தார் என்னும் கருத்து ஆரிய வேதத்திற்கும் பொருந்தாத ஒன்றே ஆகும்.

இந்தியாவில் உள்ள மற்ற மூன்று சமயங்களான கிறிஸ்தவம், சைவம், வைணவம் ஆகிய மூன்றையும் நாம் காணும்போது, அவை கடவுளின் அவதாரக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும் சமயங்கள் ஆகும். ஆனால், கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில்தான் கடவுள் மனிதனாகப் பிறப்பார் என்னும் அவதாரக் கோட்பாடு பற்றிய கருத்து இந்தியாவில் தோன்றி பரவியுள்ளது என்பது தெளிவு.

வால்மீகி இராமாயணத்தில் கடவுளின் அவதாரமாகக் காட்டப்படாத கதாநாயகன் இராமன், கி.பி.10ஆம் நூற்றாண்டில்

இயற்றப்பட்ட கம்ப இராமாயணத்தில் கடவுளின் அவதாரமாகக் காட்டப்பட்டிருப்பது சிந்திக்கத்தக்கது ஆகும்.

இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான தூய தோமா இந்தியா வந்து, தமிழகத்தில் விதைத்த இயேசு கிறிஸ்து பற்றிய நற்செய்தியின் விளைவாகத் தோன்றியதே திருக்குறள் நூலாகும். தூய தோமா இறை சாட்சியாக மரித்து, அடக்கம் செய்யப்பட்ட திருமயிலையில்தான் திருவள்ளுவர் தோன்றி, திருக்குறளை இயற்றினார் என்னும் கருத்தும் சிந்திக்கத்தக்கது ஆகும். திருவள்ளுவர் காலத்திற்குப் பின்னர், ஏறக்குறைய கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் பக்தி இயக்கம் உருவாகி, எழுச்சி பெற்றது.

பன்னிரு ஆழ்வார்கள், அறுபத்து மூன்று நாயன்மார்கள் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து, பக்தி இயக்கத்தைத் தமிழகம் முழுவதும் பரப்பினர். பக்தி இயக்கம் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்த பல்லவநாடு எனப்பட்ட தொண்டைநாட்டில் வளர்ச்சி பெற்றது; குறிப்பாகத் தொண்டைநாட்டைச் சேர்ந்த திருமயிலைப்பகுதியில் வளர்ச்சி பெற்றது. பக்தி இயக்கத்திலிருந்து சைவ சமயமும், வைணவ சமயமும் உருப்பெற்றன. அதாவது பக்தி இயக்கம் என்னும் ஒரே அடிமரத்திலிருந்து தழைத்த இருகிளைகள் போன்றவையே சைவ, வைணவ சமயங்கள் ஆகும்.

இவ்விரண்டு சமயங்களுக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட பொதுப் பெயர் தான் இந்து மதம் என்பது ஆகும். இந்து மதம் என்னும் பெயரை கி.பி.18ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் உள்ள இலக்கியங்களில் நாம் காண முடியாது.

தூய தோமா விதைத்த நற்செய்தியின் விளைவாக முதலில் தோன்றியது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் ஆகும். அதன் பின்னர் பக்தி இயக்கம் உருவாகி, அதன் பலனாக சைவ சமயமும், வைணவ சமயமும் உருவாகி எழுச்சி பெறலாயின.

சைவ, வைணவ சமயங்களின் அடிப்படைக் கோட்பாடுகள்

1. மூவொருமைக் கோட்பாடு
2. அவதாரக் கோட்பாடு
3. பலிநிறைவேற்றக் கோட்பாடு
4. பாவமன்னிப்புக் கோட்பாடு
5. பக்தியினால் (விசுவாசத்தினால்) மீட்புக் கோட்பாடு.

கிறிஸ்துவிற்கு முன் இந்தியாவில் இருந்த வழிபாடுகள், சமயங்கள் மற்றும் சமய இலக்கியங்களில் இக்கோட்பாடுகளை நாம் காண முடியாது.

ஆனால் கி.பி.12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சைவ சித்தாந்த முதல் சாத்திரமான திருஉந்தியாரில் இக்கோட்பாடுகளை நாம் தெளிவாகக் காணலாம்.

1. ஏகனும் ஆகி, அநேகனும் ஆனவன்... பாடல் 5.
மூவொருமைக் கோட்பாடு.

2. அகளமாய்யாரும்அறிவுஅரிதுஅப்பொருள்சகளமாய்வந்தது...பாடல்1.
அவதாரக் கோட்பாடு.

3. கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்... பாடல்3
தவத்தில் தலைவர்... பாடல்12.
பலி நிறைவேற்றக் கோட்பாடு.

4. தானாகத் தந்தது... பாடல்1
சேர வந்தவர் ... பாடல்44 நாதன் தன்செயல் தானே... பாடல் 6
பாவமன்னிப்புக் கோட்பாடு

5. மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்... பாடல் 12.
விசுவாசத்தினால் மீட்புக் கோட்பாடு.

இந்த ஐந்து கோட்பாடுகளையும் கேட்டால் பள்ளி செல்லும் ஒரு சிறுவன் கூட இவை அனைத்தும் கிறிஸ்தவக் கோட்பாடுகளே என்பதைத் தயக்கமின்றி, தாமதமின்றிக் கூறுவான்.

எனவே வரலாற்று நோக்கிலும், ஆய்வு நோக்கிலும் நாம் காணும்போது **திருஉந்தியாரின் அடிப்படை கிறிஸ்தவமே** என்பதும், **சகளமாய் வந்தவர் இயேசு கிறிஸ்துவே** என்பதும், **கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்து, மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவரும் அவரே** என்பதும், **ஏகனும் ஆகி, அநேகனும் ஆகி, நாதனும் ஆனவரும் (நமது ஆன்ம மணமகன்) அவரே** என்பதும், **தவத்தில் தலைவரும் அவரே** என்பதும், **வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும் உய்ய வந்தான் அவரே** என்பதும் மறுக்க முடியாத உண்மைகள் ஆகும்.

எனவே, (இயேசு கிறிஸ்துவாகிய) இவராலேயன்றி, வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை. திருத்தூதர் பணிகள் 4: 12.

நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே: நம் பாவங்களுக்கு மட்டும் அல்ல; அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே. 1யோவான் 2: 2

(அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய) அவர் மகனாகிய (சகளமாய் வந்த) இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும். 1யோவான் 1: 7

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு (சகளமாய் வந்த) அந்த மகனையே (கண்டத்தைக் கொண்டு கருமம் முடிக்க) அளிக்கும் அளவுக்கு (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய அப்பொருளாகிய) கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். யோவான் 3: 16

பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு. மாறாக (அகளமாய் யாவரும் அறிவு அரிதாகிய அப்பொருளாகிய)க் கடவுள் கொடுக்கும் அருட்கொடை (சகளமாய் வந்த) நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு (மூலையிலிருந்து விடுபட்டு, முற்றத்தில்) இணைந்துவாழும் நிலைவாழ்வு . உரோமையர் 6: 23

...இயேசுவே ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு, (சிலுவையில் பலியாகி இறந்த) அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர்: வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர். உரோமையர் 10: 9,10

....எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர். ஆயினும் அனைவரும் (சகளமாய் இம்மண்ணுலகில் மனிதனாகப் பிறந்து வந்த) கிறிஸ்து இயேசு (தம்முடைய கண்டத்தைக் கொண்டு) நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் (அகளமாய் யாரும் அறிவு அரிதாகிய) கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர். உரோமையர் 3: 23,24

(திருஉந்தியாரின் 45 பாடல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் **சகளமாய் வந்து, தானாகத் தந்து, தம்முடைய கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்த, தவத்தில் தலைவர் இயேசு கிறிஸ்து** அல்லாமல் வேறு யாராவது இருத்தல் கூடும் என்று ஆய்வுகளின் அடிப்படையில் தெரிவித்தால் சிந்தித்துப் பார்ப்பதற்கு உதவியாக இருக்கும்).

நூலாசிரியர் பற்றி

கடவுள் தமது சித்தத்தை நிறைவேற்ற பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு விதமான மனிதர்களையும், ஊழியங்களையும் ஏற்படுத்துகிறார். காலங்களுக்கு ஏற்ப மனிதர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், நோக்கங்கள், எல்லாமே வித்தியாசப்படுகின்றன. "கடைசிகாலங்களில்அறிவுபெருகிப் போகும்" என வேதம் தெளிவாகக் கூறுகிறது .மதங்களுக்கு அப்பாற்பட்டு ஆராய்ச்சிகள் செய்யும்பொழுது, வேதம் மட்டுமே சத்தியம் என்று நிரூபணம் ஆகிறது. இதைப்போலவே வேதத்தின் வெளிச்சத்தில் சைவ சித்தாந்த சாத்திரங்களை ஆராய்ச்சி செய்யும் பொழுது வேதத்தின் அடிப்படையிலேயே சைவம் உருவாகி உள்ளது என்பதும் தெளிவாகிறது. இந்த அரிய செயலை நிறைவேற்ற கடவுள் சகோதரனை சரியான பாதையில் வழி நடத்தி வருகிறார் என்பதை இவரைப்பற்றி அறிந்தவர்கள் கூறுவார்கள். குறை காணும் நோக்கில் வேதத்தை படித்துக் கொண்டிருந்த போது, கடந்த 1985-ஆம் ஆண்டு கடவுளின் திருவருள் சக்தியானவர் இவர் உள்ளத்தில் இடைப்பட்டதினால் இயேசுவை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அன்று முதல் வேதத்தின் வெளிச்சத்தில் அனைத்து மத நூல்களையும், ஆராய்ச்சி செய்து வருகிறார். இதனடிப்படையிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பல்வேறு வேதாகம பள்ளிகளில் வகுப்பு எடுத்த அனுபவமும் இவருக்கு உண்டு. கடந்த 11 ஆண்டுகளாக தமிழர் சமயம் என்ற ஆராய்ச்சி ஊழியத்தில் இணைந்து இறைபணி செய்து வருகிறார்

meipporul, ©: 26741526

MEIPPORUL PUBLISHERS
278, Konnur High Road, Ayanpuram, Chennai 600 023. Tel . 044 - 26743842,
E mail: tamilarsamayam2010@gmail.com Website: www.soulologyofthetamils.com